Registered as a News Paper


பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம்-15 வெள்ளி-37 12-18 நவம்பர் 2004



## சமாதானத்திற்கான சந்திப்பு

# பழத்ததில் பிழத்தது

பிரெஞ்சு -சிறிலங்கா நட்புறவுச்சங்கத்தின் இந்தவருட 'வாசிப்பு விழா' வில் மையப்பொருளாக இருக்கப்போகிறவர் ஆதர் றம்போ(Arthur Rimbaud) என்ற பிரேஞ்சுக்கவிஞராகும்.

அவரது 150 ஆவது பிறந்த நாள் நினைவையொட்டி இவ்விழா இடம்பெறுகிறது.

ஆதர் றம்போ குறுகிய காலம் வாழ்ந்தாலும் கிளர்ச்சியான வாழ்க்கையை வாழ்ந்தவர். 19 ஆம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க கவிஞர்களில் முதன்மையானவர் என்ற பாராட்டைப்பெற்றவர். வீட்டிலிருந்து 16 வயதில் ஓடிய அவர், 21 வயதில் எழுதுவதை நிறுத்தி தன் கையெழுத்துப் பிரதிகள் அனைத்தையும் எரித்துவிட்டு தனது 37 ஆவது வயதில் இறந்துபோனார். கட்டற்ற கவிதை மரபை உருவாக்கியவர்களில் ஒருவரான றம்போ, பிரேஞ்சு படிம கவிதை படைப்பாளிகளில் ஆகக்கூடிய சுய ஆக்க கர்த்தா எனக்கருதப்பட்டவர். கவிஞன் தூரநோக்குள்ளவனாக இருக்கவேண்டும் என நம்பிய அவர் தனது ஆக்கங்களை ஆழ்மனங்களில் படியும்படி உருவாக்கினார். அவரது படைப்புகளில் அதிகம் அறியப்பட்ட படைப்பாக "the drunken boat" (1871) (போதையேறிய படகு) இருக்கிறது.

1854 ஒக்ரோபர் 20 ஆம் திகதி வட பிரான்சின் உள்ள சார்லே வீல் (Charleville) இல் பிறந்த அவர் தயாரினால் கண்டிப்போடு வளர்க்கப்பட்டார். அவருக்கு 6 வயதாக இருக்கையில் தந்தை குடும்பத்தை கைவிட்டுச்சென்றுவிட்டார்.

மிகவும் புத்திசாலி மாணவராக இருந்த றம்போ, 16 வயதில் தனது முதலாவது கவிதையை வெளியிட்டபின், வீட்டைவிட்டு ஓடி பிரான்ஸ், பெல்ஜியம் நாடுகளில் அலைந்துதிரிந்தார்.

17 வயதில் தன்னைவிட மூத்த கவிஞரான போள் வேலெய்னைச் சந்தித்து இருவருமாக லண்டன்போய் வாழ்ந்தனர். பின்னர் அவரிடமிருந்து பிரிந்து தமது குடும்பத்திற்கு வந்த றம்போ . பலவருடகாலம் நாடோடியாக ஆபிரிக்கா உள்ளிட்ட பல நாடுகளிலும் அலைந்த அவர், பலமொழிகளையும் கற்றுக்கொண்டார். Illminations (1886) (ஒளியூட்டல்கள்) என்ற கவிதை தொகுப்பை எழுதிய அவர், பின் எழுதுவதைக் கைவிட்டார்.

புற்றுநோயால் பாதிக்கப்படடு வலது கால் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டதையடுத்து 1891 ஆம் ஆண்டில் மாசெய்ல்ஸ் இல் சாவடைந்தார். அவரது நினைவு தாங்கி வருகிறது கீழே உள்ள கவிதை.

## பள்ளத்தாக்கில் துயில்பவன்

*பசுமை படர்ந்த*
*பள்ளத்தாக்கு அது.*
*கர்வமான மலைகளில்*
*எழுகின்ற கதிரவன்*
*அங்கே ஒளிர்கிறான்*
*வெள்ளியாய் தகதகக்கும்*
*புற்களிடையே*
*நதியொன்று கீதமிசைக்கிறது.*
*சுடர்விட்டுக்கொண்டிருக்கிறது*
*சிறிய அந்த ஆற்றுப்படுகை.*

*வான்பரப்பின் கீழே*
*விரிந்திருந்த புல்வெளியில்*
*வாய் திறந்தபடியிருக்க*
*ஒரு இளம் வீரன்*
*துயில் கொள்கிறான்*
*தலையை ஏதும் மூடவில்லை.*
*நீலம் பாரித்து*
*தண்மையாய் தெரிந்த*
*நீர்க்கரை கீரைககள் நடுவே*
*அவன் பின்கழுத்து*
*நீராடிக்கொண்டிருக்கிறது.*
*ஒளி பாய்ந்துகொண்டிருந்த*
*பச்சைப்படுக்கையில்*
*வெளிறித்தெரிந்தான் அவன்*
*கோரைப்புற்களிடையே*
*கால்கள் நீண்டிருக்க*
*அவன் துயில்கிறான்*
*நோயுற்றபிள்ளையொன்று*
*புன்னகைப்பதாய் தெரியும்*
*புன்னகை படிந்திருக்க*
*அவன் துயில்கின்றான்*
*கதகதப்பாய்*
*அவனை அணைத்துக்கொள்*
*இயற்கைத்தாயே*
*அவன் விறைத்திருக்கிறான்.*

*நறு மணங்களால்*
*அவன் நாசியை*
*விடைக்கச் செய்யக்கூடவில்லை.*
*மார்பில்*
*கைகள் படிந்திருக்க,*
*சூரிய ஒளியில்*
*அமைதியோடு*
*அவன் தூங்குகிறான் அவனது வலது மார்பில்*
*சிவப்பாய் இரண்டு துளைகள்.*

*பிரெஞ்சில் எழுதியவர்: ஆதர் றம்போ.*
*ஆங்கிலத்தில்: விவியன் கோபின்.*
*தமிழில்: வின்சென்ற் புளொரன்ஸ்.*

# காரசாரம்

"ஆறுகப்பல் வந்தாலும் பாறு கப்பல், எங்களுக்கு அரிசிக் கப்பல் வந்தாலும் தவிட்டுக்கப்பல்" எண்டொரு பழமொழியிருக்கு. வன்னியில மழை என்னவோ இந்த வரியம் முன்னுக்கு வந்து கொட்டுது. சரி, A9 றோட்டு, முல்லை பரந்தன் றோட்டு எல்லாம் நல்ல திறமாச் செய்து போட்டாங்கள். புழுதிகுளிக் காமப் போய்வாற மாதிரி, ஆனா நகரங்களுக்கயெல்லாம், குழாய்நீர் வழங்கிறவேலை செய்யுறமெண்டு றோட்டுக்கானெல்லாம் "பைக்கோ" போட்டுக்கிண்டிக் குழாய் தாட்டுப் போட்டு, அந்தக் கிடங்குகளை ஒழுங்கா மூடாம விட்டதால இப்ப நகரமெங்கும் சேத்துமோட்டையள் எக்கச்சக்கம், எந்தக்கடை வாசல்லயும் நிக்கவோ சைக்கிள் விடவோ இடமில்லை. கிடக்கும் வரைக்கும் கிடந்து போட்டுக் கண்டாவளைப் பத்தையள வெட்டித் திருத்தி நூறு யாருக்கொரு சென்றி போட்டிருந்த பாதையளில இப்ப பத்தையள் வீதியில கவிண்டு வளருது. ஏதோ சில பாரஊர்தியள் அதுகளும் மண்தின்னியள் அதுக்காகத்தான் அந்த வீதியளுக்குள்ள போகிதுகள். அதுசரி ஐயன்குளத்தில ஒரு தேத்தண்ணிக்கடைக்காரர் சொன்னார். "எங்களுக்கு றோட்டுத்திருத்தி 'வசு'வும் விடுவமெண்டு சொல்லித்தான் நாங்கள் அங்கால வந்து வோட்டுப்போட்டநாங்கள், அதுக்குப் பிறகு வோட்டுக் கேட்டவையக் காணேல்ல" எண்டு- நான் திடுக்கிட்டுப் போனன். வோட்டுக் கேட்ட ஐயாமார் இந்த றோட்டுக்க?! ச்சா... இஞ்ச தேர்தல் நடந்ததே? அ, ஆ....எப்ப? எட ஓ நான்தான் மறந்து போனன். இப்பான் நினைவு வருது. நாங்களுந்தானே முகாமடிச்சு ஐயன் மருந்தெடுக்க ஆஸ்பத்திரிக்கு வாறது ஒரு நாள் வேலை. நடமாடும் வைத்தியசாலை எப்பவரும் என்பது நிச்சயமில்லை. போர் நடந்த போது இருந்த எந்த வசதியும் இப்ப இங்க இல்லை எண்டு சொல்லுற அளவுக்கு நிரந்தரக் குடியிருப்பாளர்கள் மாறிற்றினம். சில வேளை இதுதான் யதார்த்தமோ தெரியாது. இந்த திட்டமிடல் அபிவிருத்தி எல்லாம் கொஞ்சம் இவையளயும் திரும்பிப்பார்த்தால் ஆகாதோ. "அழுவாரும் அழுவாரும் தன்கரைச்சல் திருவன் பெண்டிலுக்கு கட்டியழ ஆளில்லயாம்."

வீதி அபிவிருத்தி அதிகார சபை என்னண்டா மைல் கணக்கில அளந்து ஒப்பந்தம் குடுத்து வீதியச் செப்பனிட விட்டதாம். இப்ப ஏனைன் றோட்டில கன இடத்துக்க சாயம் வெளுத்துப் போச்சு. அதெப்பிடி ரெண்டுபக்கமும் வயலும் வயல் சார்ந்த நிலமுமா உள்ள தரையில கிரவலப் போட்டுத் தார் ஊத்தி அதுக்கும் மேல சல்லிபரவிவிட்டா நிக்குமோ? ரெண்டு பக்கமும் தண்ணிநிண்டா வீதியிலயும் அடியில நொதிப்பு வரும். பாரவாகனங்கள் போக நசியும், பிதுங்கும். இதுகும் தெரியாமல் என்ன எஞ்சினியரிங்

## மறந்து போகக்கூடாது நினைத்துப்பார்க்க வேணும்

பாலத்தை இப்பதான் கழட்டி வேலைசெய்ய, மழை வந்துட்டுது. என்ன? போர் நடந்த தடங்களை சனமும் மறந்து போய் சமாதானத் தென்றல்ல மூழ்கியிருக்க இந்த நேரம் சந்தர்ப்பம் பார்த்து மழைவர கிளிநொச்சி, வட்டக்கச்சி றோட்டுத் தான் கதியெண்டுபோச்சு. என்னவோ கோவலன் நாடகத்தில மாதவி கோவலனட்ட உள்ளதெல்லாம் உருவிப்போட்டு கண்ணகியெட்ட அனுப்புவா (அந்தக்காலக் கோவலன் கூத்து இப்ப நாகரிகத்துக்கு ஏத்தமாரி மாத்தி வச்சிருக்கினம்) அப்ப கோவலன் ஆத்தி நாரும் கோவணமுமா ஊருக்கு வாறார். ஆத்திநார் அரையில கட்டி, அதில கோவணம், "ஆத்திநாருங் கோவணமும், ஆக்கிவிட்டாள் மாதவியாள்" எண்டு பாடிக்கொண்டு வர, தாதி பாத்திட்டு ஓடிப்போய் கண்ணகியட்ட சொல்லுவா,' போனமச்சான் திரும்பி வந்தார் கோவணத்தோட, எண்டு.

இப்ப எங்களப்பார்த்து வட்டக்கச்சி றோட்டும் இப்பிடித்தான் சொல்லியிருக்கும். ஆமி மாங்குளத்துக்க நிக்க புதுக்குடியிருப்பு எண்டும் கல்விளானெண்டும் நிர்வாகம் இருக்க, போக்குவரவுப் பாதையா இருந்த ஐயன்குளம் இப்ப பஸ்ஸக் கண்டு கனகாலம். கோட்டை கட்டியால ஒரு பஸ் தவண்டு போகுது. ஏன் இந்தப்பாதைக் கெல்லாம் பஸ்விடயில்லை எண்டா பாதை சரியில்லை. பஸ்காரர் மாட்டனெண்ணுறாங்கள். துணுக்காய் பனங்காமம் வரைக்கும் உள்ள சனத்துக்கு பஸ்ஸில்லை கல்விளான் சிவநகர்ச் சனம் பலமைல் நடந்து பஸ்பிடிக்க வேணும். வெள்ளாங்குளம் போறதுக்கு பூநகரி சுத்தித்தான் போகவேணும். கோணாவில், காந்தி கிராமம், முறிப்பு இதுகளுக்கெண்டு பஸ்ஸில்லை, கந்தபுரத்தால வாற பஸ்சும் அக்கராயன் சந்தியால முறிகண்டி வந்து திரும்புது. ஒரு புண்ணியவான் தன்ர சிற்றூர்திய அந்த வீதியில விடுறதுண்டு. இஞ்சாலயுள்ள சனத்தைப் பார்க்க மோட்டச்சயிக்கிள் பயணியள் கூடப் போறதில்லை. ரெண்டுபக்கமும் குளத்துக்க நிண்டநாங்கள். என்ன...இப்ப வெள்ளை வானுகள்ளயும் கறுத்த றோட்டுகள்ளயும் திரியேக்க உதை ஆர் நினைவு வச்சிருக்கிற. இப்ப இஞ்ச புதுசாவந்து குடியேறின சனத்துக்கு பாவம், போர் நடந்தகாலத்தில இதை விட மோசமாயிருந்த றோட்டுகளில நாங்கள் பயணஞ்செய்தது தெரியாதே. கனக்கயேன், அக்கராயன் அம்பலப் பெருமாள்,இரணைமடுவான், முள்ளியவளை, தருமபுரம் இன்னும் எவ்வளவு இடங்களில இந்த மினிவசுக்களைக் கையப்பிடிச்சு அரையளவு தண்ணியில நீந்தப்பழக்கின நாங்கள். அதுகும் ஒருகாலம். இரணைமடுக் குளக்கட்டால கரணமடிச்சு ஓடின வாகனங்கள் எத்தின. பிறகு இதே இரணைமடுவுக்க பிளேனும் இறங்கினதுதானே.

இதுதான் எங்கயெண்டாலுஞ்சரி, என்ர அம்மா சொல்லுவா, "அம்மியடியில தள்ளின சூத்தை மிளகும் கறிக்குதவும் எண்டு" அந்தமாதிரி வேண்டாமெண்டு, அல்லது அவசர மில்லையெண்டு விட்ட பாதையளையும், ஆல்பழுத்தா அங்க, அரசுபழுத்தா இஞ்சயெண்டு கவனிச்ச கிராமங்களையும்ஏன் திருத்தக்கூடாது. உண்மையில எங்களுக்கு அவசியமான தெருக்கள், ஆபத்துக்கு உதவின தெருக்கள், அடிமடிக்க கட்டிவச்சுக் காப்பாற்றின கிராமங்கள் தொடர்ச்சியா இருட்டிலதான் இருக்க வேணுமா? நகரங்களுக்கான திட்டமிடல நாலிலொருபங்கு கிராம அபிவிருத்திக்குச் செலவிடப்படவேண்டும். வெறுமனே குளங்களைத் திருத்தி வாய்க்காலமைச்சா நெல் விளையத் தான் போகுது. அந்த நெல்லைச் சந்தைப்படுத்த போக்கு வரவு முக்கியம். இண்டைக்கு மரக்கறி நசித்துப் போனதுக்கும் இதுதான் காரணம். தினசரி சந்தைக்கு மரக்கறிகொண்டு வாறதெண்டா சொந்தவாகன முள்ளவைக்குத்தான் ஏலும். மற்றவை செய்கை பண்ணுறத நிப்பாட்ட வேண்டியதுதான். நெல்விற் பனையிலயும் இவைக்கு தாமதந்தான். நகரப்பகுதி விவசாயிக்கு கிடைக்கிறதவிட போக்குவரவுச் செலவு இவையளுக்குக் கூடத்தான். என்னதான் வசதியள் இருந்தாலும், றோட்டதுளைச்சுத் துளைத்துத் தானே மண் ஆய்வு செய்தவை எனக்கு நினைவு தெரிஞ்சு புதூர்ச் சந்திக்கும் கனகராயன் குளம் போட்டுக்கும் இடையில உள்ள வீதி திருத்தின வரலாறே கிடையாது. அது இப்பவும் தன்ர குணத்தைக் காட்டிப்போட்டுது. இரணைமடுச் சந்திக்கும், முறிகண்டிக்கும் இடையிலும், கரடிப்போக்குச் சந்திக்கும் பரந்தனுக்கும் இடையிலும் பல இடங்களில றோட்டு தன்னட்ட வாரம் நசிஞ்சும் வளைஞ்சும், வழிஞ்சும் போய்க் கிடக்குது. வீதி விபத்துக்களுக்கு இதுகும் காரணந்தான். வீதிகளில பள்ளங்கிண்டினவை அதைச் சரியா மூடாமல் விட்டது சட்டப்படி பிழைதான். அதே நேரம்- சில வீதி அல்லது ஒழுங்கைகளில் இடம் பிடித்துக் காணியை பெருப்பித்துக் கற்சுவர் எழுப்பிய கனவான்கள் வெள்ளம் வடிய வேண்டிய பாதைகளையும் தடுத்து விட்டதால் ஒழுங்கைகள் வெள்ளத்தில் மிதக்கின்றன. வீதியை சரிவர அளந்து கல்லுப் போட முடியாத அளவுக்கு பிரதேச சபையிருக்குது போல நெற்செய்கைக்கு வழங்கப்பட்ட நிலங்களில் கட்டடம் கட்டுவதே தவறு. இன்னும் வடிகால் வழிகளைத் தடுப்பது அதைவிடத் தவறு என்பது அது ஒரு சட்டரீதியான தவறு என்பது எத்தனை மக்களுக்குத் தெரியும். நீர் மேவிய வீதியில் கஷ்டப்பட்டு பயணிப்பவர்களுக்கு நீரின் வடிகால்களை மறித்து வடிய வேண்டிய 'கானை' மூடி மதில் கட்டியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அறிவுப் பலமோ, பணபலமோ இல்லை. போராலும், மழையாலும், பாதிக்கப்படும் ஏழைமக்கள் தொடர்ந்து பாதிக்கப்படலாமா? ஏதோ இதுதான் தமக்கு எழுதிய விதி என்று நினைத்துக் கொண்டு நடக்கும் மக்கள் இருக்கினம். பொது உடமைகள் என்பது நம் ஒவ்வொருவருக்கும் சொந்தம்.

மாயா

# பெண்

நிலாந்தன்

சில ஆண்டுகளுக்கு முன்பு இந்தியப்பெண் எழுத்தாளர் ஒருவர் கொழும்புக்கு வந்திருந்தார். (என்னுடைய ஞாபக சக்தி சரியாயிருந்தால் அவருடைய பெயர் ஷோபா டிமொல் என்று நினைக்கிறேன்) அவரை சண்டேரைம்ஸ் பத்திரிகை பேட்டி கண்டிருந்தது. இப்பேட்டியின் ஓர் இடத்தில் அவர் சொன்னார்... "நான் ஆணின் பெண்ணையோ அல்லது பெண்ணின் பெண்ணையோ ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக




தன்னியல்பில் தானாக இருக்கும் பெண்ணையே ஏற்றுக்கொள்கிறேன்'' என்ற தொனிப்பட,

அந்த இந்தியப் பெண் எழுத்தாளர் சொன்னதை விடவும் இப்பொழுது நாலாவதாயும் ஓர் பெண் உண்டு. அதுதான் INGO க்களின் பெண். இந்த நாலாவது பெண்ணைப் பற்றியதே இன்று இப்பத்தி.

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் ஒக்ஸ்பாம் ஒரு வைபவத்தை ஒழுங்கு செய்திருந்தது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக்கொண்டு வருவதற்கான பெருமெடுப்பிலான ஒரு செயல்திட்டத்தின் தொடக்க நிகழ்வு அது. பெண் உரிமை குறித்து INGO ஒன்றின் பெருமெடுப்பிலான இந்தச் செயல்திட்டத்தைப்பற்றிக்கருத்துக் கூறுவது என்றால் முதலில் INGO க்களின் பெண் என்றால் யார் என்று பார்க்கவேண்டும். அப்படி INGOக்களின் பெண்ணை விளங்கிக் கொள்வது என்றால் அதற்கு முன்பு அந்த இந்தியப்பெண் எழுத்தாளர் சொன்ன மூன்று வகைப் பெண்களையும் விளங்கிக் கொள்ளவேண்டும்.

முதலாவது பெண் - ஆணின் பெண் அவளுக்கு ஆணைப்போன்று அவளுக்கேயான பிறப்புரிமைகள் தனிமனித உரிமைகள் கூட்டு உரிமைகள் எதுவும் கிடையாது. அப்படி ஏதும் எழுதப்பட்ட சட்டத்திலிருந்தாலும் எழுதப்படாத சட்டமாகிய கலாசாரத்தில் அவை அவளுக்கு மறுக்கப்படுகின்றன. எனவே அவள் பல சமயங்களில் கலாசாரத்தின் கைதியாகக்காணப்படுகின்றாள்.

ஒன்றில், அநேகமான முஸ்லிம் நாடுகளில் உள்ளதுபோல அவளுக்கு அடிப்படை உரிமைகள் இல்லை. அல்லது மூன்றாம் உலக நாடுகள் பலவற்றில் உள்ளதுபோல அத்தகைய உரிமைகள் அரசியல் சாசனத்தில் வழங்கப்பட்டிருந்தாலும் அது பற்றி அவளுக்கு ஏதும் தெரியாது. அல்லது அதுபற்றித்தெரிந்தாலும் அதற்காக நீதிமன்றம் சென்று வழக்காட அவளுடைய பண்பாடு இடமளிப்பதில்லை. அதாவது, அவளுடைய பண்பாடு அல்லது கலாசாரம் அவளை உரிமை மீறல்களோடு அனுசரித்துப்போகுமாறு நிர்ப்பந்திக்கிறது. அல்லது, விதியே என்று ஏற்றுக்கொள்ளுமாறு பழக்கி எடுக்கிறது.

இரண்டாவது பெண் - பெண்ணின் பெண், அந்த இந்தியப் பெண் எழுத்தாளர் இப்படிக் கூறும்போது எதைக் கருதினார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. சில சமயங்களில் அவர் பெண் விடுதலையை ஒரு பிழைப்பாக நடத்தும் பெண்ணுரிமை இயக்கங்களை கருதியிருக்கக்கூடும். இங்கே பெண் விடுதலை எனப்படுவது ஒன்றில் ஆணுக்கு எதிரானதாக ஒருவித அதிதீவிர வளர்ச்சியைப் பெறுகிறது. அல்லது மேற்கு நாடுகளில் இருப்பதை அப்படியே மூன்றாம் உலக நாடுகளில் பதிவைக்கும் ஒரு போக்காகக் காணப்படுகிறது.

கைத்தொழில் மயப்பட்ட மேற்கின் சமூகப்பொருளாதார அரசியல் பின்னணிக்குள் மேற்கினப் பெண் அடைந்திருக்கும் வளர்ச்சிகளை அப்படியே இறக்குமதிசெய்து பெருமளவு விவசாயப் பொருளாதாரத்தையுடைய மூன்றாம் உலகநாடுகளில் நடுகை செய்வது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதோடு விபரீதமான விளைவுகளைத் தரவும் வல்லது என்று வாதிடுவோர் இப்போக்கிற்கு எதிராக மூன்றாம் உலக நாடுகளிற்கான சுதேச பெண்ணியச் சிந்தனைகளை முன்வைக்கிறார்கள்.

மூன்றாவது பெண் - தன்னியல்பில் தானாயிருக்கும் பெண். இவள் தன்னை ஆணிடமும் கொடுப்ப தில்லை. அல்லது தனது மீட்சியை அரசியலாக்கும் அல்லது வியாபாரமாக்கும் எவரும் தன்னை ஒரு கருவியாகப் பாவிக்க விடுவதுமில்லை. தனது பண்பாட்டின் செழிப்பான பகுதிகளின் பிரதிநிதியாக நிமிரும் இவள் அதேசமயம் தனது சட்டப்படியான உரிமைகளுடன் தனது பண்பாடு மோதலுக்கு வரும்போதெல்லாம் விட்டுக்கொடுக்க மறுத்து உருக்கொள்பவளாகவும் காட்சி தருகிறாள். சட்டப்படியான அவளுடைய பிறப்புரிமைகளை பாதுகாக்கக்கூடிய விதத்தில் தனது பண்பாட்டை; கலாசாரத்தை புதுப்பிப்பது அவளுடைய கனவாயிருக்கும்.

இரண்டாவது பெண்ணின் அதிதீவிர அதி நவீன போக்குக்களை ஏற்றுக்கொள்ள மறுக்கும் பல மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த பெண்ணியவாதிகள் இந்த மூன்றாவது பெண்ணையே தமது இலட்சிய மாதிரியாக முன்வைத்து வருகின்றார்கள்

நான்காவது பெண் - INGO க்களின் பெண். இவள் சில சமயங்களில் முன்பு பார்த்த இரண்டாவது பெண்ணுக்கு நெருக்கமானவள் போன்று தோன்றக்கூடும்.

இவள் பூகோளமயமாதலின் ஒரு விளைவு. பூகோளமயமாதலின் பிரதான விளைவுகளில் ஒன்று மனித உரிமைகளும் பூகோளமயமாகிவருதல் என்று கூறப்படுகின்றது. பெண்ணுரிமை, சிறுவர் உரிமை போன்றவையெல்லாம் சாராம்சத்தில் மனித உரிமைகளே.

இன்று மூன்றாம் உலக நாடுகளில் நிலவும் உரிமை மீட்புப் போராட்டங்களை தடைசெய்ய அல்லது முறியடிக்க முயலும் மேற்கு நாடுகளும் அவற்றின் சேவகர்களாய் உள்ள மூன்றாம் உலக நாடுகளும் மனித உரிமைகளை ஒரு ஆயுதமாகப் பாவித்துவருகின்றன.

ஒருபுறம் பெண்ணுரிமை, பால்சமத்துவம், சிறுவர் உரிமை போன்றவை பற்றி அதிகம் அக்கறை காட்டும் இந்த மேற்கு நாடுகளும் அவற்றின் தொண்டு நிறுவனங்களும் மூன்றாம் உலக நாடுகளில் மதத்தின் பெயரால் மொழியின் பெயரால் இனத்தின் பெயரால் அல்லது வேறுஏதோ ஒன்றின் பெயரால் நசுக்கப்படும் சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளான தனிமனித உரிமைகள் கூட்டு உரிமைகள் போன்ற எதைப்பற்றியும் ஏன் பெரியளவில் கதைப்பதில்லை?

பெண் உரிமை, பால்சமத்துவம், சிறுவர் உரிமை போன்ற விவகாரங்கள் INGOக்களின் செயல்திட்டத்திற்குள் வரும்போது அவற்றுக்கு பரவலான அறிமுகமும் ஊடகக்கவனிப்பும் கிடைக்கிறது. இந்த நன்மைகளை முதலில் ஒப்புக்கொள்ள வேண்டும். அதேசமயம் தனது அடிப்படை உரிமைகளை மீட்பதற்காக போராடிக் கொண்டிருக்கும் ஓர் இனத்திற்குள் அந்த அடிப்படை உரிமைகளை பாதுகாக்க வல்ல ஒரு அரசியலைப்பற்றி எதுவும் கதையாமல் பெண்உரிமை, சிறுவர் உரிமை போன்றவற்றை மட்டும் தனித்தெடுத்து கதைக்கும் போதே பிரச்சினைவருகிறது.

பெண்உரிமை, சிறுவர் உரிமை எனப்படுவது அந்த பெண்ணும் சிறுவரும் வாழும் சமூகத்தின் ஒட்டுமொத்தமான உரிமைகளிலிருந்தும் பிரித்துப்பார்க்கப்பட முடியாதவை.

எனவே பெண் உரிமை பற்றிக் கதைக்கும் INGO க்கள் அதேசமயம் அந்த பெண்வாழும் சமூகத்தில் ஏனைய எல்லா உரிமைகளும் பாதுகாக்கப்படுவதற் கான அரசியல் சூழலை உருவாக்கவும் பாடுபட வேண்டும்.

ஆனால், இது விவகாரத்தில் பெரும்பாலான INGO க்கள் தமது செயல்திட்ட இலக்காய் இருக்கும் பயனாளிகளை அவர்கள் வாழும் சமூகத்தின் ஒட்டுமொத்த பயங்களிலிருந்தும் காயங்களிலிருந்தும் வலிகளிலிருந்தும் பிரித்துத்தனித்தெடுத்துக் கையாளும் ஒரு போக்கே பெருமளவில் காணப்படுகிறது.

இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்தே INGOக்களின் பெண்ணை, அவளுக்குப்பின்னால் இருக்கும் அரசியலை எல்லாவற்றையும் வியாக்கியானம் செய்ய வேண்டும். இதன்படி இனி ஒக்ஸ்பாம் இன் செயல் திட்டத்தைப்பார்ப்போம.

தமிழ் வீடுகளில் பெண் பெரும்பாலும் முதலாவது வகையைச்சேர்ந்தவளாகவே - ஆணின் பெண்ணாகவே காணப்படுகிறாள். குடும்பத்துள் நிகழும் வன்முறையை ஒன்றில் அவள் வன்முறையாக அடையாளம் காணவில்லை. அல்லது குடும்பம் சிதைந்துவிடக்கூடாது என்ற பண்பாட்டு அம்சத்தின் அடிப்படையில் அதோடு சேர்ந்துவாழ்கிறாள். அதாவது அவள் அதை ஒரு விதியென்று நம்புகிறாள். ஏற்றுகொள்கிறாள்.


அதை ஒரு சட்டப்பிரச்சினையாக அல்லது மனித உரிமை மீறலாக பார்ப்பது என்பது அதிகபட்சம் ஒரு மேற்கத்தேய அணுகுமுறையே. மேற்கின் மனித உரிமை கண்களால் பார்க்கும்போதே இது ஒரு விவகாரமாக அல்லது வன்முறையாக அல்லது சட்டப்பிரச்சினையாக வியாக்கியானம் பெறுகிறது.

உதாரணமாக, வேலைத்தளங்களில் பெண்கள் சேலை அணியுமாறு கேட்கப்படுகிறது. இது ஒரு எழுதப்படாத சட்டம். ஏன் என்று கேட்டால் அது பண்பாட்டின் உடுப்பு எனப்படுகிறது. சரி, அப்படியானால் ஆண்களும் வேட்டி சால்வை போன்ற பண்பாட்டு உடைகளை அணியலாம்தானே? என்று ஒரு கவிஞர் கேட்டார். வேலை செய்யும் பெண் அவளுடைய வேலைத்தளத்தில் உடுப்பு விசயத்திலேயே ஆணுக்கு நிகரற்றவளாய்ப் போனாள். பண்பாட்டை அவள் மட்டும்தான் காவ வேண்டும் என்பதே ஒரு பாரபட்சம் தானே? அது ஒரு எழுதப்படாத சட்டம் தானே?

எனவே இப்படி எழுதப்படாத சட்டங்களால் இம்சிக்கப்படும் பெண் முதலில் தனக்கு சட்டரீதியிலான பாதுகாப்பு உண்டு என்ற துணிச்சலைப் பெறவேண்டியது அவசியம். அதாவது இது ஒரு வன்முறை என்பதும் இதற்கு ஒரு சட்டத்தீர்வு உண்டு என்பதும் அவளுக்குத் தெரியவரவேண்டும். ஒக்ஸ்பாம் இன் மேற்படி செயல்திட்டம் குறைந்தபட்ச இந்த துணிச்சலை விழிப்பை கொடுத்தாலே போதும்.

குடும்பத்து வன்முறையை இல்லாது ஒழிப்பது என்பது சாராம்சத்தில் குடும்பத்தை சனநாயகமயப்படுத்துவதே. குடும்பத்தை சனநாயகமயப்படுத்துவது என்றால் அதற்கு முதலில் நாட்டை சனநாயகமயப்படுத்தவேண்டும். தமிழர்கள் தமது சனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டதாலேயே போராடப்புறப்பட்டார்கள். அவர்கள் தமது சனநாயக உரிமைகளை மீட்கும்வரை இந்தப் போராட்டமும் தொடர்ந்து இருக்கும். தமிழர்களின் முழு அளவிலான விடுதலை ஒன்றே தமிழ் வீடுகளை சனநாயகமயப்படுத்தும். ஆயின் தமிழர்கள் தமது முழுவிடுதலையை பெறும்வரையிலுமான இடைக்கால கட்டத்துள் பெண் உரிமைகள் குறித்த செயல் திட்டங்கள் எவ்வாறு அமையவேண்டும்?

நிச்சயமாக அது அவளை அவளிற்கேயான அரசியல் பின்புலத்தில் இருந்து பிடுங்கி எடுத்து தனியே குடும்பத்து வன்முறை பற்றி மட்டும் போதிப்பதாக இருக்கக்கூடாது.




மாறாக தமிழ்மக்களின் முழு விடுதலையை நோக்கி தமிழ் பெண்களை ஆற்றுப்படுத்தும் ஒரு பரந்தகன்ற பொது வேலைத்திட்டத்தின் பிரிக்கப்படவியலாத ஆனால், தனித்துவம் மிக்க ஒரு கூறாகவே இத்தகைய செயல் திட்டங்கள் முன்னெடுக்கப் படவேண்டும்.

குறிப்பாக ஒக்ஸ்பாம் தனது தனித்துவங்களை பேணியபடி இத் தடத்தில் செயற்படத்தயாராக இருக்குமாயிருந்தால் அது எல்லாத் தமிழ் வீடுகளிலும் ஒக்ஸ்பாம் என்ற பெயரை தவிர்க்கப்படவியலாததாக மாற்றும். அதோடு முக்கியமாக இந்த செயல்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பெருந்தொகைப்பணம் வீணே சுலோகங்கள் விளம்பரங்கள் பயன் பொருத்தமற்ற சந்திப்புக்கள் ஒன்று கூடல்கள் போன்றவற்றில் சிந்தப்படாது உரியவிதத்தில் பயன்படுத்தப்படுவதையும் இது உறுதிப் படுத்தும். ●

# நறுக்கென...

## கூடாரத்துக்குள் புகுந்த ஒட்டகத்துக்கு ஹெலஉறுமயவே உதாரணம்



இன்றைக்கு தென்பகுதி அரசியல் களத்தில் கோமாளித்தன அரசியலை மேற்கொள்வதில் ஹெல உறுமயவுக்கு நிகர் ஹெல உறுமயவேதான்.நாடாளுமன்றக் கதிரைக்காக ஜாதிக ஹெல உறுமயப்பிக்குகளுக்கும் அதன் தாய்க்கட்சியான சிகல உறுமயவின் திலக்கருணாரத்ன குழுவினருக்கும் இடையிலான மோதலில் பிக்குகளை பணியவைப்பதில் தோல்விகண்ட திலக்கருணாரத்ன "சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்.." இது சரியில்லை என்று தாடியைச் சொறிந்து கொண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தன்னைப் புகுத்திக் கொண்டுவிட்டார்.

'ஐயா தர்மராஜ்ஜியத்திட்டம் என்னவாச்சு' என்று திலக்கிடம் எவரும் இப்போது கேட்டால்...கர்மம்...கர்மம் என்று தலையிலடித்துக் கொள்வார். அந்த அளவுக்கு தர்மராஜ்ஜிய கோஷம் போட்ட பிக்குகள் பதவிப்பதர்களாகி விட்டார்கள்.

'பதவியே சரணம் கச்சாமி' என்பதே அவர்களின் இப்போதைய இலக்காகி விட்டது.

சரி...அடுத்த நபரைப் பார்ப்போம்... தாடிக்காரர் ஒருமாதிரி ஓடிப்போய்விட்டார். என்றால் அந்தக் கண்ணாடிக்கார பேரினவாதி ஹெல உறுமய பிக்குகள் உதைத்தாலும் ஒதுங்கத் தயாரில்லைப் போலிருக்கிறது.

நான் சொல்வது சம்பிக்க ரணவக்கவைத்தான்....

விடுதலைப்புலிகளுக்கு எதிராக வீராவேசப்பேச்சுக்களைப் பேசியவர் இப்போது பிக்குகளுக்கெதிராக பேசத்தொடங்கிவிட்டார். ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவிக்கு ஒரு பிக்குவான கொடபொல அமர கீர்த்தி தேரருக்கு எதிராக வேட்புமனு தாக்கல் செய்துவிட்டார்.

'சபாஷ் சரியான போட்டி....!'

-மற்றொரு பிக்குவான பஞ்ஞானந்த தேரர் என்பவர் தன்னை ஜாதிக ஹெல உறுமய கட்சியிலிருந்து நீக்கப்பட்டமையை எதிர்த்து அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கின் காரணமாக தர்மராஜ்ஜியம் அமைக்க புறப்பட்டோரின் மனித தர்மம் நாறத் தொடங்கியுள்ளது.

அதியுயர் பௌத்த பீடத்தவர்கள் தலையீடு செய்து ஹெல உறுமயவின் பிணக்குகளைத் தீர்க்க முயன்ற போதும் முடியாது போன நிலையில் கட்சிக்குள் பிரச்சினைகளும் பிளவுகளும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

இந்த இலட்சணத்தில் மற்றொரு ஹெல உறுமயக்காரரான உடுவே தம்மலோக தேரர் என்பவர், ஹெல உறுமயவுக்குள் பிக்குகள் அல்லாதோரின் ஆதிக்கம் அதிகரிக்க அனுமதிக்க முடியாது என்று உறுமியுள்ளார்.

இது சம்பிக்க ரணவக்க போன்ற, ஹெலஉறுமய பிக்குகளின் அரசியல்வழிகாட்டிகளுக்கு கடுப்பை ஏற்படுத்தியுள்ளதாம்.

பிக்குகளுக்கு அரசியல் இருக்கைகளை வழங்க முன்வந்ததால் தங்கள் அரசியல் இருப்பே இல்லாமல் ஆகப்போகிறது எனப்புலம்பத் தொடங்கியுள்ளனராம் சிலர்...

எல்லாமே ஒட்டகத்திற்கு கூடாரத்தினுள் குளிருக்கு ஒதுங்க இடம் கொடுத்தவனின் கதையாத்தான் இருக்கிறது.

---

## நேரடியாக செய்யாமல் மறைமுகமாக செய்வதா?



தலையையே முழுமையாக நுழைக்க வியூகம் வகுத்து வரும் வேளையில் அந்தப் பிரபலமான விடுதலைப்புலி எதிர்ப்பாளரும், இந்தியாவின் பெயர்பெற்ற 'இந்து' ஆங்கில நாளேட்டின் ஆசிரியருமான N.ராம் அவர்கள் இப்படிக்கூறிவிட்டாரே...!

கொழும்பில் காமினி திஸ்ஸநாயக்கவின் 10 ஆவது நினைவுப்பேருரையை ஆற்றிய ராம் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை இந்தியா தடை செய்துள்ளதால் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானமுயற்சிகளில் இந்தியா தலையிட முடியாது என்று தெரிவித்துள்ளமையைத்தான் கூறுகிறேன்.

-ஐயா, ஆழமாகத்தான் யோசித்திருக்கிறார்.

இலங்கையின் சமாதானமுயற்சிகள் தொடர்பான இந்திய நிலைப்பாட்டில் மாற்றமேதும் இல்லை, இலங்கை தொடர்பான இந்தியக்கொள்கைகளிலும் மாற்றம் இல்லை...வெறும் அரசியல் காரணங்களுக்காக இலங்கை விவகாரத்தில் இந்தியாவால் இந்த நிலையில் நேரடியாக தலையீடு செய்ய முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளமையானது, நுட்பமாக அவதானித்தால் வேறொரு செய்தியையும் தருவதாகவே உள்ளது.

இந்தியா நேரடியாக தலையீடு செய்யாது ஆனால் மறைமுகமாக தலையீடு செய்யலாம் என்பதே அதுவாகும்.

அதையே இலங்கை அரசு விரும்புவதாகவும் தெரிகிறது.

அப்போதுதான் இந்தியாவுக்கு வாலையும் அமெரிக்காவுக்கு தலையையும் காட்டி சமாளிக்கும் 'விலாங்கு' தந்திரோபாயத்தைக் கடைப்பிடிக்க முடியும்!

இந்திய இலங்கைப் பாதுகாப்பு உடன்பாட்டைப்பயன்படுத்தி பலாலி விமானப் படைத் தளம் விமானநிலையம் மீதான மேலாதிக்கத்தை பெறத்துடித்ததையும் இலங்கையில் விடுதலைப் புலிகளுடனான போரில் உயிரிழந்த இந்தியப் படையினருக்கு நினைவு மண்டபம்அமைக்க தூண்டிவருவதையும், சேது சமுத்திரத்திட்டத்தை அமுல் செய்ய தீவிரமாக இருப்பதையும், திருமலை துறைமுகப் பகுதிக்குள் எண்ணெய் களஞ்சியப் பாதுகாப்பு என்ற பெயரில் ஊடுருவி நிலை கொள்ள முயல்வதையும் ராஜீவ் காந்தி பெயரில் நெடுஞ்சாலை ஒன்றினை உருவாக்க நினைப்பதையும் பார்த்தால் இந்தியா மறைமுகமாக மற்றொரு ஆக்கிரமிப்பை மேற்கொள்ளும் வியூகத்தை மறைமுகமாக அமைத்து வருகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்தியாவின் இந்த ஊடுருவல்களுக்கெல்லாம் சிறிலங்கா இடம் கொடுக்குமாயின் சுப்பிரமணிய சுவாமி என்ற இந்திய அரசியல் கோமாளியின் கனவு நனவானாலும் ஆகலாம்.

அதாவது சிறிலங்காவை (தமிழீழத்தையல்ல) இந்தியா தனது மாநிலங்களில் ஒன்றாகவும் உரிமை கோரமுடியும். அந்தளவுக்கு இத்தகைய ஊடுருவல்கள் இலங்கையின் இறைமையை இழக்க வைத்துவிடும் அபாயம் உள்ளது.

பேரினவாதத் தேசியவாதிகளால் சிறிலங்காவை காப்பாற்றமுடியுமா?

சந்தேகம் தான்!

---

## நம்பிக்கையீனத்துக்குள் நம்பிக்கை... பீற்றர்சனின் முயற்சி எதுவரை...



நம்பிக்கைதான் முயற்சிக்கு முக்கியம் என்பார்கள். ஆனால் நம்பிக்கையற்ற நிலையிலும் முக்கியபணியொன்றில் துணிந்து இறங்கும் நபர் ஒருவரும் இருக்கவே செய்கிறார். அவர்தான் நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் முயற்சியில் முடிவை முன்னதாகவே கூறிவிட்டு அதில் அனுகூலம் எதுவும் ஏற்படாது என்று நம்பிக்கொண்டே அதில் இறங்க அவர் துணிந்துவிட்டார். "இலங்கையில் தடைப்பட்டுள்ள சமாதானப்பேச்சுவார்த்தை மீள ஆரம்பமாகும் என்பதற்கான எதிர்பார்ப்பு எதுவும் என்னிடம் கிடையாது" -என்று கூறும் ஜான்பீற்றர்சன் அண்மைக்கால சம்பவங்களின் அடிப்படையிலான சமிக்ஞைகளை வைத்துப்பார்க்கையில் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள வேண்டிய இரு தரப்பினரும் உடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அவரின் அவநம்பிக்கைக்கான காரணம் தான் என்ன?

ஒன்று இலங்கையரசு இன்னமும் சமாதான முயற்சிகளில் சுயமாகவும் துணிச்சலாகவும் முடிவெடுக்கும் திராணி கொண்டதாக இல்லை.

சமாதானத்தீர்வு முயற்சிகளில் இயல்பாகவே இலங்கையின் ஆட்சி அதிகார பீடத்தவர்க்கு எந்தவித விருப்பார்வமும் கிடையவே கிடையாது அப்படி புற அழுத்தங்கள் மற்றும் நெருக்கடிகளைச் சமாளிக்க சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் அமெரிக்காவின் விருப்பத்தின் பேரில் நகர்வுகளை முன்னெடுப்பதா? இந்தியாவின் ஆலோசனைப்படி நடப்பதா என்பதை இலங்கை அரசால் இப்போதைக்கு தீர்மானிக்க முடியாத நிலையே தொடர் கதையாக உள்ளது.

அப்படி ஏதாவது ஒரு நாட்டின் விருப்பார்வத்திற்கிசைய நடக்க தீர்மானித்தாலும் அதற்கு விடுதலைப்புலிகள் சம்மதிக்கப் போவதில்லை.

அவர்கள் ஏற்கெனவே பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தெளிவானதும் உறுதியானதுமான ஒரு நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தி விட்டார்கள்.

அவர்களது கோரிக்கையின் அடிப்படையில் அரசு பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்தால் அதற்கு முழுமையான ஆதரவை நல்கத்தயார் என எதிர்க்கட்சித்தலைவரும் தனது நிலைப்பாட்டை வலியுறுத்தியுள்ள நிலையில் சனாதிபதியால் மாற்று யோசனையொன்றை முன்வைக்க முடியாத சூழல் உருவாகியுள்ளது.

எனவே ஜான் பீற்றர்சன் அவர்களின் வருகையானது ஏதாவது ஒருசாத்தியமான முடிவுக்கு சனாதிபதியை வர அழுத்தம் கொடுக்குமா?- என்பதே இப்போதுள்ள கேள்வி.

இதுவே ஜான் பீற்றர்சன்னையும் குழப்பத்திலாழ்த்தியிருக்கும், அமெரிக்காவை சமாளித்து இந்தியாவை மயக்கி, உள்நாட்டில் ஜே.வி.பியை பேய்க்காட்டி தமிழ் மக்களைத் திருப்தி செய்யுமளவிற்கு நியாயபூர்வமான தீர்வொன்றை விடுதலைப்புலிகளுடன் பேசி சனாதிபதியால் வழங்கமுடியுமா?

ஜான் பீற்றர்சன்னின் நம்பிக்கையின்மை நியாயமானதாக உள்ளதல்லவா?

---

## அடிக்கடி மாறும் கொள்கைகளுக்கு புதிய முன்னுதாரணமா...?



ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் ராஜீவும் செய்துகொண்ட தமிழ் மக்களுக்கு எதிரான ஒப்பந்தத்தை அடுத்து இலங்கைக்கு வந்திறங்கிய இந்தியப்படை அமைதிகாத்தல் என்ற பெயரில் வடக்கு கிழக்கு தமிழர் தாயகப்பகுதியில் ஆக்கிரமிப்பு நடவடிக்கையொன்றை மேற்கொண்டு விடுதலைப்புலிகளின் அயுதங்களைக்களைகிறோம் என்று பிரசாரம் செய்து கொண்டு தமிழின அழிப்பு வேலைகளில் இறங்கிய அவல காலங்களை தமிழினம் என்றைக்கும் மறக்காது.

இந்த இருள் மிகுந்த இரண்டரை ஆண்டு கால அந்நிய இராணுவக் கெடுபிடிக் காலத்தில் தமிழ் மக்கள் சந்தித்த துன்பங்களும், இழப்புக்களும், அவமானங்களும் கொஞ்ச நஞ்சமல்ல...

இந்திய இராணுவத்தின் அடாவடித்தனங்களுக்கும் இந்திய அரசின் நம்பிக்கை துரோகத்திற்கும் எதிராக தற்பாதுகாப்பு-இன பாதுகாப்பு நடவடிக்கையில் இறங்க வேண்டிய அவசிய நிர்ப்பந்தம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது. இது இருதரப்பினருக்குமிடையே பாரிய யுத்தமாகி அதில் சுமார் 1700 க்கும் அதிகமான இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர்...

அது ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் சர்வாதிகார ஆட்சிக்காலம்.

அப்போது அவர் ராஜீவுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தையும், இந்தியப்படையினரை இலங்கையில் நிலைகொள்ள அனுமதித்ததையும் அப்போதைய எதிர்கட்சியும் இன்றைய ஆளும் ஐ.ம.சு. முன்னணியின் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், அதன் பங்காளியான ஜே.வி.பி. யும் அங்கீகரிக்கவில்லை என்பதுடன் இருதரப்பும் ஜே.ஆரின் நடவடிக்கையை எதிர்த்ததுடன் அதனை ஒரு தேசத்துரோக நடவடிக்கையாகவும் வர்ணித்து பெருமளவில் பிரசாரமும் செய்தனர்.

குறிப்பாக ஜே.வி.பியினர் பரந்த அளவில் தென்பகுதியில் இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு நடவடிக்கையை ஒரு பேரியக்கமாக நடத்தினர்... இந்திய விஸ்தரிப்பு வாதம் குறித்து சிங்கள மக்களிடையே பிரசாரம் செய்து இந்தியப் பொருட்களை கொள்வனவு செய்யக் கூடாது எனத்தடையும் விதித்தனர்....

அது குழப்பமும் அச்சமும் பீதியும் நிறைந்த சூழலை அப்போது தென்பகுதியில் உருவாக்கியது...

எல்லாமே வரலாற்றுப் பதிவாகிவிட்ட நிலையில் 17 வருடங்களின் பின்னர் இந்திய-ஈழப்போரில், கொல்லப்பட்ட இந்திய ஆக்கிரமிப்பு படையினரை கௌரவிக்குமுகமாக கொழும்பில் மணிமண்டபம் ஒன்றை அமைக்க சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஒரு காலத்திய ஆக்கிரமிப்பாளர்கள்.... இப்போது கௌரவிக்கப்பட வேண்டிய தேசியவீரர்களாக ஐ.ம.சு முன்னணியினரால்... குறிப்பாக சுதந்திரக் கட்சியினராலும் ஜே.வி.பியினராலும்... உணரப்பட்டுவிட்டார்களா? அல்லது அப்பட்டமான அவர்களின் சந்தர்ப்பவாதம் முன்னைய தேசியவாதத்தை தவறு என்று ஒதுக்க தூண்டிவிட்டதா?

ஜே.வி.பியினர் தமது இந்திய எதிர்ப்பு, அமெரிக்க எதிர்ப்பு, முதலாளித்துவ எதிர்ப்பு, என்ற கொள்கைகளை காலத்திற்கு ஏற்ப மாற்றி பதவிப்பதர்களாகிவிட்டார்கள் என்பதற்கு இது சரியான உதாரணமல்லவா?

இப்போது அவர்களின் தேசியவாதம் தமிழின அழிப்பு என்பதை மையமாகக் கொண்ட பேரினவாத கொள்கைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதையே இந்தியாவின் பின்னால் 'ஜால்ரா' போடும் அவர்களின் நிலை உணர்த்துவதாக புரிந்துகொள்ளவேண்டும்.

**செங்குட்டுவன்**

# சனாதிபதியின் எல்லையற்ற ஆசைகளின் நீட்சி...?

அரசியல் ஒரு சாக்கடை, அரசியல் போக்கிரிகளின் புகலிடம் என்று முன்பு கூறுவார்கள். இவ்வாறு ஏன் கூறினார்கள்? இது பொருத்தமான கூற்றாகுமா? என்பது கண்ட



அள்ளி வீசுவார்கள். தேர்தல் முடிந்ததும் போய்விடுவார்கள். கொடுத்த வாக்குறுதிகளை மறந்து விடுவார்கள். ஆண்டுகள் கடந்து மீண்டும் தேர்தல் வரும் புதிய வாக்குறுதிகளுடன் பழைய பல்லவியுடன் வருவார்கள். மக்களும் முன்னைய வாக்குறுதிகள் பற்றிக் கவலைப்படாமல் தேர்தல் ஆரவாரங்களில் இறங்கிவிடுவார்கள். இவைதான் மக்களாட்சியின் மகத்துவம் என்று காட்டுவார்கள். இதேதான் உலகெங்கும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சனநாயகமாகும்.

இந்த வழிமுறைகளையே சந்திரிகாவும் 1994 முதல் பின்பற்றி வருகின்றார். தான் சனாதிபதியாக வந்தால் நிறைவேற்று சனாதிபதி ஆட்சி முறையை மாற்றி அமைக்கப்போவதாகவும், இனப்பிரச்சினைக்கு சமாதான வழிமூலம் தீர்வு காணப்போவதாகவும் மக்களுக்கு வாக்குறுதி அளித்தார். மக்கள் சந்திரிகாவை சனாதிபதியாகத்தேர்ந்தெடுத்தனர். அவர் சனாதிபதியாகப் பதவியேற்றுப் பத்து ஆண்டுகள் முடிந்துவிட்டன. சண்டையும் முடியவில்லைச் சமாதானமும் அவரால் கொண்டு வரப்படவில்லை. நிறைவேற்று சனாதிபதி முறையை மாற்றியமைக்கத் தீர்க்கமான முடிவுகளை எடுக்காது இழுத்தடித்து வந்தார். தற்பொழுது அரசியல் சட்டச்சிக்கல் அல்லது அரசியல் யாப்புச்சிக்கல் ஏற்பட்டுள்ளது. சனாதிபதி பதவி கிடைத்ததும் அதிலே கிடைத்த அதிகார சுகம் அவரை அம்முறைமையை மாற்றிமைக்கும் எண்ணத்தைக்கை விட்டுவிடச்செய்தது. மக்கள் அதைப்பற்றிக் கேள்வி கேட்கா வண்ணம் அவர்களது கவனத்தைத்திசைதிருப்பச் சண்டையைத்தீவிரப்படுத்தினார். தமிழ் மக்களைச் சொல்லொனாத் துன்பங்களுக்கும், இடர்களுக்கும் உட்படுத்தினார். புலிகள் சமாதானத்துக்காகப் பச்சைக்கொடி காட்டி யுத்த நிறுத்தம் அறிவித்த போதும் அதனை ஏற்றுக்கொள்ளாது சண்டையைத்தொடர்ந்தார். இறுதியில் ஆனையிறவையும் இழந்தார். இவ்வாறு தான் சமாதானம் கொண்டு வருவேன் என்று கூறிய வாக்குறுதியை முற்றாக மறந்து அதற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தார்.

அதிகார வெறி, பதவி ஆசை சந்திரிகாவை அடுத்த வாக்குறுதியையும் மீறச்செய்தது. சனாதிபதி பதவி ஆறு ஆண்டுகளுக்குரியது. ஒருவர் சனாதிபதியாக இரண்டு முறை மட்டுமே பதவி வகிக்கலாம். இது சிறிலங்காவின் யாப்பில் உள்ளது. தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளது. 1994 இறுதியில் சனாதிபதி பதவியில் பதவி உறுதிமொழி எடுத்த சந்திரிகா 2000 ஆம் ஆண்டு இறுதிவரை பதவியிலிருக்கலாம் ஆனால் கட்சியினுள் தனது பிடியை மேலும் வலுவாக்கும் எண்ணத்திலும், தனக்கு எதிர்ப்புக்கள் எழாவண்ணம் தடுக்கவும் 2000 ஆம் ஆண்டு நடைபெறவேண்டிய சனாதிபதி தேர்தலை ஓராண்டு முன்கூட்டி நடத்தத்தீர்மானித்தார். அதாவது நாடாளுமன்றத் தேர்தல் நடந்த பின்னர் சனாதிபதித்தேர்தல் நடந்தால் மன்றத்தேர்தலுக்குமுன்னர். ஓராண்டுக்கு முன்னர் சனாதிபதி தேர்தலை நடத்தினார். தேர்தல் முடிந்ததும். இரண்டாவது முறை சனாதிபதியாகப்பதவியேற்பு உறுதிமொழி எடுத்துக்கொண்டார். இந்தப்பதவியேற்புத்தான் அரசியல் சட்டப்பிரச்சினை ஏற்படத் தற்பொழுது இடம் கொடுத்துள்ளது. சனாதிபதி ஒருவர் தனது முதலாவது பதவிக்காலம் முடியும் முன்னர் 2ஆவது சனாதிபதித் தேர்தலுக்குச்செல்லலாம். அத்தேர்தலில் வெற்றிபெற்றால் அவர் முதலாவது பதவிக்காலம் முழுமையும் பின்னர் இரண்டாவது பதவிக்காலம் முழுமையும் பதவியில் இருக்க முடியும். அதாவது முதல் ஆறு ஆண்டுகளும் இரண்டாவது ஆறுஆண்டுகளுமாக மொத்தம் பன்னிரண்டு ஆண்டுகள் பதவியில் இருக்கமுடியும். இதன்படி பார்த்தால் 1994 இல் முதலில் சனாதிபதியாகத்தேர்ந்தெடுக்கப்பட்ட சந்திரிகாவின் முதற் பதவிக்காலம் 2000 வரையும் இரண்டாவது பதவிக்காலம் 2001 தொடக்கம் 2006 இறுதிவரை இருக்க முடியும். ஆனால், ஒருவர் சனாதிபதியாக எப்பொழுது பதவிப்பொறுப்பு உறுதிமொழி எடுத்தாரோ அந்நாளிலிருந்து அவரது பதவிக்காலம் தொடங்குகின்றது. இதன்படி சந்திரிகா 1999 இல் தேர்தலில் வெற்றிபெற்றவுடன் இரண்டாவது பதவிக்கான பதவிப்பொறுப்பு உறுதிமொழி எடுத்துள்ளார். எனவே இவரது இரண்டாவது பதவிக்காலம் 2005 இறுதியுடன் முடிவடைகின்றது. இதே நேரம் சனாதிபதியின் பதவிக்காலம் இரு பதவிக்காலம் 12 ஆண்டுகள் என்ற வகையில் 2006 இல்தான் சனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்றும் மங்கள சமரவீர கூறிவருகின்றார். மங்கள சமரவீர அரசின் முக்கிய அமைச்சர். எனவே இவரது கூற்று அரசின் கூற்றாகவே கருதப்படும். இதை நோக்கும் பொழுது தேர்தல் ஆணையாளருக்கும் அரசுக்குமிடையே கருத்து முரண்பாடும் சட்டச்சிக்கலும் ஏற்பட்டுள்ளமை தெளிவாகின்றது. இதேநேரம் ஐக்கிய தேசியக்கட்சியும் 2005 இல் சனாதிபதித்தேர்தல் நடைபெற வேண்டும் என்று கூறிவருகின்றது. அத்துடன் அதற்குத்தயாராக ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது.

**சிலம்பு**

இரண்டாவது பதவிக்காலத்துக்கான தேர்தலில் வெற்றி பெற்றிருந்தாலும் கூட, தனது முதலாவது பதவிக்காலம் முடியும் வரை இருந்துவிட்டுப்பின்னர் பதவியேற்புச்செய்திருந்தால் சட்டச்சிக்கல் ஏற்பட்டிருக்க மாட்டாது என்பதுடன் 2006 இறுதி வரை சனாதிபதிபதவியில் இருந்திருக்கலாம். ஆனால் அரசின் கூற்றுப்படி 1999 இல் தேர்தல் முடிந்ததும் நீதித்துறையின் உயர் பதவியிலுள்ள பிரதம நீதியரசரே பதவிப்பிரமாணம் செய்து வைத்துள்ளமை இங்கே கவனிக்கத்தக்கதாகும். இந்தத்தவறான பதவியேற்புக்குச் சட்ட அறிஞர்களும் அன்று துணை போயினர் அல்லது கவனிக்காமல் செயற்பட்டனர் என்பது தெளிவாகின்றது.

இந்நிலையிலேயே சிறிலங்கா சுதந்திரக்கட்சி பலவீனமடைந்தது. முக்கியமான சிலர் கட்சியை விட்டு வெளியேறினர். அதன்பின்னர் ஐ.தே. கட்சி ஆட்சி அமைத்ததும் ஆட்சி கலைக்கப்பட்டுத்தேர்தல் நடந்ததும், ஜே.வி.பியுடன் இணைந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியமைத்ததும் பிந்திய நிகழ்வுகளாகும்.

சனாதிபதி ஆட்சிமுறையை மாற்றியமைக்கப் புறப்பட்ட சந்திரிகா முழுமையாக அதனை அனுபவித்தபின் பதவி அதிகாரம் இல்லாதவராக இருக்கமுடியாதவராக வாழ முடியாமல் உள்ளார். சிறிலங்காவின் அரசியல் யாப்பின் படி மூன்றாவது தடவை சனாதிபதியாக ஒருவர் வர முடியாமல் உள்ளது. அல்லாவிடில் அவர் தொடர்ந்தும் சனாதிபதியாக இருக்க விரும்பியிருப்பார். எனவே எப்படியும் என்ன வழிகளைக்கையாண்டும் அதிகாரத்தில் இருக்க முயற்சிக்கிறார் அவர். அதற்கு சனாதிபதி முறையை ஒழித்துவிட்டு நாடாளுமன்ற அதிகாரத்தில்பிரதமராகத் தொடர வேட்கை கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். சனாதிபதி முறையை நீக்குவதற்கு அரசியல் யாப்பில் திருத்தம் செய்ய வேண்டும். இதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறவேண்டும். அதற்குப்பின்னர் மக்கள் கருத்துக்கணிப்பு நடைபெறவேண்டும். ஆனால், நாடாளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை கிடையாத நிலையில் சனாதிபதி ஆட்சிமுறையைச்சட்டரீதியாக மாற்ற முடியாதுள்ளார். எனவே அரசியல் யாப்புக்கு மாறாக சட்ட ரீதியற்ற முறையில் சனாதிபதி முறையை நீக்க அவர் தற்பொழுது நடவடிக்கைகளை முடுக்கி விட்டுக் கொண்டிருக்கிறார். இதற்காக ஒரு மக்கள் கருத்துக் கணிப்பு தேர்தல் நடத்தப்போவதாகவும் அதில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்போவதாகவும், புதிய அரசியலமைப்பை வரையப்போவதாகவும் கூறி வருகின்றார். நாடாளுமன்று அரசியல் நிர்ணயசபையாக இயங்குமானால் அதன் தலைவராக் சபாநாயகரே இருப்பார். ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினரான லொக்கு பண்டாரா அரசியல் நிர்ணய சபையின் தலைவராக இருந்தால் இடஞ்சல்கள் அதிகம்.எனவே சபாநாயகரைப் பதவி இறக்க வேண்டும். தனது



கையாளைச் சபாநாயகராக்கவேண்டும். இவற்றைச் செயற்படுத்தக் கால அவகாசம் தேவை. சிறுபான்மை அரசைப்பெரும்பான்மை அரசாக்க உதவிய இல.தொழிலாளர் காங்கிரஸ் சபாநாயகரை வெளியேற்ற உடனடியாக ஆதரவு வழங்க மறுக்கின்றது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசை உடைத்து நான்கு உறுப்பினர்களைத் தன் வசம் எடுத்திருந்தாலும் அவர்களும் உடனடியாக இதற்கு ஆதரவு தரத் தயங்குகின்றார்கள். ஜாதிக ஹெல உறுமயவின் நிலைமையும் அவ்வாறானதே. இவர்களை எவ்வாறு வழிக்குக்கொண்டு வருவது என்பது சந்திரிகாவுக்கு நன்கு தெரியும் அதற்கு கொஞ்சம் கால அவகாசம் மட்டுமே தேவை. எனவே 2005 இறுதிவரை மட்டும் பதவி வகிக்கத் தகுதி உடைய சந்திரிகா தான் இரகசியமாக சனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் எடுத்ததாகப் புதிய கதை விடுகின்றார். இப்பதவியேற்பு நிகழ்வைப்பற்றி அப்பொழுது சந்திரிகாவின் நெருங்கிய அரசியல் விவகார அமைச்சரான ஜீ.எல். பீரிசுக்கே தெரியாது

இதேவேளை 2006 வரை பதவிக்காலத்தை நீடித்துக் கொண்டு ஏற்ற வழிகளைக்கையாண்டு முதலில் சபாநாயகரைப் பதவி இறக்குவது. பின்பு மக்கள் கருத்துக்கணிப்பை நடத்துவது சாதாரண பெரும்பான்மையுடன் புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவது. பிரதமர் பதவியை அதிகாரங்களுடன் கைப்பற்றுவது என்பது அவரது திட்டம். இவை சாத்தியமாகுமா?

2005 இல் நடைபெறவேண்டிய சனாதிபதித்தேர்தலை 2006 இல் தான் நடத்த வேண்டும் என்று கூறுவதும், 2005 இல் முடிவடையும் பதவிக்காலம் 2006 இல் தான் முடிவடையும் என்று கூறுவதும் அரசியல் யாப்பை மீறி மக்கள் கருத்துக்கணிப்பு நடத்த முனைவதும் பெரிய அரசியல் சட்டச்சிக்கலை ஏற்படுத்தப்போகின்றது.

2005 இல் சனாதிபதித்தேர்தலை நடத்தத்தேர்தல் ஆணையாளர் முற்படும் பொழுது சனாதிபதி அதைத் தடுக்க முடியுமா? அல்லது அவரே நீதிமன்றம் செல்வாரா? தேர்தல் ஆணையாளர் நீதிமன்றம் செல்வாரா? ஐக்கிய தேசியக்கட்சி நீதிமன்றம் செல்லுமா? அல்லது சாதாரண பொதுமகன் ஒருவன் நீதிமன்றம் செல்வானா? இந்நிலை முடிவுக்கு வராது விடின் நீதிமன்றம் செல்வது தவிர்க்கப்பட முடியாததாகும்.

சனாதிபதிக்கு இரண்டாவது பதவிக்குரிய பதவிப்பிரமாணத்தை நடத்தி வைத்தவர் இன்றைய பிரதம நீதியரசர் பகிரங்கப்படுத்தாமல் மூன்றாவது முறையும் பதவிப் பிரமாணம் அவர் முன் னாலேயே நடத்தப் பட்டிருக்கும் இவர் இவ்வாறு பதவிப்பிரமாணம் செய்து வைத்த நிலையில் இவைபற்றிய யாப்புச்சிக் கல் நிறைந்த வழக்கை பிரதம நீதியரசர் விசாரிக்க முடியுமா? அல்லது அவரால் நியமிக்கப்படும் நீதியரசர்கள் விசாரிக்கமுடியுமா? இவை எல்லாம் பெரிய கேள்விகளாக எழுந் துள்ளன. இடியப்பச் சிக்கல் என்று கூறுவார்கள் அதைவிட மோசமான சிக்கலுக்குள் சிறிலங்கா போய்க்கொண்டிருக்கிறது. ஒருவரின் அதிகார ஆசை பதவியின் எதிர்காலம் என்ற ஒரே காரணத்திற்காக இச்சிக்கல் தோன்றியுள்ளது.

எனவே சமாதானம் சமாதானம் என்று கூறிக்கொண்டு காலத்தைஇழுத்தடித்துக் கொண்டு தனது அரசியல் இருப்பை வலுப்படுத்துவதிலேயே சந்திரிகா முழுக்கவனமும் செலுத்தவுள்ளார். சமாதான இழுத்தடிப்பைத் தமிழ் மக்கள் எவ்வளவு காலம் பொறுத்துக் கொள்ளமுடியும். உரிமைகளற்ற நிலையில் தொடர்ந்து ஒரு இழுபறி நிலையில் தமிழ் மக்கள் வாழத்தயாரில்லை. அதேநேரம் சமாதானத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும் சிறு பொறி கூடப்போராக வெடிக்கலாம்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 12. 11 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

## இன்றைய நிலை...!

எரிமலை வெடிக்கும் வரை வெளித்தெரியாது வெடித்துவிட்டால் அதன் அகோரத்தை தாங்க முடியாது.

இலங்கையின் இன்றைய நிலைமையும் இப்படித்தான் இருக்கிறது.

பல ஆண்டுகளாக முரண்பாட்டின் பாதிப்புக் களை அனுபவிக்கும் தமிழ்மக்கள் இப்போரற்ற சூழ்நிலையிலும் எந்தவகையிலும் குறையாத புறக்கணிப்பையும் ஒடுக்குதலையும் அனுபவித்தபடியே உள்ளனர்.

பேசி பெற முடியாதவற்றை போராடிப் பெறமுடியும் என நடைமுறையில் சாத்தியப்படுத்திய தமிழ்மக்கள் இன்று ஒருவாய்ப்பாக பேச்சுமூலம் பிரச்சினைக்கு தீர்வு காண சிங்கள தேசத்துக்கு வாய்ப்பளித்து காத்திருக்கிறார்கள். ஆனால் இப்போது ஒரு போரற்ற காலம் என வரையறுக்க முடியாத ஒருசூழ்நிலையே நீடிக்கிறது.

இதனை மெய்ப்படுத்துவது போல திருகோணமலை மாவட்ட கண்காணிப்புக் குழுத்தலைவர் டாக்பின் திருமலை சென்மேரீஸ் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்த கருத்து முக்கியத்துவம் பெறுகிறது.

அதாவது "வெளிப்படையாகமோதல் இல்லாத சமாதானம் அல்ல தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்கள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்புக்கள் தீர்வுகாணும்பொழுது தான் சமாதானம் ஆரம்பமாகிறது" என தெரிவித்திருந்தார்.

உண்மையில் இன்றைய வெளிப்படையானமோதல் அற்ற இந்த காலத்தை ஒரு சமாதான காலமாக காட்டுவதில் சிங்களதேசம் விருப்புற்று செயற்படுவதோடு, இந்த யுத்தமற்றதும் அதேநேரத்தில் உண்மையான சமாதான மற்றதுமான காலத்தை தக்க வைத்துக்கொள்ள விரும்புகின்றவர்களாகவே செயற்படுகின்றனர். ஒரு நிரந்தரஅமைதியை உண்மையான சமாதானத்தின் மூலமாக தோற்றுவிக்க சிங்கள தேசத்தில் உள்ளவர்கள் விரும்பவில்லை.

போர் அரக்கனை வாஞ்சையுடன் ஆரத்தழுவ விரும்பும் இவர்களால் சமாதான தேவதையை ஆகர்சிக்கமுடியவில்லை என்பது துர்ப்பாக்கியமே.

ஆனால் வெளிப்படையாக மோதல் அற்றதான இந்த போக்கு நிரந்தர அமைதிக்கான பாதையைத் தேடாத விடுத்து வெளித்தெரியும் ஒரு மோதலை தோற்றுவிக்கும் என்பதில் எவருமே சந்தேகங் கொள்ளமுடியாது.


சுமார் நான்காண்டு கால சமாதான முயற்சியில் இன்னும் வெறும் முயற்சியாகவே காலம் நகர்வதை மக்களாலும் சகிக்க முடியவில்லை.

நிரந்தர சமாதானத்துக்கும் தீர்வுக்குமான பாதையை தடைகளற்று முன்னகர்த்தும் செயல் எண்ணம் கொண்டு செயற்பட சிங்களதேசத்தின் தலைவர்கள் தயாராக இல்லை.

சமாதான முயற்சிகளுக்கு மேலாக அரசியல் சாசன விவகாரங்களும் குறுகிய அரசியல் முதலீடுகளுக்கும் அவர்கள் முன்னுரிமையளிப்பதிலேயே முழுக்கவனமும் இருக்கிறது.

மக்களின் மறதியை நம்பி அரசியல் முதலீடுகளை செய்யும் இவர்கள் மக்கள் விழிப்படைகிறபோதும் நிலவும் யுத்தமற்ற நிலை வெளித்தெரியும் யுத்தமாக வெடிக்கிற போதும் நிச்சயம் காலத்தை உணர்வார்கள்.

# புதிய மாற்றங்களை உள்வாங்காத அணுகுமுறை



இந்தியாவின்கடைக்கண்வீச்சுக்குள் இலங்கையா, இலங்கையின் அகல கை விரிப்புக்குள் இந்தியாவா? இதுதான் இப்போது இந்தியாவினுடைய இலங்கை விவகாரம் தொடர்பாக கேட்கவேண்டியுள்ளது. இந்தியா இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரை கைப்பிடிக்கவும் மனமில்லாதா கைவிடவும் மனமில்லாது ஒரு நிலையையே பின்பற்றுகிறது.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை வெறுங்கையாகியுள்ள தமது கைக்குள் அதாவது தமது அகல விரிப்புக்குள் இந்தியாவை வீழுத்தவே முயற்சித்துவருகிறது. இந்தியாவும் இலங்கையின் இந்த தன்னீட்பு பலவீனத்தைப் பயன்படுத்தி தனது அச்சங்களுக்கு பாதுகாப்புத் தேடிக்கொள்ளமுயல்கிறது. இந்தியா எவ்வளவுதான் இலங்கை விவகாரத்தில் தமது நேரடியான தலையீடுகள் இல்லை எனக் காட்டிக் கொண்டாலும் தீவிரமடைந்துவரும் இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக இப்பொழுது ஒரு தீவிர அவதானிப்புக்குள் இலங்கையை வைத்திருக்கமுயல்கிறது.

இந்தியாவின் தற்போதைய போக்கானது நேரடியாக எந்த தலையீடுகளுமற்றதாக தென்பட்டாலும் இந்தியா இலங்கை அரசினூடாக வர்த்தக ரீதியாகவும், பாதுகாப்பு ஒப்பந்தங்கள் இராணுவ உதவிகள் மூலமான நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முயலும் போக்கினூடாக இலங்கையை அதிலும் தமிழர் விவகாரத்தை மட்டுப்படுத்திவைத்துக் கொள்ளவிரும்புவது அப்பட்டமாகவே தெரிவிக்கிறது.

அத்தோடு, மேற்குலக மயப்பட்டு மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சியை இந்தியா நேரடியாக எதிர்க்காமல் தனது இராஜதந்திர சூழ்ச்சிகளுக்கூடாக உடைத்துவிட முயல்கிறது.

இதேநேரம் இந்தியா இந்து சமுத்திர பிராந்தியத்தில் சக்தி மிக்க நாடாக தன்னை வைத்துக்கொள்ள விரும்புகிறபோதும் தனக்கருகில் உள்ளஇலங்கையின் தமிழ்மக்களின் பிரச்சினை தொடர்பான விவகாரத்தில் தனக்கிருக்கும் முன்னனுபவங்களின் அடிப்படையில் கூட இன்றைய 2004 நவீன உலக போக்கிற்கு இசைவாக ஆக்கபூர்வமாக சிந்தித்து ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியாதவாறே திணறுகின்றது.

இதனை இந்தியா மிக அண்மையில் மேற்கொண்ட பல நகர்வுகளினூடாக புரிந்துகொள்ள முடிகிறது.

இந்தியா இன்னமும் தனது பழைய அணுகுமுறையே தமிழ்மக்களின் விவகாரத்தில் கையாள்கின்றது.

புலிகள் இயக்கத்தை இந்தியா ஒரு தீண்டத்தாகாத சக்தியாக கருதும் எண்ணத்தைகைவிடும் வரைக்கும் இந்தியாவிடமிருந்து இலங்கை விவகாரத்தில் ஒரு புதிய மாற்றத்திற்குள்ளான அணுகுமுறையை எதிர்பார்க்க முடியாதுள்ளது.

ஆனால் இன்றைய போக்கின் படி இந்தியா தமிழர் விவகாரத்தில் இணைந்துக்கொள்வதா அல்லது தன்னை துண்டறுத்துக்கொள்வதா என்கிற ஒரு நிலைக்கு இந்தியாவை புலிகளின் இயக்கத்தின் அரசியல் நகர்வு ஏற்படுத்தியுள்ளது.

இதனை இந்தியா புலிகள் இயக்கம் ஆறு சுற்று சமாதான பேச்சுக்களில் கலந்துகொண்டு பேசிய போதும் புரிந்திருக்காதபோது புலிகள் இயக்கம் தமிழ் மக்களுக்கு உடனடியாக ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்ட வரைவு ஒன்றை சமர்ப்பித்த போது புரிந்து கொண்டதாகவே தெரிகிறது.

ஆனாலும் அப்பொழுதும் எதுவும் இப்போதைக்கு நடந்துவிட வாய்ப்பு இல்லை என்கிற மனநிலையிலே இருந்தது.

ஆனால் புலிகள் இயக்கம் சமாதான முயற்சியின் அடுத்த நகர்வு என்பது இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபினூடாக இருக்கும் என்பதில் காட்டும் அசாத்தியகரிசனையினையடுத்து இந்த நிலைக்கு வந்திருப்பது போல தெரிகிறது.

இதனையே புலிகள் இயக்கம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபினை சமர்ப்பித்ததன் பின்னர் தீவிரம் காட்டப்படும் இந்திய இலங்கை அரசுகளுக்கிடையிலான பாதுகாப்பு ஒப்பந்த விவகாரமும், பலாலி விமானத்தளம் தொடர்பான விவகாரமும் முன்பு இந்தியாவால் கையாளப்பட்ட ஈ.என்.டி.எல்.எப்.பையும் புலிகள் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்ட கருணாவையும் இணைத்து புதிய கட்சியை உருவாக்க பின்னணியில் செயற்படுவதும் நோக்கத்தக்கது.

அரசு- புலிகளிடையிலான அடுத்தகட்ட சமாதான பேச்சு வார்த்தை ஒன்று ஆரம்பிப்பதற்கு முன்னதாக புலிகளுக்கு எதிராக இராணுவ ரீதியில் சிறிலங்கா இராணுவ இயந்திரத்தை பலப்படுத்துவதோடு, அதன் கூடாரத்துக்குள் தனக்கெனவும் ஒரு இடத்தை வசப்படுத்திக் கொள்ளவும் விரும்புகின்ற அதேவேளை, உதிரிகளாக செயற்படும் புலிகளுக்கு எதிரான அமைப்புக்களை ஒரே அரசியல் கூட்டுக்குள் ஒருங்கிணைக்கவும் முயல்கிறது.

இங்குதான் இந்தியா தன்னை நவீன மாற்றத்துக்குள் உள்ளாக்காது தமிழர் விவகாரத்தை விரோதப் போக்கில் கையாள முயல்கிறது.

ஆனால் இந்தியாதன்னை மாற்றத்துக்குள்ளாக்க வேண்டியதொரு தருணம் இதுவாக இருக்கலாம். ஆனால் அது தமிழர் விவகாரத்தில் அதன் தற்போதையநிலையையும் அதன் பிரதான பாத்திரத்தை வகிக்கும் புலிகள் இயக்கத்தையும் கவனத்தில்கொண்டு காத்திரமான முறையில் செயற்படவேண்டியதே முக்கியம்.

இந்தியா தற்போது எடுக்கும் அணுகுமுறையானது நீண்ட கால போக்கிலல்லாது செயற்படும் போக்கையே காட்டி நிற்கிறது.

இந்தியா எவ்வாறுதான் தமிழர் விவகாரம்தொடர்பாக எதிர்திசையில் ஓட முயன்றாலும் அதன் பிரதான பாதையில் கால்பதிக்க வேண்டிய அவசியம் அதற்கிருக்கிறது என்பதை மறுக்கமுடியாது. இந்தியாவுக்கு தமிழ் மக்களின் அரசியல் ரீதியாக இலங்கையில் பாதிக்கப்பட்டதன் பின்னணி தொடர்பான போதிய அறிவு உண்டு. இந்தியாவுக்கு தமிழ் மக்களுக்கும் இடையிலான நீண்ட அரசியல் உறவும் உண்டு.

இந்தியா மீது தமிழ் மக்கள்பெரிய அளவில் நம்பிக்கை கொண்டு செயற்பட்டமையும் தெரியும்.

கடந்தகால கசப்பான சம்பவங்களை தொடர்ந்து பேணி வருவதில் எந்தநன்மையும் தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் ஏற்படப் போவதில்லையென்றவகையில் புதிய உறவுக்கான வாசலேதிறக்க வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

இதற்கான ஆக்கபூர்வமான சமிக்ஞைகளை வெளிப்படுத்த இந்தியா முன்வரவேண்டும் என்பதே தமிழ் மக்களின் பெரும் ஆவலாக இருக்கிறது. இதற்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை இன்று பிரதிநிதித்துவப்படுத்தும் புலிகள் இயக்கத்தோடு இந்தியா உறவுகளை ஏற்படுத்தவேண்டும். இதுவே தமிழ் மக்களின் அபிலாசையுமாகும்.

சிறி.இந்திரகுமார்

# சமாதான முயற்சிகள் தொடர்பாக மக்களின் பிரதிபலிப்புகள்!

சமாதான முயற்சி தொடங்கி ஆறு சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நிறைவில் இடைக்கால நிர்வாக வரைவை தமிழீழ விடுதலைப்புலிகள் அரசிடம் சமர்ப்பித்திருந்த வேளையில் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியினரும் கூட்டிணைந்து இச் சமாதான நடவடிக்கைக்கும் இடைக்கால நிர்வாக சபைக்கெதிராகவும் தீவிர எதிர்ப்பு பிரசாரத்தினை மேற்கொண்டதுடன் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐ.தே.கட்சியின் பொறுப்பில் இருந்த முக்கிய மூன்று அமைச்சுக்களை பறிமுதல் செய்ததை தொடர்ந்து சமாதான முயற்சியில் அரசு சூழ்ச்சி எண்ணம் கொண்டு செயற்படுவதாகவே மக்கள் கருது கின்றனர்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் சந்திரிகா ஜே.வி.பி. கூட்டுக்கட்சி அமைக்கப்பட்டு இன்று எட்டாவது மாதத்தை நெருங்கிக்கொண்டிருக்கும் இக்காலப்பகுதிவரை சமாதான முன்னெடுப்பு முயற்சிகள் சிறிதளவேனும் முன்னேறவில்லை.


மாறாக இராணுவ துறைசார் அபிவிருத்திகளையும், படை வலுவூட்டல் நடவடிக்கைகளையும். இந்தியாவுடன் இராணுவ ஒத்துழைப்பு உடன்படிக்கை ஏற்படுத்தல் போன்ற யுத்த முனைப்புச் செயற்பாட்டின்மூலம் தமிழ் மக்களையும், விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் பலவீனப்படுத்துவதன் மூலம் அரசு முன்வைக்கும் ஏதாவதொரு திட்டத்தை (முன்னைய தீர்வுப் பொதி போன்ற) தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டு அடிபணிய வேண்டி வரும் என செயற்படுகின்றது.

புலிகள் இயக்கம் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக சபைக்கான திட்டவரைவு ஒருபுறம் இருக்க அரசு புதிய திட்டவரைவு ஒன்றை சமர்ப்பிப்பது தொடர்பாகவும் பேசிவருகின்றது.

இது இவ்வாறிருக்க ஆட்சியில் உள்ள ஐக்கிய மக்கள சுதந்திர முன்னணி அரசு இடைக்கால நிர்வாக சபை விடுதலைப்புலிகளிடம் வழங்கப்படக்கூடாதெனவும், இறுதித்தீர்வுடனேயே இடைக்கால நிர்வாகம் பற்றி பேசப்பட வேண்டுமெனவும் கூறிவருகின்றது.

இந்நிலையில் இடைக்கால திட்டவரைவும், இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வும் ஒரே மேசையில் விவாதிக்கப்படல் வேண்டுமென அரசு கூறுவது தொடர்பாகவும் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்தி அதன் பின்னரே இறுதித்தீர்வு பற்றி பேசவேண்டுமென கூறப் படுவது தொடர்பாகவும் மக்கள் கருத்துக்களை அறிந்து கொள்ளும் முகமாக நாம் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த மக்களை சந்தித்தோம்.

## சமாதான பேச்சுவார்த்தை பயனற்றதாகிவிடக் கூடாது:



*தம்பு. கதிரமலைக் கண்ணன். கிளிநொச்சி.*

"உண்மையில் யுத்தகாலப்பகுதியில் சிதைவடைந்த எமது கட்டுமானங்களையும் மக்களின் இயல்பு வாழ்வையும் கட்டியெழுப்ப இடைக்கால நிர்வாகம் என்பது முக்கிமான ஒன்று. இதனை இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வுடன் ஒப்பிடமுடியாது; ஒப்பிடவும் கூடாது. ஏனெனில் இறுதித் தீர்வு என்ற ஒன்றை நிறுவுவதற்கு பல ஆண்டுகள் தேவைப்படலாம். அதுவரை காலமும் இந்த மக்களின் வாழ்வியல் மேம்பாடும் பொருளாதார, உட்கட்டுமான மேம்பாடும் இன்றி ஒரு சூனிய வாழ்க்கையே வாழ வேண்டி ஏற்படும். எனவே இறுதித்தீர்வையும் இடைக்கால நிர்வாக சபையையும் ஒரே மேசையில் விவாதிக்க முடியாது. அவ்வாறு விவாதித்தால் இந்த சமாதானகாலம் பயனற்ற காலமாகவே இருக்கும்."

## முரண்பாடுகளைக் கொண்ட அரசிடம் இன முரண்பாட்டிற்கு தீர்வு வராது



*முகமட். சிராஜ், நீர்கொழும்பு.*

"பாதிக்கப்பட்ட பிரதேசத்தை கட்டியெழுப்ப இடைக்கால நிர்வாகம் என்பது முக்கியம். அதை வழங்க தற்போது உள்ள அரசு முன்வரவேண்டும். ஆனால், சந்திரிகா சார்ந்த கட்சியின் அமைச்சர்கள் ஒரு கோணத்தில் கதைத்தால் ஜே.வி.பியினர் ஒரு கோணத்தில் கதைக்கின்றனர். அவர்களுக்குள்ளேயே இனப்பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பதில் முரண்பாடு.பின்னர் எவ்வாறு இன முரண்பாடு தீர்க்கப்படும். உதாரணமாக சில நாட்களுக்கு முன் அனுராதபுரத்தில் நடைபெற்ற ஆயிரம் குளங்கள் புனரமைப்பு நிகழ்வில் உரை நிகழ்த்திய ஜே.வி.பியின் அமைச்சர் அனுரதிஸநாயக்க விடுதலைப்புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் வழங்கப்படக் கூடாது என்றதொனியிலும் இனவாதத்தை ஊட்டுகின்ற வார்த்தைகளுடன் கூறினார். இவ்வாறான அரசிடமிருந்து எவ்வாறு ஒரு இன முரண்பாட்டிற்கான தீர்வைக் காணமுடியும்.

தற்போது நிலவுகிற சமாதான காலத்தை பற்றி எந்தவொரு அரசியல் சாணக்கியம் பெற்றவராலும் கருத்துக்கூறமுடியாதுள்ளது. ஏனெனில் அடுத்து சந்திரிகா என்ன செய்யப் போகிறார். ஜே.வி.பியினர் என்ன செய்ய போகிறார்கள் என்று ஊகிக்க முடியாதுள்ளது."

## அரசு திணிக்க முயலும் திட்டத்துக்கு புலிகளும்,மக்களும் இணங்க மாட்டார்கள்



*கிரிதரன், வவுனியா.*

"இடைக்கால நிர்வாகம் ஒன்றை விடுதலைப்புலிகளிடம் வழங்கினால் மக்கள் மத்தியில் இன்னும் அதிகமான செல்வாக்கை புலிகள் பெற்றுவிடுவர். அது இந்த இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வை ஏற்படுத்துவதில் அரசு திணிக்க முயலும் திட்டத்திற்கு மக்களும், விடுதலைப்புலிகளும் இணங்கமாட்டார்கள். எனவேதான் அரசு இடைக்கால நிர்வாகத்தை இறுதித்தீர்வுடனேயே கதைக்க வேண்டுமென கூறிவருகின்றது. உண்மையில் இனப்பிரச்சினையை தீர்க்க எந்தக் கட்சியும் உளப்பூர்வ விருப்பம் கொள்ளப்போவதில்லை. இப்போது இருப்பது போல் ஒரு யுத்தமுமற்ற சமாதானப் பேச்சுகளுமற்ற காலத்தையே எல்லாக்கட்சிகளும் விரும்புகின்றன. இவ்வாறான ஒரு தோற்றப்பாட்டையே தென்னிலங்கை மக்கள் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளனர். எனவே இடைக்கால நிர்வாகத்தை வழங்க அரசு முன்வராது போனால் இறுதியில் யுத்தகளத்தையே தோற்றுவிக்கும்."

## புலிகளிடம் அதிகாரம் வரும்போதுதான் மக்களின் வாழ்வு மேம்படும்



*திரு.சக்திவேல், செல்வபுரம், முல்லைத்தீவு.*

"இடைக்கால நிர்வாகசபை ஒன்று விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படுகின்ற போதுதான் எமது வாழ்வு மேம்படத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதனை இறுதித்தீர்வோடு பேசுகின்ற தென்பது முடியாத காரியம் ஏனெனில் ஒரு பேச்சுவார்த்தை ஆரம்பித்து இடைக்கால நிர்வாகசபை தொடர்பாகப் பேசக் கூட மூன்று வருடத்திற்கு மேல் [illegible]யுள்ளது என்றால், இறுதித்தீர்வு ஒன்றை எட்டுவதற்கு [illegible]ந்தனை வருடங்கள் செல்லும்? அது வரை பாதிக்கப்ப[illegible] பிரதேச அபிவிருத்தி துரித கதியில் முன்னெடுக்க [illegible]யாது தடைப்படும். எனவே இடைக்கால நிர்வாகம் எ[illegible]து முக்கியமான ஒன்று.

அடுத்து இன்றுள்ள[illegible]ங்குமார் கட்சி, ஜே.வி.பி எல்லாம் விடுதலைப்புலிகளி[illegible] இடைக்கால நிர்வாகம் வழங்கப்படக்கூடாது எனவும், [illegible]தலைப்புலிகள் ஆயுதங்களை களைய வேண்டும் [illegible]ம் கூறிவருகின்றன. இது நடைமுறைக்கு சாத்தியப்படாத ஒன்று. ஏனெனில் விடுதலைப்புலிகளின் கையில் ஆயுதம் இருப்பதால் தான் பேச்சுவார்த்தை என்ற பேச்சே எடுபடுகிறது. இல்லையேல் 1959,1983 போன்ற இனப்படுகொலைகளை செய்து தமிழினத்தை அரசு அழித்திருக்கும். அத்துடன் கடந்த பொதுத் தேர்தலில் இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட வேண்டும் எனக்கூறியே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிட்டது. இதனடிப்படையில் வட கிழக்கில் பாரிய வெற்றியும் பெற்றது. தமிழ் மக்களின் ஆசைகள் தான், இடைக்கால நிர்வாகம் இதை வழங்க அரசு பின்னடிப்பது பொருத்தமற்ற செயல்" என நாம் சந்தித்தமக்கள் தமது கருத்துக்களைத்தெரிவித்தனர்.

இன்று நிலவும் ஒரு சூனியமான காலத்தில் நம்பிக்கையற்றவர்களாகவும் அந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் அவை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் ஒரு போதும் உளப்பூர்வமாக செயற்படப்போவதில்லை என்றும் மக்கள் நம்புவதை எம்மால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இறுதித் தீர்வையும் இடைக்கால தன்னாட்சிஅதிகார சபைக்கான பேச்சுவார்த்தையினையும் மக்கள் ஒன்றாக அமைவதை விரும்பவில்லை.

இதனை அவர்கள் இடைக்கால நிர்வாகசபைக் கான பேச்சுவார்த்தையினைப்பற்றி பேசவே அரசுக்கு மூன்று வருடத்துக்கு மேல் தேவைப்படுகிறதென்றால் இறுதித் தீர்வைப் பற்றியும் பேச முயற்றால் அரசுக்கு எத்தனைகாலம் தேவைப்படும் என எங்களைத் திருப்பிக் கேட்டதிலிருந்து புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

**அருள்**

# புஷ்ஷிற்கு சார்பாக அமைந்த அமெரிக்க சனாதிபதி தேர்தல்

வில்லியம் புஷ் மீண்டும் நான்கு ஆண்டுகளுக்கு சனாதிபதி ஆகிவிட்டார். அவரை எதிர்த்து போட்டியிட்ட ஜோன் கெரியை கடுமையான போட்டியின் மத்தியில் புஷ் தோற்கடித்தாலும் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற சனாதிபதிகள் வரிசையில் அவர் அமர்த்தப்படுகின்றார். அளிக்கப்பட்ட வாக்குகளில் 50 சதவீதத்துக்கு மேற்பெற்றதனால் சில முடிவுகள் வெளிவரயிருந்தன. இது மட்டுமன்றி பெண்களின் வாக்குகள் கெரியை சென்றடையும் என்ற நம்பிக்கை வளர்ந்திருந்தது. அதனாலும் இறுதிக்கட்டத்தில் இருதலைவர்களுமே வெல்வதற்கான வாய்ப்பு உண்டு என்பதும் தகவலாக அமைந்திருந்தது.



புஷ்ஷின் வெற்றிக்கு பின்லேடனும் ஒருபக்கமான ஆதரவைக் கொடுத்தார் என்பயென்றே கூறப்படுகின்றது.


இவற்றைவிட வாக்குப் பதிவுகளை மேற்கொள்ளச் சென்ற அநேக வாக்காளர் ஏமாற்றத்துடன் திரும்பியதாக இன்னோர் தகவல் கூறுகின்றது. காரணம் அவர்களது வாக்குகள் ஏற்கனவே செலுத்தப்பட்டு விட்டதாக அறியமுடிகின்றது. இத்தகைய மோசடியானது மிக ஆபத்தான அரசியல் கலாசாரமாக விளங்குகின்றது. வாக்குகளை முன்கூட்டியே பதிவு செய்யும் பலவீனமான நாகரீகமடையாதமுறை கீழைத்தேசத்தில் என வாதிடுபவர்களாக அமெரிக்கா போன்ற மேற்கு நாட்டவர்கள் கூறுகின்றனர். தேர்தலில் எப்படி வெற்றி பெற்றது என்பதை அறிவதற்கு ஐரோப்பாவிலிருந்து, மேற்கு நாடுகளிலிருந்து குழுக்களை அனுப்பி கண்காணிப்பு செய்யவும் முயலுகின்றனர். அவர்களது அறிக்கைக்கு இருக்கும் முக்கியத்துவம் தேர்தல் காலத்தில் வேறு எந்த விடயத்திற்கும் இருக்காது. இவ்வாறு குற்றச்சாட்டுக்களையும் அதிக நெருக்கடிகளையும் கொடுக்கும் மேற்குலக அரசுகளில் முதல்த்தரநாடான அமெரிக்காவின் தேர்தல் கலாசாரம் எப்படிக்காணப்படுகின்றதென பார்த்தால் வேடிக்கையாகவும் விநோதமாகவும் உள்ளது.

ஏனைய அம்சங்

ஒரு அமெரிக்க வாக்காளர் குறிப்பிடுகிறார். நாம் எல்லோரும் கெரிக்கே வாக்களித்தோம் ஆனால், புஷ் வெற்றி பெற்றுள்ளார் என்றார். இது மிகத் தெளிவாக காட்டுவது தேர்தலைப் பற்றிய அவர்களின் மதிப்பீடு என்ன என்பதாகும்.

இவற்றை அவதானிக்கும் போது புஷ்ஷின் தேர்தல் வெற்றியில் அதிகமான சந்தேகங்கள் எழுகின்றன. ஆனால், அவரே அடுத்த நான்கு ஆண்டு கால சனாதிபதி அதில் அமெரிக்கரோ உலகத்தவரோ எந்த மாற்றமும் செய்ய முடியாது. ஆனால், புஷ் ஏற்படுத்திச் செல்லும் நடைமுறை சனநாயகத்திற்கு சவாலாகவே விளங்குகிறது. புஷ் உலகத்தை சனநாயக மயப்படுத்தலுக்கு கொண்டு செல்கிறார் என்பதென்னவோ உண்மைதான். ஆனால், அந்த சனநாயகம் யதார்த்தமான சனநாயகமல்ல. போலி சனநாயகமாகும். அவர் தனது நாட்டிலேயே சனநாயகத்தை மீறும் போது உலகத்தில் எப்படி சனநாயகத்தை அமுலாக்க முடியும்.

அமெரிக்க மக்கள் பெரும் நெருக்கடியான



சத்தையே அடுத்துவரும் நான்கு ஆண்டுகளை எதிர்நோக்கவுள்ளனர். குறிப்பாக ஈரான், சிரியா, வடகொரியா போன்ற நாட்டுத்தலைவர்களே அதிக அச்சத்துக்குள்ளாகியுள்ளனர். இவர்களது பாதுகாப்பு நாட்டின் பாதுகாப்பு என்பனவற்றுக்கு அச்சுறுத்தலும் எச்சரிக்கையும் ஆரம்பித்துவிட்டதென்றே கூறலாம். புஷ் தனது முதலாவது ஆட்சிக்காலத்தையும்

முன்பே வெற்றி புஷ்சுக்குரியதாக மாறிவிட்டது. ஆனால் புஷ் வெற்றியைப் பற்றிய விமர்சனம் அமெரிக்க சனநாயகத்திற்கு சவாலான வேட்பாளர் என்பதாகவே அமைந்திருக்கின்றது. எப்படி புஷ் வென்றார் என்பதனை பரிசீலிப்போம்.

புஷ்ஷின் வெற்றிக்கு உதவிய மிக மிக முக்கிய காரணி அவரது வெளிநாட்டு கொள்கையென்றே விமர்சகர்கள் கூறுகின்றனர். அவரது வெளிநாட்டுக் கொள்கைக்கு நிகராக கெரி செயற்படவில்லையென்பது ஒருபக்கம் விவாதிக்கப்பட, மறு பக்கத்தில் அவரது வெளிநாட்டுக் கொள்கை அமெரிக்க மக்களை கவர்ந்திருந்ததென்பதும் தெளிவான கருத்தாக உள்ளது. அமெரிக்க மக்களுக்கென்றும் உலகம் சூறையாடப்படுவதோ அழிக்கப்படுவதோ ஆபத்தானதாக தெரியப்படவில்லை. எதை புஷ் செய்தாலும் அதனை நியாயப்படுத்தினால் போதுமென்பதே அமெரிக்க மக்களின் கருத்தாகும்.

வியட்னாம் போரைப் பற்றியும் அதனை ஈராக்குடன் ஒப்பீடு செய்த விவாதத்தில் புஷ் வெற்றி பெற்றதாகவே கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்தன. காரணம் கெரி அதில் ஆர்வத்துடனும் கலந்து கொள்ளாதது மட்டுமல்ல; வியட்னாம் போன்று ஈராக்கை கையாளமுடியாதென்ற விவாதத்தை மக்கள் ஏற்றிருந்தார்கள் என்பதாகும்.

இதே போன்று ஈராக் பற்றிய விவாதத்தின் போதும் கெரியா? புஷ்ஷா? என்ற போட்டி தெரிந்தது. கெரி வென்றதாகவே கருத்துக்கணிப்புகள் கூறிதையும் குறிப்பிட்டாக வேண்டும். புஷ் என்னதான் உலகத்துக்கு ஆபாயமானவராக இருந்தாலும் அமெரிக்க மக்களை பாதுகாத்த தலைவராகவே விளங்குகின்றார். இதனால் பின்லேடனின் மிரட்டல் புஷ்ஷை அமெரிக்க மக்கள் தெரிவுசெய்வதற்கு சந்தர்ப்பத்தை கொடுத்திருந்தது.

இவ்வாறு புஷ் வெற்றி பெறுவதற்கான பக்கங்களை மதிப்பீடு செய்வதற்குமுதலில் தேர்தல் கடந்த இரண்டாம் திகதியாக இருந்தாலும் அதற்கு பதினைந்து நாட்களுக்கு முன்பே தேர்தல் பதிவுகள் தொடங்கி விட்டன. வாக்காளரின் பங்களிப்புக்காகவும், இலகுத்தன்மைக்காகவும் இவ்வாறான அணுகுமுறை பின்பற்றப்பட்டாலும் அதனால் ஆளும் குடியரசுக் கட்சிக்காரரின் பிரயோகம் அதிகமாக அமைந்திருந்ததாக தகவல்கள் கூறுகின்றன. இது வாக்கு மோசடிக்கு பெருமளவு உதவியதாகவும் இதனால் புஷ்ஷின் வெற்றிவாய்ப்பு சாதாரணமானதாகவும் அளவீடு செய்யப்படுகின்றது.

மேலும் நவீன மின்னணுச்சாதனங்கள் அதிகம் பயன்படுத்தப்பட்ட தேர்தலாக அமைந்திருந்தது. அதனால் நவீன சாதனங்கள் செயலிழந்தமையால் ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குப்பதிவு நிலையங்களில் வாக்குப்பதிவு செய்ய முடியாதிருந்ததாக முறைப்பாடுகள் தெரிவிக்கின்றன. இதில் வாக்களிப்பதற்காக காத்திருந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பியதாகவும் அதிகாரிகளோ, பார்வையாளர்களோ அதற்கு தெளிவான பதிலளிக்கவில்லைகளைப்போன்றதுதான் தேர்தலும். ஐரோப்பியருக்கு ஓர்விதிமுறை கீழைத்தேசத்தவருக்கு இன்னோர் விதிமுறையாகும். வில்லியம் புஷ் 2000 ஆம் ஆண்டுத் தேர்த

**ஐங்கரன்**

லிலும் மிகக் கீழ்த்தரமான அணுகு முறையைப்பின்பற்றியே ஆட்சியைப்பிடித்தவர். அதேபாணியில் ஆனால், 2004 இல் வாக்குகளை தமது ஆதரவாளர் மூலம் செலுத்தி ஆட்சியை பிடித்துக்கொண்டார். சண்டே ஒப்சேவர் அழகான கேலிச்சித்திரம் ஒன்றைப் பிரசுரித்திருந்தது. புஷ் 2000 இல் பின்கதவால் வெள்ளை மாளிகை செல்வதையும் 2004 இல் முன்கதவால் வெள்ளை மாளிகை செல்வதையும் காட்டும் சித்திரமாகும். இதன் அர்த்தம் இரண்டுமே ஒரேவிடயம் தான். காட்சிகள் மட்டும் மாறியுள்ளது. மக்களின் வாக்குகளை மோசடி செய்தே அவர் வென்றுள்ளார் என்பதற்கு அம்மக்களே சாட்சியாக உள்ளனர்.

குறிப்பாக அமெரிக்க நகரங்களில் கெரி வெற்றி பெற்றிருகிறார்- அதிகமான தீர்மான வாக்காளர்கள் நகரத்தவராகவும் புளோரிடா போன்ற மாநிலத்தவர்களும் இதில் நகரத்தை அண்டிய வாக்குகள் கெரிக்கு சாதகமாக அமைந்திருக்கின்றன. சில தேர்தல் மாநிலத்தில் 90% வாக்குகளையும் கெரி பெற்றிருக்கின்றார். அதனால் வாக்கு மோசடி நகரத்தைவிட ஏனைய பிரதேசங்களிலேயே அதிகம் நிகழ்ந்திருகிறது என்பது உறுதியாகிறது.

தலைவரை சந்தித்துள்ளனர். தமது வாக்குகளாலும் அசைக்க முடியாத தலைவராக புஷ் மாறிவிட்டார். உலகத்தை மட்டுமல்ல; அமெரிக்க மக்களை ஏமாற்றி ஏப்பமிடும் பக்குவத்தை பெற்றுவிட்டார். புஷ் இனி இலங்கைக்கு வரும் அமெரிக்க விசேட தூதுவர்கள் யாரும் தேர்தல் மோசடி செய்கிறார்களா என்று கேட்டால் பதில் கேள்வி 2004 அமெரிக்க சனாதிபதி தேர்தலிலேயே உண்டு என்பதை மறந்துவிட முடியாது. அந்தளவுக்கு மோசமான மோசடி அரசியல் கலாசாரத்தை அமெரிக்க ஆட்சியாளார்கள் பரப்பிவருகின்றனர்.

அமெரிக்க ஆட்சியாளரின் அரசியல் அணுகுமுறைகள் மேலும் மேலும் மோசடியாகவும் சனநாயக மீறலாகவுமே காணப்படுகிறது. ஆட்சியைஇரண்டாவது தடவைபிடிக்கும்வரை தற்காலிகமாக நிறுத்தியிருந்த தாக்குதல்கள் மீண்டும் பளுஜாவில் தொடங்கிவிட்டது. மிகமோசமான மனிதப்படு கொலையை நிகழ்த்திவரும் அமெரிக்கப் படைகளுக்கு சனா திபதி புஷ் தலைமை தாங்குவதுடன் அதனை நியாயப்படுத்தவும் முயலுகின்றார். போர் தொடங்கிய காலத்திலிருந்து லட்சக் கணக்கில் ஈராக்கியர் கொல்லப்பட்டதாக அமெரிக்க தகவல்களே உறுதிப்படுத்தியுள்ளன. உலகத்தை மிகமோசமாக மாற்றிவரும் புஷ் ஆட் சிக்காலம் அமெரிக்காவின் அடுத்த இலக்கைப்பற்றி பிரஸ்தாபிக்கும் காலமாக அமையப்போகின்றது.

உலகத் தலைவர்கள் அநேகமானவர் அதிக அச்

போர்க்கப்பல்களையும் கிழக்காசியாவிலிருந்து மேற்காசியாப்பக்கம் நகர்த்தினார். அவ்வாறே இப்போது கிழக்காசி யாவிலிருந்து படைகளை நகர்த்தத் திட்டமிடுகிறார். ஆனால், அது எந்தப் பிராந்தியத்தை நோக்கி என்பதே பிரதான கேள்வியாகும். அதுமட்டுமன்றி அவரது புதிய அமைச்சரவை அறிவிக்கப்படும் போது அவரது அடுத்த நகர்வு எப்படி அமையும் என்பதை கண்டறிந்து விடலாம்.

ஆனால் அமெரிக்காவையும் அமெரிக்க மக்களையும் பொறுத்தவரை புஷ்சினால் அவர்கள் அடைந்த நன்மையைக் காட்டிலும் ஆபத்துக்களே அதிகமாக உள்ளன. அமெரிக்காவின் தீவிரம் அமெரிக்காவை வேகமான முடிவுக்குக் கொண்டு வந்து விடும் என்பதில் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. அதனால் அமெரிக்காவின் ஆதீதமான போக்கு அரசியல் இராணுவ, பொருளாதார ரீதியான பாதிப்புக்களை தவிர்க்க முடியாது ஏற்படுத்தும். அது அமெரிக்காவின் வேகமான சரிவுக்கு உந்துசக்தியாக அமைந்துவிடும். எனவே புஷ் அமெரிக்காவுக்கும் உலகத்திற்கும் அவைகளின் சனநாயக விதிமுறைகளுக்கும் சவாலானவராக மீண்டும் தெரிவாகியுள்ளார். அவரது வருகை சனநாயகத்தின் பெயரால் சனநாயகத்தின் எதிர்மறைகளை சாத்தியப்படுத்துவதாகவே அமையும்.

# சமுர்த்தி நிதி மோசடி



முன்னாள் சமுர்த்தி விவகாரஅமைச்சர் எஸ்.பி. திசநாயக்கவுக்கு எதிராக கடுமையான நீதி மன்ற நடவடிக்கைக்கு திட்டமிடப் பட்டு வருவதனை அண்மைய செய்திகள் வெளிப்படுத்துகின்றன. அவரைக் கைதுசெய்யுமளவுக்கு நிலைமைகள் சென்றுள்ளன.

தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சி பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திசநாயக்க குற்றச்சாட்டுக்கள் பலவற்றைக் கொண்டவர் என்பதில் இரண்டு கருத்துக்கள் இல்லை. அவர்மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் பலவற்றுடன் தேர்தல் கால வன்முறைகள் தொடர்பாகவும் பல குற்றச்சாட்டுக்கள் உண்டு.

குறிப்பாக 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் நடத்தி வெற்றி கொண்டதாக பெருமைப் பட்டுக்கொள்ளும் ஆறு தேர்தல்களிலும் முறைகேடுகள் வன்முறைகள் இடம்பெற்றதை எவரும் மறுக்கமுடியாது. இந்த வன்முறைகளின் சூத்திரதாரிகள் இருவர்.

ஒருவர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சா அனுருத்த ரத்வத்த. இவர் கட்சி வெற்றிபெற வேண்டும் என்பதற்கும் மேலாகத் தனது செல்வாக்கை உயர்த்திக்காட்ட வேண்டும் என்பதில் தீவிர அக்கறை கொண்டிருந்தார்.

வடக்கிலே யுத்தத்திலும், தெற்கிலே தேர்தலிலும் அவர் காட்டிய அதிதீவிர அக்கறையின் நோக்கம் பிரதமர் பதவியை அடைதல் என்பதாக இருந்தது. வடக்கில் பாரிய யுத்தம் ஒரு புறம் நடந்துகொண்டிருக்க தெற்கில் கண்டி மாவட்டத்தில் அதி கூடிய விருப்பு வாக்குகளுடன் தெரிவுசெய்யப்படுவதற்காக தமது கட்சியின் ஏனைய வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் மீதே தாக்குதல் தொடுத்தவர். இவர் குறித்து பொது சன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர். தி.மு ஜெயரட்ண சனாதிபதி சந்திரிகாவுக்கு அடிக்கடி புகார் கொடுத்தும் எதுவும் நடந்துவிடவில்லை. ஆனால், 2001 ஆம் ஆண்டு தேர்தலில் முஸ்லிம்கள் மீது வன்முறை புரிந்ததான குற்றச்சாட்டின் கீழ் இவரும் இவரது இரு புத்திரர்களும் நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவருக்கு சற்றும் சளைக்காத வன்முறைகளில் ஈடுபட்டவர் எஸ்.பி. திசநாயக்க எனக்குற்றச்சாட்டு உண்டு.

இதேவேளை இவருக்கு 1994 ஆம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறிய போது சமுர்த்தி விவகார அமைச்சர் பதவியை வழங்கியவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அப்போது எஸ்.பி. திசநாயக்க சனாதிபதி சந்திரிகாவுக்கு மிகவும் நெருக்கமானவராகவும், சக்தி வாய்ந்த அமைச்சராகவும் விளங்கினார்.

முதலாவது பதவிக் காலத்தின் போதே இவர் மீது பல ஊழல் குற்றச்சாட்டுக்களை எதிர்க் கட்சியினர் சுமத்தி வந்தனர். அத்துடன் கட்சிக்குள்ளேயே அவர் மீதான அதிருப்தியும் இருந்தது.

இதனால் 2000 ஆம் ஆண்டு பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவியேற்றபோது எஸ்.பி. திசநாயக்கவுக்கு சந்திரிகாவால் சமுர்த்தி அமைச்சு வழங்கப்படுமா? என்ற கேள்வி எழுந்தது. ஆனால், பின்னர் சந்திரிகாவால் சமுர்த்தி அமைச்சு வழங்கப்பட்டது.

2001 ஆம் ஆண்டு எஸ்.பி.திசநாயக்க கட்சியைவிட்டு வெளியேறியதை அடுத்தே பொது சன ஐக்கிய முன்னணி அவர் மீது சமுர்த்தி நிதி மோசடி தொடர்பாக குற்றம் சுமத்தத்தொடங்கியது. 2001 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தின் போது பொதுசன ஐக்கிய முன்னணி எஸ்.பி. திசநாயக்க ஒரு பிரமாண்டமான மாளிகை அமைப்பதாகவும் அது சமுர்த்தி நிதியிலிருந்து மோசடி செய்யப்பட்ட பணத்திலிருந்து கட்டப் படுவதாகவும் பிரசாரம்செய்தது. ஒரு அடுக்குமாளிகைக் கட்டடத்தை உலங்கு வானூர்தியிலிருந்து எடுத்த படத்தையும் பிரசுரித்து இது தான் எஸ்.பி. திசநாயக்கவின் "சமுர்த்தி மகால்" என்றும் கூறியது.

அவ்வாறாயின் எஸ்.பி.திசநாயக்க ஊழல் புரிந்தார் என்பதை முன்னரே தெளிவாக பொ.ஐ.மு அறிந்திருந்தது வெளிப்படையானதாகும். ஏனெனில் அந்தமாளிகையை எஸ்.பி.திசநாயக்க பொ.ஐ.முவிலிருந்து வெளியேறிய பின் கட்டியிருக்கமுடியாது. எனவே அவர் அவ்வாறான ஒரு மாளிகையை ஒருசில வருடங்களுக்கு முன்பே கட்ட ஆரம்பித்தபோது அதற்கு நிதி எங்கிருந்து கிடைத்தது? என பொ.ஐ.மு. அரசாங்கம் ஆராயத் தவறியதேன்?

எனவே தமது கட்சியிலிருக்கும் வரை கட்சி தேர்தலில் வெற்றிபெற வன்முறை அடி தடியில் ஈடுபடுவோர் தேவை என்பதற்காகவே எஸ்.பி. திசநாயக்க மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப் படவில்லை என்பது தெரிகிறது.

இதேவேளை தன்னைக் கைதுசெய்து சிறையிலடைத்தால் சந்திரிகாவின் சரித்திரத்தை எழுதிக் கொண்டுதான் வெளியேவருவேன். என எஸ்.பி திசநாயக்க மிரட்டல் பாணியிலான ஒரு அறிக்கைய்ய வெளியிட்டிருந்தார்.

இது சனாதிபதி சந்திரிகாவை அச்சுறுத்தி எஸ்.பி.திசநாயக்க மீதான நடவடிக்கையைத் தணிக்குமா? என்பது தெரியவில்லை. ஆனால், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஆட்சி ஏற்றபோது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எஸ்.பி.திசாநாயக்கவை சமுர்த்தி அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்துவைக்க பெரும் இழுத்தடிப்புச்செய்தார். இப்பொழுது அவர்மீது நீதிமன்ற நடவடிக்கை முடுக்கப்பட்டுள்ளது.

இதன் முடிவு எவ்வாறு அமையுமென்பது தெரியாது.

எவ்வாறாயினும் ஏழை மக்களின் மேம்பாட்டுக்கென்று கூறி ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி நிதியத்திலிருந்து ஏழைகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதி சுரண்டப்பட்டுள்ளது என்பது மட்டும் உண்மை.

**வேலவன்**

---


## நேர்நோக்கு

# வரட்சிப்பனையால் விழுந்தவனை வெள்ள(ம்) மாடேறி மிதித்தது...

கடந்த மாதத்திற்கு முன்னர் இலங்கைத்தீவு முழுவதையும் வரட்சி போட்டுத் தாக்கியது. மக்கள் குடிநீருக்கு பெரிதும் அல்லலுற்றனர். பல கிலோ மீற்றர் வரை குடிநீருக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது. சுத்தமற்ற நீர்ப்பயனபாட்டினால் நோய்த்தாக்கமும் ஏற்பட்டது. சில தொண்டு நிறுவனங்கள் நீர்த்தாங்கிகளின் உதவியுடன் குடிநீர் பிரச்சினையை ஓரளவு நிவர்த்தி செய்து வந்தது. ஆனால், விவசாயிகளின் நிலைமை பரிதாபமானது. பல ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் எரிந்து விளை பருவத்திற்கு முன்னரே கருகிப்போனது. இதனால் விவசாயிகள் பாரிய நட்டமடைந்தனர். முதலை இழந்தனர். சிலர் நீர்ப்பம்பிகளின் உதவியுடன் நீர்ப்பாசனம் செய்தனர். ஆனாலும் எதிர்பார்த்த பயன் இல்லை. இவர்களுக்கு இழப்பீடுகளும் இல்லை.

இவ்வாறான நிலையில்தான் இலங்கை அரசினால் வட கிழக்கில் உள்ள மாவட்டங்களும் வரட்சித்தாக்கத்திற்கு உட்பட்ட மாவட்டமாக அறிவிக்கப்பட்டது. அத்துடன் நிற்கவில்லை. வரட்சி நிவாரணப் பதிவுகளும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்டன. அதுவும் சும்மா இல்லை. கிழமையில் இரண்டு சிரமதானம், நாளாந்தம் காலை சிரமதானம். சிரமதானம் செய்து கோடை வெயில் போட்டுத்தாக்க பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இன்று வரை வரட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை.

ஆனால், வரட்சித் தாக்கம் ஏற்பட்டு ஒரு சில நாட்களில் தென்பகுதியில் வரட்சி நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. உதாரணமாக அனுராதபுரப் பகுதியில் ஜே.வி.பியினர் வரட்சி நிவாரணம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு வரட்சி நிவாரணத்திற்கு பல கோடி ரூபாய்கள் திறைசேரியால் ஒதுக்கப்பெற்றுள்ளதாக கூறினார்கள், அத்துடன் எதிர்க்கட்சியினரின் கடந்தகால செயற்பாடுகள் பற்றி போட்டுத்தாக்கி விட்டுப் போனார்கள், அதேமாவட்டத்தில் பிறிதொரு நகரில் அரசசார்பற்ற நிறுவனம் வழங்கிய வரட்சி நிவாரண விநியோக நிகழ்வில் கலந்து கொண்ட ரணில்விக்கிரமசிங்க "எனது அரசாக இருந்திருந்தால் இன்னும் கூடுதலாக திறைசேரி நிதி ஒதுக்கீடு செய்திருப்பேன்" என்று கூறி அரசை போட்டுத் தாக்கினார்.



வரட்சி



வெள்ளப் பெருக்கு

வட கிழக்கு பகுதியில் வரட்சிதாக்கப் பட்ட மாவட்டங்களுக்கு குறிப்பாக இலங்கையிலேயே கடும்வரட்சி மாவட்டமான மன்னார் உட்பட இதுவரை வரட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் கடந்த வாரம் தமிழீழப்பகுதியை கடும் மழை வெள்ளம் போட்டுத் தாக்கியுள்ளது. பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகள் கோவில்கள், பொது மண்டபங்களில் தங்கியிருந்தனர், பலரின் வீடுகள் இடிந்து போயுள்ளன. வீட்டுவளர்ப்புப் பிராணிகள் நீருடன் அடித்துச் செல்லப் பட்டுள்ளன. பொது இடங்களில் தஞ்சமடைந்த மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் அதன் பங்காளி நிறுவனங்களும் சமைத்த உணவுகளை வழங்கின.

இப்போது வெள்ள நிவாரணப்பதிவு நடைபெறுகிறது. ஏற்கனவே வரட்சி நிவாரணம் பதிந்து வைத்த உணவுப்பங்கீட்டட்டை மறுபடியும் வெள்ள நிவாரணப் பதிவுக்கு மக்களால் தேடப்படுகிறது.

"பதிவு எல்லாம் நல்லாத்தான் நடைபெறும். வெள்ளம் போட்டா இரத்தினபுரியில போடோணும், வரட்சியெண்டா அனுராதபுரத்தை தாக்கோணும்" என்று சினத்துக் கொள்கிறார் ஒரு வயோதிபர்.

அது சரி வெள்ளத்தால் இடம் பெயர்ந்து பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ள, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணப் பதிவு மேற்கொள்ளப்படுகிறது. ஏற்கனவே வரட்சி போட்டுத்தாக்கி விளைதறுவாயில் பயிர்கள் எரிந்து போக 1400-1500 ரூபாவிற்கு ஒரு மூடை நெல்லை கொள்வனவு செய்து. விதைத்து அதை வெள்ளம் போட்டுத் தாக்கி அழித்துத் தற்போது நிர்க்கதி நிலையில் இருக்கும் விவசாயிகளுக்கு பதிவுகள் ஒன்றும் செய்யப்படவில்லையே!

சிலவேளை விவசாயிகளின் நேரம் அநியாயமாகப் போகக்கூடாது எனும் நல்ல சிந்தனையாய் கூட இருக்கலாம்.

இந்த வெள்ளத்தால் வயல் அழிவுகள் மாத்திரமன்று பல வர்த்தக நிலையங்களும் இடிந்து விழுந்துள்ளன. இதனால் பல வர்த்தகர்களின் பொருட்களும் நாசமாகியது. பாடசாலைகளிலும் கூட வெள்ளம் புகுந்து வகுப்புக்கள் நடாத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க சில பகுதிகளுக்கான போக்குவரத்துக்கள் முற்றாக துண்டிக் கப்பட்டிருந்தன. சிறிய படகுகளை பயன் படுத்தி போக்குவரவை மேற்கொள்ள நேர்ந்தது. இந்த மழை வெள்ளத்தால் பல வீதிகள் குன்றும் குழியுமாகப்போயுள்ளன. வன்னிப்பகுதியின் வீதிகள் ஏற்கனவே பாரிய கிடங்குகளைக் கொண்டது. தற்போது பெய்த மழை வெள்ளத்தால் வீதிகள் மேலும் மோசமடைந்துள்ளன. பேருந்து ஓட்டங்கள்கூட தடைப்பட்டுள்ளன. இது இவ்வாறிருக்க இலங்கையை வரும் மாத நடுப்பகுதிக்குள் சூறாவளி போட்டுத்தாக்கவுள்ளதாக வளிமண்டல திணைக்களம் கூறியுள்ளதும் கவனத்தில் கொள்ள வேண்டியது. இவ்வாறு தொடர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும். நெற்பயிர்கள் அழிந்து நிர்க்கதி நிலையில் உள்ள விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கி இவர்களின் வாழ்வியல் மேம்பாடடைய வழி சமைக்க வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டுள்ளது.

**அ. பிரகாஷ்**




# பிணம் தின்னும் கழுகுகளின் குறைவால் சுற்றுச் சூழல் மாசடைகின்றது

தற்போது பிணம் தின்னும் கழுகுகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகின்றது என தெரியவந்துள்ளது. பிணம் தின்னும் கழுகுகளினால் மனித இனத்திற்கு நேரடிப்பயன் இல்லாவிடினும், சுற்றுச்சூழல் தொடர்பில், உணவுச் சங்கிலியில் இவை முக்கிய இடத்தை வகிக்கின்றன.



பரந்த நிலப்பரப்பில் எல்லா உயிரினங்களும் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக விளங்குகின்றன. ஒரு குறிப்பிட்ட உயிரினத்தின் எண்ணிக்கை கூடினாலும் குறைந்தாலும் தொடர் விளைவுகள் ஏற்படுகின்றன.

ஆசிய நாடுகளில் குறிப்பாக இந்தியா, பர்மா, பாகிஸ்தான் முதலிய நாடுகளில் இவை அதிக அளவில் காணப்பட்டன.

'டைக்ளோபெனக்' எனும் மருந்துப்பொருளே பிணம் தின்னும் கழுகுகளின் அழிவுக்குக் காரணமாக உள்ளது. டைக்ளோபெனக் எனும் மருந்து கால்நடைகளின் மருந்துகளில் சேர்க்கப்படுகின்றன. இந்த டைக்ளோபெனக் செலுத்தப்படும் கால்நடைகளின் உடலில் இந்த மருந்துப்பொருளின் தன்மை முற்றிலும் தங்கிவிடுகின்றது. இந்த மருந்துப்பொருளின் படிமங்கள் அவற்றின் உடலில் நிரந்தரமாகத்தங்கிவிடுகின்றன. கால்நடைகளின் இறப்பிற்குப் பின்னரும் இந்த மருந்தின்தன்மை எந்தவடிவத்திலும் குறைந்துவிடாமல் அவற்றின் உடலில் இருக்கின்றது. இக்கால்நடைகளின் இறந்த உடல்களைத் தின்னும் பிணம் தின்னும் கழுகளின் உடலில் டைக்ளோபெனக் செல்கின்றது. இதனால் இந்தக்கழுகுகளின் சிறுநீரகங்கள் பாதிப்படைகின்றன.

டைக்ளோபெனக்கைப் போன்று ஓவரான் மருந்துகளும் கழுகுகளின் சிறுநீரக இழப்பிற்கு முக்கிய காரணமாக உள்ளன. இந்தச் சிறுநீரகப் பாதிப்பு கழுகுகளின் உயிரையே பறித்து விடுகின்றது.

இவ்வாறு உணவுச் சங்கிலியில் கழுகுகளின் எண்ணிக்கை திடீரென குறைவதால் பாதிப்புகள் ஏற்படுகின்றன. சுற்றுச்சூழல் மாசுபாடு அடைகின்றது.

# இந்தோனேசியாவில் காடுகளை எரிப்பதால் நமது நாட்டில் உயிரின சுவாசத்திற்கு ஆபத்து

## விஞ்ஞானிகளின் புதிய கண்டுபிடிப்பு

இந்தோனேஷியாவில் காடுகளை எரிப்பதே நமது நாட்டின் காற்று மாசுபாட்டுக்குக் காரணம் என்ற புதிய காரணத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தோனேஷியாவில் தானே காடுகள் எரிகின்றன எப்படி நம் நாடு இந்த அளவுக்கு பாதிப்படைகிறது என்ற கேள்வி எழலாம்? பருவக்காற்று நம் நாட்டை நோக்கி வீசுவதால் புகை மண்டலம் நம்நாட்டை சூழ்கின்றது. எனவேதான் பருவக்காற்று வீசும் காலங்களில் மாசுபாட்டின் அளவும் அதிகரிக்கின்றது.

உலகம் முழுவதிலும் 20 நாடுகளில்தான் வெப்பமண்டலக் காடுகள் உள்ளன. இவை அனைத்திலும் பாதிக்குமேல் இந்தோனேஷியா, பிரேசில், ஜயர் ஆகிய நாடுகளில் உள்ளன. உலகின் செழுமைமிக்க உயிரினப்பகுதியாக இந்தோனேஷியாக் காடுகள் உள்ளன.

உயிரின சுவாசத்திற்கு உரிய ஆகாயப்பகுதி, மற்றும் காற்றில் மனிதனுக்கும் மற்றய உயிர்களின் சூழலுக்கும் தீமை பயக்கும் பொருட்கள் கலந்திடும் நிலையை காற்று மாசுபாடு என உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது.

இந்தோனேஷியக்காடுகள் எரிவதால் இந்தியாவிலும் காற்று மாசுபாடு அதிகமாகின்றது. புகை மண்டலம் என்பதும் காற்றில் மாசுபாட்டைத்தான் குறிக்கின்றது.

இந்தோனேஷியக்காடுகள் எரிவதால் புகைமண்டலத்தின் அளவு அதிகமாகிக்கொண்டே போகின்றது.

புகைமண்டலம் சூழ்ந்திருக்கும்போது மனிதர்கள், விலங்குகள் பார்க்கும் தூரத்தின் அளவு குறைந்துவிடுகின்றது. இதனால் சாலையில் விபத்துகள் அதிகமாக நடப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. நோய் எதிர்ப்புச்சக்தி குறைவாக உள்ள பெரியவர்கள், குழந்தைகளிடையே ஆஸ்துமா, சளித் தொல்லைகள், இருமல் போன்றவற்றை ஏற்படுத்தும். நீண்ட நாட்களுக்குத் தூய்மைக்கேடான காற்றைச் சுவாசிப்பவர்கள் ஆரோக்கியமானவர்களின் சுகாதாரமும் கெட ஆரம்பிக்கும்.

**அருவி**






# வயிற்றோட்ட நோயை குணப்படுத்த...

வயிற்றோட்டம் எந்த வயதினருக்கும் பொதுவானதாயினும் குழந்தைகளைப்பீடிப்பது அதிகம். குழந்தைகளுக்கு இந்நோய் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன் சிலதருணங்களில் மரணத்திற்கும் இட்டுச்செல்லலாம்.

வயிற்றோட்டத்தின் போது மலத்துடன் அதிக அளவு நீரும் சில ஜீவ உப்புக்களும் வெளியேறுகின்றன. வாயினால் உள்ளெடுக்கும் நீரைவிட அதிகளவு நீர் மலத்துடன் வெளியேறும்போது உடலில் நீர் வரட்சியடைந்து ஆபத்தான நீரிழப்பு நிலை (DEHYDRATION) ஏற்படுகிறது. இந்த நீரிழப்பு நிலை ஏற்படாமல் தடுப்பதே இந்நோய்க்கான சிகிச்சை, பராமரிப்பு ஆகியவற்றின் முக்கிய அம்சமாகும்.

இந்நோயைக் குணமாக்க நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை (உதாரணம்:- பக்ட்ரிம், அம்பிசிலின்) உபயோகிப்பது அவசியமற்றது. ஏனெனில் வயிற்றோட்டம் பெரும்பாலும் வைரஸ் கிருமிகளாலேயே உண்டாகிறது. வைரஸ் கிருமிகளை அழிக்க நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள் உதவாது. ஆனால், இந்நோய்கள் தாமாகவே சில நாட்களில் குணமாகிவிடும். (உதாரணம்:- சின்ன முத்து, கூவைக்கட்டு).

வயிற்றோட்டம் ஆரம்பித்ததுமே, நீரிழப்பு நிலை ஏற்படாமல் தடுக்குமுகமாகப் போதிய நீராகாரம் கொடுக்கவேண்டும். தாய்ப்பாலூட்டும் குழந்தைகளுக்கு அதனை தொடர்ந்து கொடுக்கவேண்டும். எக்காரணம் கொண்டும் தாய்ப்பாலை நிறுத்தக்கூடாது. புட்டிப்பால் கொடுப்பவர்களும் அதனைத்தொடர்ந்தும் கொடுத்து வரலாம். ஆயினும் அப்பாலின் அடர்த்தியைக் குறைப்பது நல்லது. அதேயளவு பால்மாவை இருமடங்கு நீரில் கரைத்துக்கொடுக்கலாம். இதன்மூலம் மேலதிக நீரையும் போதுமான போஷாக்கையும் கொடுக்கமுடியும்.

இதைத்தவிர வேறுசில பானங்களையும் கூடக் கொடுக்கலாம். நெல்லுப்பொரித்தண்ணீர், இளநீர், சாயம் குறைந்த தேனீர் ஆகியவற்றைக்கொடுக்கலாம். அத்துடன் வீட்டில் வடித்த கஞ்சிக்குச் சிறிது உப்புப் போட்டுக் கொடுக்கலாம். தேசிக்காய்த்தண்ணீருக்குச் சிறிதளவு சீனியும் உப்பும் கலந்துகொடுக்கலாம். இடையிடையே வெறும் கொதித்து ஆறிய நீரையும் பருக்கலாம்.

மீளநீரூட்டும் பானம் (**Oral Rehydration Solution-ORS**) கொடுப்பது மிகவும் சிறந்தது. இது ஜீவனி 'ரீஹைட்ரின்' (**Rehydrin**) ஆகிய பெயர்களில் மருந்துக் கடைகளில் கிடைக்கும். ஒரு பைக்கற் **ORS** பவுடரை ஒரு லீற்றர் கொதித்து ஆறிய நீரில் ஒரே முறையில் கரைத்துச் சுத்தமான, மூடிய பாத்திரத்தில் வைக்க வேண்டும். இதனை அடிக்கடி குழந்தைகளுக்கு பருக்க வேண்டும். ஒரு முறை கரைத்த **ORS** பானத்தை 24 மணி நேரத்திற்குள் உபயோகிக்கவேண்டும்.

சில நேரங்களில் ஜீவனி 'ரீஹைட்ரின்' போன்றவற்றிற்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. ஆனால், அதனையிட்டுக்கவலைப்படவேண்டியதில்லை. நீங்களே அதனை வீட்டில் தயாரிக்கலாம். 2 மேசைக்கரண்டி சீனி அல்லது குளுக்கோசுடன் 1/4 தேக்கரண்டி கறியுப்பும், 1/4 தேக்கரண்டி சமையல் சோடாவையும், ஒரு லீற்றர் நீரில் கரைத்தால் **ORS** தயாராகிவிடும். ஒரு லீற்றர் என்பது 2 1/2 யானைச்சோடாப்போத்தல், அல்லது 1 1/3 சாராயப்போத்தல் அளவு நீருக்குச்சமமாகும்.

பிஸ்க்கற், றஸ்க், பாண், இடியப்பம், இட்லி போன்ற மென்மையான ஆகாரங்களையும் கொடுக்கலாம். வயிற்றோட்டம் குணமானதும் இழந்த சக்தியை ஈடுசெய்ய மேலதிக உணவுகளைக் கொடுக்கவேண்டும். கப்பல் வாழைப்பழத்திற்கு மலத்தை இறுகச் செய்யும் தன்மை இருப்பதால் அதனைக் கொடுப்பது நல்லது.

# பல்தேர்வு பாடநூலில் பலியாகிப் போகும் தனித்துவங்கள்

## சென்றவாரத் தொடர்ச்சி...

உலகமயமாக்கல் கருத்துருவாக்கத்தினை உள்வாங்கிய கல்வித்திட்டத்தை மூன்றாம் உலகநாடுகளில் அறிமுகம் செய்யமுனையும் முதலாளிய சக்திகள், உலக வங்கி போன்ற பன்னாட்டு நிறுவனங்களூடாக நடைமுறைப்படுத்துகின்றன. மூன்றாம் உலக நாடுகளின் கல்வித்துறைக்கு பெருமளவு வாரி வழங்கும் வள்ளலாக திகழும் உலகவங்கி, முதலாளிய நாடுகளின் நோக்கினை நிறைவு செய்யும் கல்விக்கொள்கைகளை இந்நாடுகளில் செயற்படுத்திவருகின்றன.

இந்நாடுகள் தனது கல்விக் கொள்கைகளை ஏற்று, செயற்படுத்தச் செய்வதற்கு உலகவங்கி பலநுட்பமான உத்திகளைக் கைக்கொள்கின்றன. இதில் ஒன்று கல்விச்சுற்றுலாவாகும்.

அதாவது தனது கல்வித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி அபிவிருத்தியடைந்த நாடுகள் எனக் கூறி குறிப்பிட்ட சில நாடுகளுக்கு தனது செலவில் அந்தந்த நாடுகளின் கல்வி அமைச்சக அதிகாரிகளை சுற்றுலாவாக அழைத்துச்சென்று காண்பிக்கின்றது. அந்நாடுகளின் குறிப்பிட்ட (தெரிவுசெய்யப்பட்ட) இடங்களையே காண்பிப்பதிலும் கவனமாக செயல்படுகின்றது.

சுற்றுலா செல்லும் அமைச்சக அதிகாரிகளின் குழுவினருக்கு காண்பிக்கப்படும் இடங்கள் சுவர்க்கபுரியாகத் தென்பட அதில் மனதை பறிகொடுத்துவிடுகின்றனர். உலக வங்கி முன்மொழிந்துதரும் கல்வித்திட்டத்தை நடைமுறைப்படுத்தி தமது நாட்டை சுவர்க்க புரியாக மாற்றிவிடும் கனவில், அத்திட்டத்தை அங்கீகரித்து, ஏற்று, துதிபாடவும் செயற்படுத்தவும் தொடங்கிவிடுகின்றனர். பின்னடிக்கும் நாடுகளையும் நிதியுதவி நிறுத்தப்படும் என்ற எச்சரிக்கை அறிவிப்பை விடுப்பதன்மூலம் உலக வங்கி மசிய வைத்துவிடும்.

இதே பாணியில்தான் இலங்கையிலும் உயர் பாடநூல் நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தமுன், கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவை, உலக வங்கி தன்செலவில் பல்தேர்வு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் தாய்லாந்து பாங்கொக்கிற்கு சுற்றுலாவாக அழைத்துச்சென்றுகாண்பித்தது. இதிலுள்ள சுவாரஷ்யம் என்னவென்றால் அழைத்துச்செல்லப்பட்ட இக்குழுவினருக்கு பாங்கொக்கில் தெரிவுசெய்யப்பட்ட பிரபல கல்லூரிகளை மட்டும் காண்பித்தனரே தவிர, வேறு இடங்களை பார்க்க அவர்கள் அனுமதிக்கப்படவே இல்லை. பொறுமையை இழந்த அமைச்சக அதிகாரி ஒருவர் தாய்லாந்தின் கிராமப்புறப் பாடசாலையையும் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தபோது, அவரது வேண்டுகோள் பயண இறுதிவரை ஏற்கப்படவுமில்லை; கிராமப்புற பாடசாலைகளுக்கு அழைத்துச்செல்லப்படவுமில்லை.

மாலை வேளைகளில் நகர்ப்புறங்களில் உலாவிய போது தான் கண்ட காட்சிகளும் அந்நாட்டு தனி நபர்களுடன் கலந்துரையாடிய போதும், தாய்லாந்தில் விபச்சாரமும் சிறுவர் துஷ் பிரயோகமும் மலிந்திருப்பதையும் வறுமை தாண்டவமாடுவதையும் தான் அறிந்து கொண்டதாகவும் சுற்றுலா சென்ற அந்த அதிகாரி பிற்காலத்தில் நொந்து கொண்டாராம்.


இவ்வாறானால் உலக வங்கியின் கல்வித்திட்ட அறுவடைகளில் இவைகளும் அடங்குகின்றனவா? அல்லது அபிவிருத்தி என்பதே எட்டவில்லையா? என வினாக்கள் பல எழுவதை தடுக்கமுடியாதல்லவா!

தாய்லாந்தில் இன்றும் அந்நாட்டின் (முடியாட்சி முடிந்துவிட்ட போதும்) கௌரவப் பிரஜைகளாக இருக்கும் அரச குடும்பத்தின் இளவரசர்களும் இளவரசிகளும் கல்வி பயின்ற கல்லூரிகளின் வசதி வாய்ப்புக்களைப் பார்த்து வியப்பும் பூரிப்பும் அடைந்தனர் இலங்கைக் குழுவினர். மன்னர் குடும்பம் கல்வி பயிலும் கல்லூரி என்றால் அது எத்தகைய வசதிகளையுடைதாக இருந்திருக்கும் என்பது




எவருக்கும் சொல்லாமலே புரியும். இத்தகைய வசதியான கல்லூரிகளையும் மாநகரங்களையும் காண்பித்த உலகவங்கி அமைச்சக அதிகாரிகள் குழுவை தம்வசப்படுத்துவதில் வெற்றிகண்டது.

இலங்கை அமைச்சக அதிகாரிகள் குழுவினர் 'பாங்கொக்'கை விட்டுவர மனமின்றியே புறப்பட்டு வந்ததாகவும் தகவல். இதனை அதிகாரி ஒருவரின் கூற்றே பறைசாற்றுகிறது. அதாவது இச் சுவர்க்க புரியை (பாங்கொக்) விட்டு போகவே மனமில்லை என்று வாய் விட்டே கூறிவிட்டாராம் அந்த அதிகாரி. அந்தளவுக்கு இலங்கை குழுவினர் பாங்கொக் கல்விச் சுற்றுப் பயணத்தில் சொக்கிப்போயினர்.




இலங்கை திரும்பியதும் இக் குழுவினர் உலகவங்கி முன்மொழிந்த ஆலோசனைக்கமைய கல்வித்திட்டத்தை திட்டமிடவும் அதற்கான புதிய பாடநூல்களை ஆக்கும் முயற்சியில் களமிறங்கினர்.

இதற்கமைய நீர்,வீடு, உணவு, சக்தியும் தொடர்பாடலும், பயணமும் போக்குவரத்தும் என ஐந்து கருப்பொருட்கள் கொடுக்கப்பட்டு, ஒரு பாடத்திற்கு ஒன்றிற்கு மேற்பட்ட நூல்கள் ஆக்கும் வேலையை தனியாரிடம் கொடுக்கப்பட்டது. தனியாரினால் தமிழ் மொழியும் இலக்கியமும் என்ற பாடத்திற்கு பல நூல்கள் எழுதப்பட்டன. அவற்றுள் மூன்று நூல்களை அமைச்சக அதிகாரிகள் ஆராய்ந்து அங்கீகரித்துள்ளனர். தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்திற்குப் பொதுவான ஆசிரியர் கை நூலும் அங்கீகரிக்கப்பட்ட மூன்று தமிழ் மொழியும் இலக்கியமும் பாடநூல்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு ஆசிரியர் கை நூலும் தயாரிக்கப்பட்டு பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மாணவர்கள் தமது தராதரம், கற்றல் வேகம், ஆற்றல், விருப்பம் என்பவற்றிற்கமைய பாடநூலை தெரிவுசெய்து கற்பதற்கு இப் பல்தேர்வு பாடநூல் வகை செய்கின்றது எனவும் இதனால் மாணவர்கள் தமது அடைவுமட்டத்தை உயர்த்திச் செல்லமுடியும் எனவும் புகழாரங்கள் இத்திட்டத்திற்கு சூட்டப்படுகின்றன.

இப்பல்தேர்வுப் பாடநூல் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் நடைமுறை சிக்கல்கள் நிறையவே உண்டு. அதுவே தமிழர் தேசிய பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படாத இன்றைய நிலையில் இடப்பெயர்வுகளால் இந்நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தலில் சிக்கல்களையே எதிர்கொள்ளும். அத்துடன் இப்பாடநூல்களில் குறைபாடுகளும் இல்லாமல் இல்லை.

இவ்விடயங்களை விரிவாக ஆராய்வது இப்பத்தியின் நோக்கமல்ல என்பதால் விட்டுவிடுவோம்.

இவற்றினைவிட நம் முன்னுள்ள முக்கியமான விவகாரம் தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பல்தேர்வுப் பாடநூலின் உள்ளடக்கமேயாகும்.

சர்வதேச முதலாளியம் தமது உலகமயமாக்கல் கருத்துருவாக்கத்திற்கு எதிர்ப்புத் தெரி விக்கும் விமர்சகர்கள் மீது சேறு பூசும் வேலையை நாசூக்காக செய்யும் அதேநேரம் உலகில் தமக்கு எதிரான எழுச்சிகள் எதுவும் ஏற்படாதவண்ணம் பார்த்துக்கொள்ள தமது

**தருமை வதனன்**

தகவல் தொடர்புத் தொழில்நுட்ப சாதனங்களினூடாக மக்களது கவனத்தை வேறு திசைக்கு திருப்பி விடும் பணியை முடுக்கிவிட்டுள்ளது.

இணையத்தளங்களில் ஒளிபரப்பப்படும் ஆபாசப்படங்கள், வன்முறை சார்ந்த படங்கள் என்பவற்றை இவற்றிற்கு எடுத்துக்காட்டுக்களாக குறிப்பிடலாம். உலக மயமாக்கலிற்கு எதிரான சக்திகள் ஒன்றிணைந்து எழுச்சியடையாமல் தடுப்பதிலும் மக்களை உலக போகங்களில் மூழ்கிக்கிடக்க செய்வதிலும் ஆதிக்கசக்திகள் பெரும் பிரயத்தனம் எடுத்து வருகின்றன.


உலகின் மூலை முடுக்கெங்கும் தனது உற்பத்திச்சரக்குகளுக்கான சந்தையை திறக்கவும் அப்பொருட்களை நுகர்ந்து போதைப் பொருள் பாவித்தவனைப் போல அதிலேயே மோகித்து கிடக்கும் நுகர்வுப்பட்டாளத்தை உலகம் முழுவதும் உருவாக்கி விடவுமாக தயாரிக்கப்பட்ட கல்வித்திட்டங்களை மூன்றாம்மண்டல நாடுகளின் தலையில் எப்படியும் கட்டி விடும் பணியை முதலாளித்துவ நாடுகள் தொடங்கி விட்டன. இதற்கு துணையாக தகவல் தொடர்புத் தொழில்நுட்ப சாதனங்களின் வாயிலாக உலக மயமாக்கல் கருத்துருவாக்கம் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல மக்கள் மண்டைகளுக்குள் புகுத்தப்படுகின்றன.

உலக மயமாக்கலை மையமாகக் கொண்ட பொருண்மியசார், தகவல் தொழில் நுட்ப அம்சங்களும் முதன்மைப்படுத்தப்பட்டு தேசிய தனித்துவங்களை மிகமிக குறைத்தும் சில இடங்களில் முற்றாக புறந்தள்ளியும் தரப்படும் கல்விக்கொள்கை திட்டங்களை தனது அகப்புற சூழ்நிலைகளின் மத்தியில் மூன்றாம் மண்டல நாடுகளின் தேசிய இனங்கள் எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றன என்பதே இன்றுள்ள முக்கிய வினாவாகும். அதற்குள் கரைந்துவிடப்போகின்றனவா? அல்லது வடிகட்டலை மேற்கொண்டு தேவையானவை உள்வாங்கியும் அல்லாதன தள்ளியும் தற்காத்துக்கொள்ளப்போகின்றனவா? அதிலும் தேசிய தனித்துவங்களை பாதுகாக்கவும் அதனை மீட்டெடுக்கவும் போராடும் தேசிய இனங்களுக்கு இவ்வி வகாரம் பெருஞ்சவாலாகவே விளங்குகின்றது. இவ்வகையில் தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டத்தில் தமிழ்த் தேசிய தனித்துவங்களை பாதுகாக்கவேண்டிய பெருங்கடப்பாடு எமக்குண்டு. சுயநிர்ணய உரிமைக்கு இத்தனித்துவங்கள் அவசியமானவையல்லவா?

இந்நிலையில் தமிழ்மொழியின் பழைமையையும் அதன் சிறப்புக்களையும் பழந்தமிழ் இலக்கியங்களையும் இலக்கிய நிகழ்ச்சிகள், இலக்கிய வரலாற்று செய்திகள் என்பவற்றை வருங்கால சந்ததியினருக்கு வழங்கவேண்டிய பணி முக்கியமானது. தமிழின் தொன்மை, இலக்கண செம்மை, இலக்கிய செழுமைகளை இன்றைய சந்ததியினருக்கு உணர்த்தி, மொழிப்பற்றுடையவராக, அதனூடே நாட்டுப்பற்றுடையவராக அவர்களை வளர்த்தெடுக்கவேண்டிய தலையாய கடமை உண்டன்றோ.

ஆனால், பல்தேர்வு பாடநூலாக வெளியிடப்பட்டுள்ள தரம்-6 தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடநூலில் தமிழ் மொழியின் இலக்கிய செழுமைகளை வெளிப்படுத்தக்கூடிய பாடங்கள் எத்தனை உண்டு? புக்கையில் போடப்பட்ட பயறு போல ஒன்றிரண்டு அம்சங்கள் தலைகாட்டுகின்றன அவ்வளவு தான். ஏனையவை பொருண்மிய, தகவல் தொடர்பு நுட்பசார் அம்சங்களே. தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடநூலையே விழுங்கி விட்டன. தமிழின் இலக்கண, இலக்கிய செழுமைகளை அறியவாய்ப்பேதும் தரப்படாத நிலையில் இந்நூலை கற்போர் மனதில் தமிழ்மொழியுணர்ச்சியோ, அழகியல் நயப்போ ஏற்படா வெறுமனே பொருண்மியம் பற்றிய கருவூலமே புகுந்து கற்போனை உலகமயமாக்கலின் நிரந்தர அடிமைக்குணத்தையே வளர்க்கும் தன்மையுடையதாக விளங்குகிறது. ஆங்காங்கே காணப்படும் தலைப்புக்களிடையே செருகலாயுள்ள பாடல்வரிகளும் வலிந்து சேர்க்கப்பட்டவையாகவும் நயமின்றியும் காணப்படுவதை அவதானிக்கலாம்.

(தொடர்ச்சி மறுவாரம்)



## மண்ணின் மைந்தர்களின் கதை

# இலட்சியப் பற்றில் தளராத பூங்குழலி

வன்னிமண்ணை எதிரி கைப்பற்றிவிடலாம் என்ற முழு நம்பிக்கையுடன் எதிரி தனது தாக்குதலை தொடங்கியிருந்த காலப் பகுதி. எம்மை வென்றுவிடலாம் என்று எதிரியும், எதிரியை தோற்கடித்து விடலாம் என்று நாமும் சமர்க்களத்தில் எரிமலைகளுக்குள் போராடிய காலப்பகுதியது. புளியங்குளம் என்பதை புரட்சிக் குளமாக்கிட புலிப்போராளிகள் செய்த தியாக, அர்ப்பணிப்புகளை, சிந்திய இரத்தத்தை என்றும் மறந்துவிட முடியாது.

போராளிகளின் வியர்வையும், இரத்தமுமே புளியங்குளத்தில் எதிரியை கொன்றொழித்து புரட்சிக்குளமாக்கியது. ஒவ்வொரு போராளியினதும் உயரிய உழைப்பே நாம் எதிரியை வெற்றி கொள்ள காரணமாயிருந்தது. அந்த வகையில் வீரவேங்கை கப்டன் பூங்குழலியை, அவளது தியாகத்தை, ஆழமான அர்ப்பணிப்பை நினைத்துப்பார்க்கிறோம்.

வீரவேங்கை கப்டன் பூங்குழலியை ஜெயசிக்குறுகாலப் பகுதியிலேயே முதன் முதலாக சந்திக்கமுடிந்தது. போர் நடந்து கொண்டிருந்த காலப்பகுதியது. காலை 08மணியிருக்கும். வானியந்திரக்கழுகுகள் வட்டமிட்ட

**— க. மிரேசு —**

வண்ணமிருந்தன. எறிகணைகள் தூவலாக விழுந்துகொண்டிருக்கையில், சிலபோராளிகள் ஏதோவொரு பணிக்காக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களது உடைகளும் சற்று வித்தியாசமாகவே இருந்தன. விக்டர் கவச எதிர்ப்புப் பிரிவின் மகளிர் குழு ஒன்று சுபாசினி தலைமையில் ஓடிக் கொண்டிருக்கையில்;அதில் ஒரு போராளியாக பெரியதொரு மருத்துவப்பையுடன் கப்டன் பூங்குழலியும் ஓடிக்கொண்டிருந்தாள்.


அந்தச்சிறிய போராளியைவிட பெரியதொரு மருத்துவப்பை அவளுடைய முதுகில் தொங்கியது. அவளது வேகத்தையும் அவதானித்தவாறே ஓடியதையும் பார்த்தால் அவள் நல்லதொரு செயற்பாடுடையவள் என்பது தெரியும். நாம் அன்று நினைத்தது போலவே அந்தச்சிறிய போராளி தனது வரலாற்று இலட்சியப்பயணத்தில் பல சாதனைகளை, தியாகங்களை, அர்ப்பணிப்புகளை செய்து இறுதிவரையும் உறுதியாக நின்று போராடினாள். ஜெயசிக்குறு எதிர்நடவடிக்கையின் காலப்பகுதியில்; கப்டன் பூங்குழலி மருத்துவப்போராளியாக மட்டுமல்ல, களத்தில் என்னென்ன பணிகள் இருக்கின்றனவோ அவையனைத்தையும் செய்வாள். அவள் ஒரு சிறந்த விவேகி, சிறந்த எழுத்தாளர் என்பதையும் என்றுமே மறக்கமுடியாது.

ஜெயசிக்குறு காலப் பகுதியில், இடர்நிறைந்த களங்களில் அவளது சாதனைகளை, சண்டையை போராளிகள் சொல்லி பெருமையுடன் கதைப்பதுண்டு. பூங்குழலிஅக்கா எப்படி சண்டை பிடித்தாள் தெரியுமா? சண்டை பிடித்துக்கொண்டே அவள் எவ்வளவு வேகமாக செயற்பட்டு, காயப்பட்டவரை காப்பாற்றினாள் என்று மெய்சிலிர்க்கும் அவளின் சாதனைகளை போராளிகள் சொல்வதுண்டு.

எதிரிகள் நகர்ந்து பழைய வாடிச்சந்திப்பகுதியில் ஓர் நாள் எதிரி ஊடுருவிவிட்டான். பழைய வாடிப்பக்கமும் இவர்களது அணி (ஆண்போராளிகள் நின்றனர்) சிறகுபொயிசன் எனும் சங்கேத மொழியிடப்பட்ட பக்கம் இருந்தது. திடீரென சண்டை இறுக்கமடைய இவர்களது அணியும் வரவழைக்கப்பட்டன. பயங் கரமான சூழலில் வந்த அணியில் பூங்குழலியும் ஒருவர், எதிரி உள்நுழைய முற்பட்டபோது உள்நுழையும் எதிரியை எல்லோரும் சுட்டு துவம்சம் செய்தனர். உடனே பூங்குழலி தனது சகதோழியொருத்தியின் துப்பாக்கியை வாங்கி ஆவேசத்துடன் சுட்டிருக்கிறாள். அவளது வேகமான சூட்டைக்கண்ட போராளிகள் மேலும் தங்களது தாக்குதலை வேகப்படுத்திடவே எதிரி ஓட்டமெடுத்தான்.

இதே காலப்பகுதியொன்றில் பூங்குழலியின் அணியொன்று சண்டைபிடித்துக் கொண்டிருந்தபோது எதிரி மிகவும் நெருங்கிவிட்டான் என்பது உறுதியாகிவிட்டது. அதேவேளை தன்னுடனிருந்த போராளி ஒருவர் காயமடைந்துவிட்டார் நிலைமை மோசமாகிவிட்டது. சாதுபோல் இருந்த பூங்குழலியின் வாயிலிருந்து வேகமாக கட்டளைகள் எழுகின்றன.

விடக்கூடாது... விட்டால் இன்னும் கிட்டவருவான்... கிட்ட வராம அடிப்பம் பிறகு காயக் காரரைப் பார்க்கலாம் என்று சொல்லிக்கொண்டே நிலை எடுத்து தாக்கச் சொன்னாள். எல்லோரும் தாக்கத்தொடங்கவே எதிரி ஓட்டமெடுத்தபிறகு காயக்காரரை எடுத்து பாதுகாப்பான இடத்தில் வைத்து தனது சிகிச்சையை செய்யத் தொடங்கி வெற்றியும் பெற்றாள்.



இப்படியாக சிறந்த சேவைகளை செய்துகொண்டு வந்தவள், கிளிநொச்சிச் சண்டையின்போதும் தனது நேர்த்தியான செயற்பாட்டை செய்தாள். கிட்டத்தட்ட கிளிநொச்சிச சண்டையின்போதும் அதன் பின்னான சுட்டதீவு தொடக்கம் ஊரியான் வரையான காவலரண் தொடரிலும் இவள் நிறைய வேலைகளைச் செய்துள்ளாள்.



சதா தனது தோளில் தொங்கும் மருத்துவப்பையுடன் கட்டையான அந்த உருவம் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டேயிருக்கும். ஒவ்வொரு காவலரணாகச் சென்று போராளிகளின் அடிப்படை சுகாதாரத்தை மருத்துவ வசதியை நேரே கவனிப்பாள். அவளது மருத்துவப்பை என்பது ஒரு சிறிய மருத்துவமனையாகவே இருக்கும். அந்தளவுக்கு அவளது மருத்துவப்பையில் பொருட்கள் இருக்கும்.

காவலரணிலுள்ள ஒவ்வொரு போராளியின் வாழ்விலும் அவளுக்கு மிகுந்த அக்கறை இருந்தது என்பதுமட்டும் உண்மையிலும் உண்மை. சிறு புண் உள்ளவர்கள், நோயுள்ளவர்கள் அந்த இளம் வைத்தியரை தேடி வரத்தேவையில்லை, அந்த வைத்தியரே அவர்களிடம் சென்று அவர்களுக்கு மருந்திட்டு சுகப் படுத்துவாள்.

அக்கா காயம் நோகுது, சரியா வலிக்குது எனும போதெல்லாம் தாய்மையின் உணர்வுடன், இல்லை செல்லம் அது நோகாது இன்னும் கொஞ்சம், இந்தா கட்டிட்டன். என்று சொல்லிச் சொல்லியே மருந்திடும் அழகே மிகவும் அழகானது.

ஞாயிற்றுக்கிழமையென்றால் உடனே ஓடிச்சென்று தடுப்பு மருந்து எடுத்து வந்து அனைவரிடமும் சென்று அவர்களுக்குக் கொடுத்து விழுங்கும்வரை அங்கேயே காத்திருப்பாள். யாரேனும் தடுப்புக்குளுசை குடிக்காவிட்டால். அதனால் ஏற்படும் பிரச்சினைகளை மிகவும் தெளிவாக விளங்கப்படுத்துவாள். திடீரென ஒரு ஆசானாக மாறி நிறையவே விளக்கங்களைக் கொடுப்பாள். அந்த விளக்கத்திற்குப் பயந்தே சில போராளிகள், தடுப்புக்குளுசைகளை விழுங்குவதுண்டு. பூங்குழலி பொறுப்பாக இருக்கும் முகாமிலோ, அணியிலோ எப்போதும் நோயாளர்கள் குறைவாகவே இருப்பார்கள்.

போராட்டத்தில் தனது கடமைகளையெல்லாம் சீராக அந்தப்போராளியின் இயக்கசேவைகள் நீண்ட வரலாற்றைக் கொண்டது. விக்ரர் கவச எதிர்ப்புப்பிரிவிலிருந்து, சோதியாபடையணிக்கு வந்த போராளிகளுள் பூங்குழலியும் ஒருத்தி. சோதியா படையணிக்கு வந்ததிலிருந்து அவளது செயற்பாடுகள் பன்மடங்கு அதிகரித்தது என்றே சொல்லலாம்.

முகமாலை காவலரண் தொடரில், தனது மருத்துவப் பையை கழற்றி தனக்குப் பக்கத்திலேயே வைத்துக்கொண்டு ஏதாவதொரு வேலையை செய்து கொண்டிருப்பாள். இவளது வீரத்தினை பறைசாற்றுவதாக தீச்சுவாலை சண்டையிருந்தது.

கண்டல் பக்கமாக ஊடுருவிய எதிரியின் 55ஆவது விசேட அணியை எதிர்த்து, சோதியா படையணியின் அணி ஒன்று தொடர்ந்து சண்டைசெய்கின்றது. அதில் வீரவேங்கை பூங்குழலியும் ஒருவர். எதிரி அவர்களை சூழ்ந்து கொண்டான். உதவி அணிகள் செல்வதற்கான பாதைகள் அனைத்தும் மூடப்பட்ட நிலையில் தளபதி லெப்.கேணல் சுதந்திராவுடன் இவர்களது அணி மூர்க்கமாக மோதுகின்றது.

களத்திலே காவியம் படைக்கும் பெண் போராளிகள் தங்களது உச்சக்கட்ட தியாகத்தின் சாட்சியாக சண்டை செய்யத் தொடங்கிவிட்டனர். நடைபேசியில் அவர்களின் உணர்வுகள் ஒலிக்கத்தொடங்கிவிட்டன. அக்கா நாங்கள் விடமாட்டோம்... அண்ணா நாங்கள் விடமாட்டோம்... என்று சொல்லிக்கொண்டே சண்டை செய்து கொண்டிருந்தனர். கடுமையான சண்டை நடந்துகொண்டிருந்தது. அங்கு நின்றபோராளிகள் தங்களது காவலரண் பிடிபடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்து எதிரி கிட்டவரவர சுட்டுத்தள்ளினர். எதிரியும் விடுவதாக இல்லை. தொடர்ந்து முன்னேறியிருக்க, கப்டன் பூங்குழலியும் அவளது பாசம் மிகுந்த போராளிகளும் இறுதிவரை விடாது போரிட்டு வீரச்சாவு அடைந்துவிட்டார்கள். அவர்கள் அனைவரின் தாயகப் பற்றிற்கு சாட்சியாக எதிரியின் உயிரற்ற உடல்கள் சுற்றிலும் சிதறிக்கிடந்தன. கப்டன் பூங்குழலியின் கை துப்பாக்கியை ஏந்தியவாறே கிடந்தது. அவளது மருத்துவப்பை அவளுக்கு அருகில் கிடந்தது மட்டுமல்ல; அங்கு காயமடைந்த போராளிகளுக்கு மருந்திட்டிருந்தது. இறுதிவரையும் கப்டன் பூங்குழலி தனது இலட்சியப் பற்றில் உறுதியாகவே இருந்தாள். ●




## சிறுகதை



# உயிருள்ள சாட்சியங்கள்

**ஆதிலட்சுமி சிவகுமார்**

'தம்பி...தம்பி... உதிலை தான் இறக்கம்....'' வேகமாக ஓடிக் கொண்டிருந்த பேருந்துக்குள்ளி ருந்து திலகவதி கத்தினாள். சத்தமாய்ப் பாடிக்கொண்டிருந்த பாட்டின் இரைச்சலில் அவளின் குரல் ஓட்டுநருக்குக் கேட்டிருக்க வில்லைப் போலும்.

நிறுத்தத்துக்கான மணியை யாரோ அடித்திருக்க வேண்டும். அந்த ஒலிகேட்டுத்தான் பேருந்து நின்றது.

'இறங்கிற தெண்டால் மணி அடிக்கவேணும்... இல்லாட்டி முதலே சொல்லவேணும்.... பேசாம இருந்து போட்டு... இடம் வந்தவுடனை கத்தினால் சரியே...' நடத்துநர் புறுபுறுத்தான்.

பேருந்துப் பயணங்கள் திலகவதிக்கு பெரிதாகப்பிடிப்ப தில்லை. எரிச்சல் வந்தது. கம்பியில் பிடித்துக் கொண்டு படிகளில் மெதுவாகக் காலை வைத்து வைத்து இறங்கினாள்.

'இந்தாணை பை கவனமாப்பிடி...'

வாங்கிக் கொண்டாள். பேருந்து பெரும் இரைச்சலோடு புறப்பட்டது.

திலகவதிக்கு தான் போகவேண்டிய இடம் தெரியும். முன்னரும் ஒரு தடவை வந்திருக்கிறாள்.

ஒழுங்கைக்கு முன்னால் அந்தக்கடை இப்போதும் இருந்தது. கடையின் முன்னால் போடப்பட்டி ருந்த வாங்கிலில் இருந்து யாரோ பத்திரிகை வாசித்துக்கொண்டிருந் தார்கள். முகம் பத்திரிகைக்குள் மறைந்திருந்தது. மேலே முழுவதுமாகப்பழுத்த வாழைக் குலை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.

'ஒரு கை வெத்திலை வாங்கிக்கொண்டு போவம்' தெருவைக் கடந்து கடையடிக்குப் போனாள்.

"என்னம்மா வேணும்?"

'ஒரு வெற்றிலைக் கூடு தாமோன...' கை வெற்றிலை மடித்துக் கொண்டிருக்க....

"எங்கையிருந்தம்மா வாறியள்?..." என்றான்.

'முழங்காவிலிலை இருந்து.....'

'முழங்காவில் சொந்த இடமோ...'

'இல்லை... சொந்த இடம் சங்கானை... இடம் பெயர்ந்து முழங்காவிலிலை இருக்கிறம்...'

'ஏனம்மா... ஊருக்குப் போகேல்லையே....'

'அங்கை அவங்கள் இருக்கிறாங்கள்... ரெண்டு குமருகளையும் கொண்டுபோய் வைச்சுக்கொண்டு அங்க இருக்கலாமே...'

'ஏனம்மா... நிறையச்சனம் அங்க இருக்குதுகள் தானே...'

'இருக்கிறவையள் இருக்கட்டும்... எனக்கென்ன?... நீ வெற்றிலையைத் தா...'

திலகவதி வெற்றிலையை வாங்கிக்கொண்டு பத்து ரூபாயை நீட்டினாள்.

'சில்லறை இல்லை....என்ன தாறது மிச்சத்துக்கு?...'

'ஒண்டும் வேண்டாம்... இந்தா...' ஐந்து ரூபாக்குத்தியைக் கொடுத்து... பத்துரூபாவை திரும்ப வாங்கிக்கொண்டாள்.

தெருவைக் கடக்க வேண்டும். வலதுபுறத்திலிருந்து உழவு இயந்திரமொன்று வந்து கொண்டிருந்தது. அதில் ஆண் களும் பெண்களுமாய் ஆறேழுபேர் அமர்ந்திருந்தார்கள். உழவியந்திரம் தன்னைக் கடந்துபோன பிறகு அவள் மறுகரைக்குப் போனாள்.

ஒழுங்கை புதுப்பொலிவுடனிருந்தது. மண் போட்டு உயர்த்தியிருந்தார்கள். போனதடவை வந்த போது குன்றும் குழியுமாக- நடப்பதற்கே சிரமமாயிருந்தது.

சிறுவன் ஒருவன் பெரிய சைக்கிள் ஒன்றில் மிகவும் சிரமப்பட்டு மிதித்துக்கொண்டு வந்தான். ஓரமாக ஒதுங்கிநின்று- அவன் போனதும் நடந்தாள். பை கனத்தது. மறுகைக்கு மாற்றிக் கொண்டாள். ஒழுங்கை ஓரமாக பூவரசுகள் சடைத்து நின்று நிழல் தந்தன. இந்தத் தடவை வேலிகள் முள்ளுக்கம்பி போட்டு அடைக்கப்பட்டிருந்தன.

அவள் மனம் சிலிர்த்துக் கொண்டது. அவள் கலாவைப் பார்க்கப்போகிறாள். ஞாயிறு, அல்லது திங்கட்கிழமையில் தான் கலா அவளை வரச்சொல்லி அறிவித்திருந்தாள்.

ஆரம்பத்தில் மூன்று வருடங்கள் கலாவைப் பார்க்க முடியவில்லை. ஒரு நாள் மதியம் கடந்த பொழுதில் கலா வீட்டுக்கு வந்தாள். இரண்டு நாட்கள் நின்றாள். நீண்ட காலத்துக்குப் பிறகு வந்தவளுக்கு இராசவள்ளிக் கிழங்கில் கூழ் மட்டும் காய்ச்சிக் கொடுக்க முடிந்தது. வெள்ளிக் கிழமை என்பதால் பாவாடை சட்டைபோட்டு கோவிலுக்குக் கூட்டிக்கொண்டுபோய் வந்தாள்.

'மொட்டையக்கா... மொட்டையக்கா...' என்று அயல் சிறுவர்கள் கலாவைப் பழித்து சந்தோசப்பட்டார்கள்.

கலாபோய் ஆறேழு மாதங்களுக்குப் பிறகு... ஒரு நாள் கலாவை போராளிகளின் மருத்துவ நிலையம் ஒன்றில் போய்ப்பார்த்தாள். அடி வயிற்றிலிருந்து ஓவென்று பொங்கி வந்தது அழுகை.

'ஏனம்மா அழுறியள்?... இஞ்சபாருங்கோ... இவ்வளவு பிள்ளையளும் ஏதோ ஒரு காயத்தோடை... அழாதேங்கோ...' திலகவதி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

காலவெளி நீண்டது.

'கலா... இனி என்னபிள்ள செய்யப்போறாய்?... வீட்டவாவன்'

'இனித்தானம்மா என்னால நிறையச் செய்ய முடியும். அண்ணை எங்களைச் சந்திக் கேக்கை... உங்களை நான் ஏலாத ஆக்களாய்ப் பார்க்கேல்லை... சாதாரணமா... என்னைப் போல தான் உங்களையும் பார்க்கிறன்... எண்டு சொன்னவர்...'

கலா மறுத்துவிட்டாள்.

கலாவின் நிலைக்காக திலகவதி பரிதாபப்பட்டாள்.

மற்றப்பிள்ளைகள் இல்லாத நேரத்தில் கலாவை எண்ணி அழுவாள் திலகவதி. தினமும் கலாவுக்காக கோவிலுக்குப் போவாள்.

கலா இப்போது படித்துக் கொண்டிருப்பதாக எழுதியிருந்தாள். அவளுடைய எழுத்துக்கூட முத்துமுத்தாக இருந்தது. பொறுப்பாளரிடம் ஏதோ பரிசுவாங்கும் போது எடுத்த படமும் ஒன்று அனுப்பியிருந்தாள்.

கலாவுக்கு பனங்காய்ப் பணியாரம் என்றால் நல்ல விருப் பம். சின்னவயதில் எப்போதும் பனைவளவில்தான் நிற்பாள்.

இப்போது இருக்கும் வளவிலும் நாலைந்து பனைகள் நிற்கின்றன கருங்குத்திப் பனை மரத்திலிருந்து விழுந்த பனம் பழங்கள் இரண்டு தான் கலாவிடம் போக வேண்டும் என்ற எண்ணத்தை தூண்டிவிட்டன. கருங்குத்திப்பனை யின் பழங்கள் நல்ல இனிப்பானவை.

கலாவின் இடம்...

திரும்பியவுடன் பெரிதாய் ஒரு குடிசைபோல...

'கலாவைப் பார்க்கவேணும் தம்பி...'

'கலா ஆரம்மா உங்களுக்கு?...'

'என்ர மூத்த பிள்ளை தம்பி....'

'இப்பிடி இருங்கோ..... சொல்லிவிடுறம்... ஆள் வருவா...'

திலகவதி தன் காலடி யில் பையை வைத்து விட்டு அமர்ந்தாள். பெரிய ஆலமரத் திலிருந்து குருவிகள் கீச்சிட்டுக் கொண்டிருந்தன. ஆலமரத்தின் கிளைகளில் இருந்து பல விழுதுகள் தரையைத் தொடு வதற்கு எத்தனித்துக் கொண்டிருந்தன.

வெளியே இருந்து இரண்டு இளைஞர்கள் மோட்டார் சயிக்கிளில் வந்தார்கள். மேசை யிலிருந்த கொப்பியில் ஏதோ எழுதிவிட்டு உள்ளே போனார்கள். திலகவதி அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'தனியவாம்மா வந்தனீங்கள்?...'

'ஓம் தம்பி...'

'அறிவிச்சுக்கிடக்கு... ஆள் இப்பவருவா... இருங்கோ...'

'அதுக்கென்ன... ஆறுதலா வரட்டுக்கும் தம்பி...'

'எங்கையிருந்தம்மா வாறியள்?...'

'முழங்காவிலிலையிருந்து?...'

'முழங்காவிலோ... முழங்காவியிலை எவடம்?...'

'பிள்ளையார் கோவில்... கூட்டுறவுச் சங்கமெல்லாம் இருக்கு... அவடம் தான்...'

'எனக்குத் தெரியுமம்மா... அங்கை நான் பரப்புரைக்காலத் திலை... பகலவன் அண்ணை யோடை நிண்டனான்...'

'முழங்காவில் உங்கடை சொந்த இடமோ?...'

'நாங்கள் மட்டுவில்... வீட்டாக்களும் அங்கதான் இருக் கினம்...'திலகவதி அவனுடைய கால்களை தற்செயலாய்ப் பார்த்தாள் இடது கால் பொய்க் கால். நெஞ்சுக்கூட்டுக்குள் ஏதோ அறுந்து விழுந்தமாதிரியான உணர்வு ஏற்பட்டது.

உள்ளே போகவந்த ஒருவனிடம், 'விபுலன்... அம்மாக்கு ரீ அனுப்பிவிடச் சொல்லு...'என்றான்.

சுவர்களில் கறையான் புற்றுகள் இருந்தன... மூலைக்குள் பானையில் குடிதண்ணீர் வைத்திருந்தார்கள். ஒருவன் சுடச்சுட தேநீரோடு வந்தான்.

'கலாக்கான்ர அம்மா...'

'வணக்கம் அம்மா...'

'வணக்கம்...' அவன் திரும்பிப் போனான். இப்போது கலாவை இன்னொரு பெண்போராளி அழைத்து வந்தாள்.

'அம்மா வந்து கனநேரமே?.....'

'கொஞ்ச நேரம் தான் பிள்ளையள்...'

கலாவை அழைத்து வந்தவள் வாங்கிலில் இருத்தினாள்.

'அம்மா... உங்களோடை தம்பி வந்திருக்கிறானா...'

'இல்லைப்பிள்ளை... அவனுக்கு தவணைச் சோதினை வருகுது... அதால பள்ளிக்குப் போட்டான்...'

கலா அம்மாவின் கைகளைப்பிடித்து தன்கைகளால் தடவிப் பார்த்தாள். அம்மாவுக்கு அடிவயிற்றிலிருந்து அதே அழுகை பொங்கிவந்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

'நல்லா மெலிஞ்சிட்டியளம்மா... சாப்பிடுறேல்லையே...'

இன்னும் நாலைந்து பிள்ளைகள் வந்தார்கள்.

'கலாக்கான்ர அம்மா... சுகமா இருக்கிறியளோ...'

'ஏனம்மா இன்னும் ரீ குடிக்காமல் ஆறிப்போச்சு... குடியுங்கோ...'

'நிமலண்ணா... இது கலாக்கான்ர அம்மா இல்ல... என்ர அம்மா தெரியுமோ?...'

'அம்மா எங்களுக்கு என்ன கொண்டு வந்தனீங்கள் ... ஏதோ பலகார வாசம் அடிக்குது...'

உரிமையோடு கேட்ட கேள்விகளல் திலகவதி சிலிர்த்துப போனால். அவர்களின் அன்பில் திலகவதியின் உயிர் திக்குமுக்காடியது.

'அம்மா... ஏன் இதிலை இருந்தனீங்கள்... உள்ள வாங்கோ... கைகால் எல்லாம் கழுவிட்டு சாப்பிட்டுத்தான் போகவேணும்...'

'என்ன போறதோ... அம்மாவை போகவிடமாட்டம்... கொஞ்ச நாளைக்கு எங்களோடை நிண்டுட்டுத்தான் போகவேணும்...'

ஒருத்தி செல்லமாய்ச் சிணுங்கிக்கொண்டு சொன்னாள்.

'வாங்கோம்மா என் னோடை உள்ளுக்குப் போவம்...'

'பலகாரப் பையை மறந்துபோகாம எடுத்துக் கொண்டு வாங்கோ....'

திலகலதியை பல்லக் கில் தூக்காத குறையாய் கூட்டிக் கொண்டு போனார்கள்.

'இந்தத் தேசத்திலை... நாங்கள் அனுபவிக்கிற துன்பங்கள் எல்லாத்திலையும் இருந்து எங்கள மீட்கிறது இந்தக் குஞ்சுகள் தான்... இந்த மண்ணில சிங்கள வன் எப்பிடியெல்லாம் கொடுமை செய்தான் எண்டதுக்கு இதுகள் தான் உயிரோடை உலவுற சாட்சியங்கள்...'

'என்னம்மா யோசிச்சுக் கொண்டு வாறியள்?...'

'ஒண்டுமில்லைப் பிள்ளையள்....'

திலகவதி அவர்களோடு வீச்சாக நடந்துகொண்டிருந்தாள் உள்ளே. ■

## கவிதைகள்

வளரும் முனை விரித்து
மண்ணுக்குள் ஊடுருவி
மரம் வளர்க்கும் வேர்கள்
தரையைத் துளைத்து
பாறைகளை ஊடுருவும்
உறுதியான தேடல்.

உன் எண்ணங்கள்
ஒளிர் காற்றில் நீந்தி – தமிழ்
உணர்வு பெறட்டும்
வீர ஊற்றுக்களில்
நீர் தேடிப் போகட்டும்
வலிமையே மூச்சாகும்
தாயகத் தொன்மையே–உன்
தேடலின் வீச்சாகட்டும்.

கதிரவனை நோக்கி
முகம் காட்டும் துளிர்கள்
சருகாகும்வரை ஒளியின்
அந்தரங்க மொழி அறியும்
வேர்களும் கிளைகளும்
ஆழமும் அகலமுமாய்
கிரகிப்பில் வாழ்வளிக்க
புலன்களை விரிக்கிறது.

வலிமையான உன்
புலன்களின் வீச்சு
விண்ணிலும் மண்ணிலுமாய்
தொன்மைத் தமிழ் தேடி
உலகெங்கும் பரப்பட்டும்
உன் ஆற்றலில்தான்
செம்மைத் தமிழ் செழிக்க
தாயகம் வளரும்
அதில் நீ வளர்வாய்
உன் சந்ததி வளரும்.

**வயவை.பூவண்ணா**

## சாட்சி

மனச்சாட்சி
என்னை தின்றுகொண்டிருக்கிறது.
ஒருவேளை
ஊன் உருகிப்போய்
உடல் செத்துப்போகுமுன்
மனச்சாட்சி
என்னை
கொன்றுபோடலாம்
அப்போது
இந்த சடம்மீது
எங்கள் ஊரின்
சாக்கடைகள் மட்டுமே
ஓடிக்கொண்டிருக்கும்
இன்றுள்ள
சங்கீதங்களை எல்லாம்
சத்தங்களாகவே
காணமுடியும் என்னால்.
உங்களின் கூண்டில்
எண்ணப்படாத கம்பி–நான்
இப்போதெல்லாம்
ஏதோ ஒரு நப்பாசை
நோய் இருக்க
வலிகளை மட்டும்
மறந்துபோவதாக.....

**ப. அருள்நேசன்**

# நூல்நயம்

## விழுதாகி வேருமாகி

பெண்கள் வலிமைகள், ஆளுமைகள், செயற்றிறன்கள், பேசப்படாத காலங்கள் எமது வரலாற்றில் உண்டு. அவற்றையெல்லாம் உடைத்தெறிந்து விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்த, அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் பெண்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் பல மாற்றங்களை, படைப்புக்களை, ஆதாரங்களை எமது தேசத்தின் வரலாற்றுக்காக, சிறப்பாக பெண்களுக்காக படைத்துள்ளனர். தேசியத் தலைவரது.

"ஒரு நூற்றாண்டுக்கு மேலாக மேற்குலகப் பெண்கள் பெரும் போராட்டங்களை நிகழ்த்தி, புரட்சிகளை நடாத்தி, விவாதங்களைப் புரிந்து, கருத்தமர்வுகளை நடாத்தி பெற்றெடுத்தவற்றைவிட எமது பெண் புலிகள் மிகவும் குறுகிய காலத்தினுள் எமது பெண்களுக்குப் பெற்றுக்கொடுத்த உரிமைகளும், சுதந்திரங்களும் அளப்பரியவை. அத்தோடு சமூகத்திலே பெரும் புரட்சியை நிகழ்த்தியிருக்கிறார்கள். சமூகக் கருத்துலகிற் புதிய பார்வையை வளர்த்துவருகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக ஆணும் பெண்ணும் சமமான ஆற்றல்களுடனேயே படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உடற்கூற்றியல் நிபுணர்களது கூற்றுக்கு பெண் புலிகளே உலகிற்கு உதாரணமாக வாழ்கிறார்கள்."

என்ற கூற்றானது ஆழமான அவரது நோக்கையும் பெண்களது செயற்பாடுகள் வெளிவருவதினூடாக சமூக மாற்றம் எவ்வளவு நிகழ்ந்துள்ளது என்பதனையும் வெளிக்காட்டுகின்றது.

இதுவரை காலமும் பெண் குறித்துப் பேசப்பட்ட மெல்லியலாள், மென்மையானவள், பயந்தவள், பலமில்லாதவள், பாரம் தூக்கமுடியாதவள், குறித்த நாட்களில் வீட்டைவிட்டு வெளியேறக்கூடாதவள், ஆணுடன் எதுவிதத்திலும் சமமாக நிற்கமுடியாதவள் என்றும் இப் பூமியில் பிறந்ததற்காக ஆணுக்கு அடிமையாய் அவனது ஏவலை ஏற்று நடப்பவளால், கணவன், சகோதரன், மாமன், மச்சான் என்ற ஆண்பால் சொல்லுள்ளவர்களின் அதிகாரத்துக்குள் பேசா மடந்தையாய், அவர்கள் நினைத்ததை செய்து முடித்தவளாய், சிரித்தால் சிரித்து, அவர்கள் அழுதால் அழுது வாழ்பவளாய் தம் கற்பனைக்கு எட்டியவரை கூறப்பட்ட, [illegible]வமைக்கப்பட்ட சித்திரப் பாவை[illegible]ய், கிளிப்பிள்ளைப் பேச்சாய் இருந்ததாகத் தமது இலக்கியப் படைப்புக்களில், சித்திரங்களில், நாடகங்களில், வரலாறுகளில் பித்தர்களாய், பேதையர்களாய், பாரதி கூறிய மூடர்களாய் பேசியவர்கள், எழுதியவர்கள் எல்லோருக்கும் பாடம் புகட்டும் ஆதாரமாக "விழுதாகி வேருமாகி" என்ற வரலாற்று நூல் 2ஆம் லெப்டினன் மாலதி படையணியின் வெளியீடாக வந்துள்ளது.

பெண்கள் இலக்கியக் கோட்பாட்டின் அடிநாதமான பெண்கள் படைப்புக்கள் இன்று சமூகப் பார்வையை அகலப்படுத்தியுள்ளது. பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் கூறியுள்ள கருத்து இதற்கு ஆதாரமாகின்றது.

"இலக்கியக் கோட்பாடு வெறுமனே கருத்து நிலைப்பட்ட ஒரு பிரகடனமாக மாத்திரம் நில்லாது அது சமூகத்தில் மனிதன் இயங்குகின்ற முறையைத் தெளிவுபடுத்துவதோடு, மனித வாழ்க்கை பற்றிய கண்ணோட்டத்தை தருவதாகவும் அமைத்தல் வேண்டும். அது பலவித அனுபவங்கள் என்னும் தீயில் புடமிடப்பட்ட கருத்தாக இருக்கும். எது கருத்து எது அனுபவம் என்று பிரித்துச் சொல்லமுடியாதபடி இரண்டும் ஒன்றையொன்று தங்கி நிற்கும்"

இதற்கு ஆதாரம் "விழுதாகி வேருமாகி" என்று சொல்லிடமுடியும். ஏனெனில் இங்கு கூறப்பட்ட மனிதன் பெண் என்று கருத்துக்கொண்டு பார்க்கின்றபோது தெளிவாகின்றது. விழுதாகி வேருமாகி நூல் பெண்களது கருத்து + அனுபவம் = விழுதாகி வேருமாகி என்று செயல்வடிவம் பெற்றுள்ளது.

எத்தகைய கோட்பாடாக இருந்தாலும் அது தன் வரலாற்றுச் சூழலில் சில தன்மைகளைக் காட்டும். இங்கு வரலாறு என்று சொல்வது அந்தக்குறிப்பிட்ட காலச்சமூகம், அரசியல், பண்பாட்டு மோதல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிக்கொள்வதோடு, முன்னைய வரலாற்றின் தொடர்ச்சியையும் எதிர்கால வரலாற்று நீட்சியையும் சுட்டும் என்ற கருத்தானது "விழுதாகி வேருமாகி" என்ற இந்த நூல் வரலாற்றுக் காலகட்டத்தின் ஒரு பகுதியைக் காட்டினாலும் பெண்களது அரசியல் நிலைப்பாட்டை, அவர்களது முன்னைய, எதிர்கால வரலாற்றினை எமது சமூகம் உணர, செயற்படவழி சமைத்துள்ளது.

இலக்கிய உலகினை மையப்படுத்திய பேராசிரியை சித்திரலேகா மௌன குருவின் (1986இல்) கூற்றான "பெண்கள் மத்தியில் தமது சமூக இருப்பு, பங்கு, பணி குறித்தும் தமது ஆற்றல்கள், ஆர்வங்கள் குறித்தும், புதியதோர் வழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது." என்பது செயல்வடிவம் பெற்றுள்ளதற்கு ஆதாரமாக 'விழுதாகி வேருமாகி' விளங்குகின்றது.

விழுதாகி வேருமாகியவர்களின் வரலாறுகள் எந்த மண்ணிலும் எழுதப்பட்டு சான்றாதாரமாக விளங்குகின்றதா? என்ற வினாவை எழுப்புமிடத்து இல்லை என்ற பதிலையே நாம் பெற முடியும். ஆனால், வரலாற்றுத் தடத்திலே சிறு பிசிறுகூட இல்லாமல் காலம் ஓட வரலாறும் ஓடி முடிந்துள்ளது. இந்த ஓட்டம் பெண்களின் சமூகத்தின் ஓட்டத்தில் அரசியல் ஓட்டத்தில், விடுதலை ஓட்டத்தில், மூட நம்பிக்கைகளின் ஓட்டத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

சமூக ஓட்ட மாற்றம் என்பது நாட்டு மாற்றத்திலும், நாட்டின் விடுதலை மாற்றத்திலும் பிரதான பங்கை ஆற்றுகின்றது. இதுவரை காலமும் சமூகத்தின் கட்டுக்கோப்பு எனக் கூறி இறுகப்பிடித்துக்கொண்ட பல ஆண்களினதும், சில பெண்களினதும் கருத்துக்களை உடைத்தெறிந்தவர்கள் பெண் போராளிகள். இரத்தப் பாசம், தாய்- மகள் உறவு, தாய்மை உணர்வு, இவற்றைத்தாண்டி யாரும் செல்லமுடியாது என்றும் குறிப்பாக பெண் விலகிவிடமாட்டாள் என்றும் இருந்த கருத்து நிலை மாறியது. போராட்டத்திற்கு தன்மகளை அனுப்பிய தாயும், தன்பிள்ளைக்காய் தன்னையே போராட்டத்தில் இணைத்துக் கொண்ட தாயும் விடுதலைப் போராட்டத்தில் உள்ளனர். தமிழீழத்திற்காக வித்துடலான தன் தங்கையை தானே தூக்கிச் சென்று உரிய தளபதியிடம் ஒப்படைத்துவிட்டு இவள் என் தங்கை, நான் இன்றைய நாள் சமர் முடிய வருவேன் என்று உறுதிகூறி வீரச்சாவைக்கூட தன் மனதுள் உள்ள சுதந்திரவேட்கைத் தீயால் சுட்டெரித்து பகைவிரட்டி மீண்டு வரு வேன் என்று திடமான நம்பிக்கையு டன் செயற்பட்ட காவியநாயகிகளின் வரலாறு இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

பெண் என்பவள் பிறர் கட்டளைகளை ஏற்று நடப்பவள் "பெண் புத்தி பின் புத்தி" தனியாக முடிவு எடுக்கத்தெரியாதவள், தேவைகளுக்காக பிறரிடம் தங்கி நிற்பவள் என்ற கருத்துக்கள் அன்றும் இன்றும் உலவும் எம் தேசத்தில் விடுதலைப் புலிகள் படையணி இவற்றைக் தவிடுபொடியாக்கிவிட்டனர். போராளிகளை இணைத்தல், பயிற்சி அளித்தல், சிறப்புப் பயிற்சி அளித்தல், வேவு பார்த்தல், அரண் அமைத்தல், "நிலையெடுத்தல், கொம்பனி உடைந்தால் மறுசீரமைத்தல், தலைமைதாங்குதல், கட்டளையிடல், போராடுதல், திட்டமிடல், எதிரியின்பலம், பலவீனம் அறிதல், குறிப்பறிந்து ஒழுகுதல், புவியியல் நிலைமைகளை அறிதல், கண்ணிவெடி புதைத்தல், அகற்றுதல், எவ்வித ஆயுதங்களை எவ்வகையில் எத்தூரத்திற்கு பிரயோகித்தல், முன்னேறுதல் என்றெல்லாம் சிந்திக்கும் திறனுடன் செயலாற்றும் திறனும் உடையவர்கள் பெண்கள் என்பதற்கு முன்னுதாரணமாக பெண் போராளிகள் செயற்பட்டுள்ளனர் என்பதை விளக்குகின்றது இந்நூல். பெண்களது ஆற்றல்கள் ஆணுக்கு நிகரானவை. பால் நிலை வேறுபாட்டால் பாகுபடுத்தப்பட்ட நிலையை உடலியல் ரீதியாகவும் கூறும் கருத்துக்கள் புறம்தள்ளப் படுகின்றன. இச் சாதனையை நிகழ்த்தியவர்கள் விடுதலைப் புலிகளின்




பெண் போராளிகளே. குறிப்பாக மாலதி படையணியின் தோற்றம் பற்றிய கருத்தானது இதனைத் தெளிவுபடுத்துகின்றது.

"சிறப்பான, கடினமான திடீர் நிலைமைகளை, நெருக்கடிகளை எதிர்கொள்ளக்கூடிய தனித்துவமான நடவடிக்கைகளைச் செய்யத் தக்க ஒரு அணியை எம்மிலிருந்து உருவாக்கினோம்."

இதற்கு ஆதாரமாக பெண்களது பலதரப்பட்ட படையணிகளின் செயற்பாடுகளும் சான்றுபகிர்கின்றன. உதாரணமாக சிலசமர்களில் ஆண் போராளிகளின் முகாம் முற்றுகைப் போராட்டங்களில் பாதை உடைப்பு, ஊடறுப்பு, கட்டளை அதிகாரம், பாதை வழிகாட்டல் முதலியவற்றை பெண்களே சாதித் துள்ளனர். சிறுத்தைகள் படையணி, மாலதி படையணி, மகளிர் படையணி, கடற்கரும் புலிகள் படையணி, தரைக் கரும் புலிகள் படையணி, மோட்டார் மகளிர் படையணி, போர்ப் பயிற்சியாளர்கள் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

(21 ஆம் பக்கம் பார்க்க)

**ஜெயபத்மா**

வலம்புரிக்கான பெரும் தயார்ப்படுத்தல் - யாழ்ப்பாண நகரைப் பிடிப்பதற்கான அடுத்த கட்ட நடவடிக்கையில் சிங்களப்படைகள் தயாராகின.

மூன்றாவது நடவடிக்கையா்க 'பைனல் கௌன்ட் டவுன்' (Operation final count down) மேற்கொள்ளப்பட்டு யாழ்ப்பாண நகரம் கைப்பற்றப்படும் என்ற திட்டஅடிப்படையில் வலம்புரிக்கான தயார்ப் படுத்தல் சிங்களப்படைகளால் மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணத் துக்கான பாதைகள் யாவற்றையும் முற்றுகையிட்டபின் இந்தப்பாய்ச்சலை மேற்கொள்வதே திட்டம். வலம்புரிக்கு முன்பதாக பலவேகய -2 நடவ டிக்கை மூலம் கிழக்குக் கரையோர கட்டைக்காட்டிலிருந்து ஆனையிறவு வரையான பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டு இப்பகுதியில் இருந்த வன்னிக் கான கொம்படி - ஊரியான் பாதை மூடப்பட்டது. ஆனையிறவிலிருந்து இயக்கச்சிவரை இராணுவம் முன்நகர்ந்தது. வடக்காக பலாலியிலிருந்து கட்டுவன் வரை ஜெயசக்தி நடவடிக்கை மூலம் படைகள் ஆக்கிர மித்தன. அடுத்ததாக பூநகரி கேரதீவுப் பாதையை மூடுவது திட்டமாக இருந்தது. இதன் மூலம் வன்னிக்கான யாழ்ப்பாண தொடர்பை மூடலாம் என்பது திட்டம். வலம்புரி நடவடிக்கையின் கட்டம் -2 பூநகரியை ஆக்கிரமிப்பதாகும். முதற்கட்டம் ஊர்காவற்றுறை புளியங்கூடலிலிருந்து மண்டைதீவு பண்ணைவரை ஆக்கிரமிப்பது. உள்ளகமாக உள்ள புங்குடு தீவை ஆக்கிரமிப்பது. இதில் புங்குடுதீவு என்பதே தமக்கு ஆபத்தான தளம் என்பதை சிங்களப்படையினர் கணிப்பிட்டிருந்தனர். இதனால் தீவகத்தின் யாழ்ப்பாணத்துக்கான பாதையை கைப்பற்றிவிட்டும் புங்குடு தீவைப்பிடிப்பதற்காக ஒரு படைநகர்வு சிங்களப்படைகளால் மேற்



# 22 ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

கொள்ளப்பட்டது. வலம்புரிக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபட்டபோதே அனலைதீவு கடற்பரப்பில் கடற்புலிகளின் கடற்கண்ணிவெடித்தாக்கு தலில் சிறிலங்கா கடற்படை வடதளபதி எச்.ஆர். அமரவீர படுகாய மடைந்த தாக்குதல் நடந்தது.

வலம்புரிப் பின்னணியில் சிறிலங்கா இராணுவ நகர்வுக்கு உதவியாகக் கடற்படையின் நடவடிக்கைகள் தயாராகின. பூநகரி ஆக்கிர மிப்புக்கு படைதரையிறக்க ஏற்பாடு இருந்தது. தீவகத்திற்கு கடற்படை பங்களிப்பு பின்னணியிலிருந்து பீரங்கித்தாக்குதலை மேற்கொள்வதாகும். இதற்காக சிறிலங்கா கடற்படையின் கட்டளைக்கப்பலான Slns - விக்கிரம ஒருங்கிணைப்பில் ஈடுபட பீரங்கிக்கலமான Slns வீரயா பீரங்கித் தாக்குதலை மேற்கொள்ள தயாரானது. அத்துடன் சிங்கள விமானப்படை விமானங்களும் குண்டுகளைப்பொழியத் தயாராகின. சிங்களத்தின் துட்டகைமுனு என சிங்களவர் கருதும் டென்சில் கொப்பேகடுவவின் தலைமையில் வலம்புரி தீவக ஆக்கிரமிப்பு நடவடிக்கையை 1991 ஒக்டோபர் 18இல் படைகள் ஆரம்பித்தன. புளியங்கூடலில் இருந்து சிங்கள இராணுவம் நகர ஆரம்பிக்க கடற்படையும் விமானப்படையும் மக்கள் குடியிருப்புகளை இலக்கு வைத்து குண்டுகளைப் பொழிந்தன. ஏற்கனவே திரிவிடபலய படுகொலை நடவடிக்கையால் தீவகமக்கள் அதிகம் இடம்பெயர்ந்து விட்டனர். திரிவிடபலய படைகள் மீளத் திரும்பிய பின் தமது இடங்களுக்கு திரும்பிய குறைந்தளவிலான மக்கள் மீளவும் இடம்பெயரத் தள்ளப்பட்டனர். படைகள் நகர்வினை ஆரம்பிக்க படைகளின் பீரங்கிக்குண்டுகளின் மத்தியிலும் மக்கள் பண்ணைவீதி வழி யாழ்ப்பாணத் துக்கு இடம்பெயர ஆரம்பித்தனர். மிகப்பெரும் எடுப்பிலான சிங்களத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப்புலிகள் தாக்குதலை நடத்தி படைநகர்வின் வேகத்தை தேக்கி மக்கள் பண்ணை வீதி வழி இடம்பெயர அவகாசமளித்தனர். ஏனெனில் இந்த வழியை கைப்பற்றும் நகர்வே படைகளால் மேற்கொள்ளப்பட்டது. படைநகர்வு தாமதப்படுத்தப்பட மக்கள் முடிந்தளவு வெளியேறினர். வயதானவர்கள் சிலர் பிறந்த மண்ணை விட்டுவர மனமில்லாமல் சொந்த மண்ணில்தான் உயிர்விடவேண்டும் என்ற வைராக்கியத்தால் இடம்பெயரவில்லை. புளியங்கூடல் சரவணை முதல் - பண்ணை வரையான வெட்டவெளியானபகுதியில் வலம்புரி நடவடிக்கையின் 6மைல் நீளப்பாதையை ஆக்கிரமிக்க 48 மணிநேரம் படைகளுக்கு எடுத்ததெனில் சாதகமற்ற அந்த வெளியிலும் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலை கணிப்பிடலாம். விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 7 படையினர் இழக்கப்பட்டனர். மண்டைதீவை சிங்களப்படைகள் ஆக்கிரமித்தன. கொப்பேகடுவ மண்டைதீவின் சந்தியில் வந்து இறுமாப்புடன் படைத்தளபதிகளை சந்தித்து யாழ்ப்பாண நகர்தான் அடுத்த இலக்கு என தெரிவித்ததாக தகவல் இருக்கிறது. ஆனால், இந்த மண்ணே கொப்பேகடுவவை பலிகொண்டது என்ற உண்மை பின்னர் அரங்கேறியது. தீவகம் முழுமையையும் யாழ்ப்பாணத்திலிருந்து சிங்களப்படைகள் துண்டித்துக் கொண்டுவிட்டன. அடுத்து அவர்களின் நகர்வு புங்குடுதீவு, தீவகத்துக்கான பாதை துண்டிக்கப்பட்ட பின்னரும் கூட புங்குடுதீவு தொடர்பில் அவர்கள் கொண்டிருந்த அச்சத்தின் வெளிப்பாடுதான் புங்குடுதீவுக்கான படை நகர்வு.

தருவன்




# தமிழர் தாயகத்தில் உள்ள மூத்த கட்டுக்கரைக்குளம்

தமிழர்தாயகத்தின் மூத்த பாரிய நீர்ப்பாசனக் கட்டுமானம் கட்டுக்கரைக்குளம். மன்னாரில் இந்த கட்டுக்கரைக்குளம் இருக்கி றது. வரட்சியை அதிகம் கொண்ட தனித்துவமாக ஆற்றுப்படுகை இல்லாததான கட்டுக்கரைக்குளம் சுமார் 2000 ஆண்டுகளின் முன்னதான மக்களின் நீர்ப்பாசனத் தொழில்நுட்ப அறிவுக்கு சான்றா கும். ஏனெனில் கட்டுக்கரைக் குளம் இயல்பாக இயற்கையாக ஒரு ஆற்று வெளிப்படுகையைக் கொண்டதல்ல.

மன்னாரின் தென்பகுதியில் ஓடும் வளம்மிக்க அருவி ஆற்றைத் திசைதிருப்பி அளவக்கை ஆறு என்ற கால்வாய்மூலம் நீர்கட்டுக் கரைக்குக்கொண்டு வரப்பட்டு உருவாக்கப்பட்டது. கட்டுக்கரை நீர்மூலம்தான் வரட்சியான தொன்மை நகரான மாந்தை வளமுடன் வளர்ந்திருக்கின்றது. சிங்களவர் தம்வரலாறு எனக்கொள்ளும் மகாவம்சத்தில் இந்தக் கட்டுக்கரை யோதவாவி எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மீதான முதல் ஆய்வு ஆங்கிலேய நீர்ப் பாசனப்பொறியியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. கல்லணை என்ற தொழில்நுட்பத்திற்கு முன்பதானதாக அது அமைந்தது.

அந்த மூத்த, அருவி ஆறு திசைதிருப்பல் அணை இப்படித்தான் அமைந்திருந்தது. ஆறின் அடித்தளத்தில் இருந்த பாறையில் வரிசையாக சதுரக் குழிகள் காணப்பட்டன. இவற்றில் பலமான மரங்கள் செருகப்பட்டு ஆறு மறித்து திசைதிருப்பப்பட் டிருக்கவேண்டும் என பிரிட்டன் நீர்ப்பாசனப்பொறியியலாளரும் தொல்லியல் ஆய்வாளருமான ஹென்றி பார்க்கர் தெரிவித் துள்ளார். இந்தப்பிரதான மர அணையைத்தாங்க தாங்கு மரங்களும் அமைக்கப் பட்டிருந்ததற்கான சான்றாக அதற்குரிய கற்குழிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த அணையின் பின்னர்தான் கல்லணை கட்டப்பட்டிருக்க வேண்டும் என அவர் தெரிவித் துள்ளார். இரு அணைகளுக்கும் இடைப்பட்ட கால இடைவெளியும் அதிகம் என்றே பார்க்கர் கூறியுள்ளார். கிட்டத்தட்ட கல்லணைக்கு முன்பதாக ஒரு நீர்த்தேக்கமாக அது இருந்திருக் கிறது எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார். தேக்கத்தில் தமிழரின் பெருங்கற்காலத்துக்குரிய மட் பாண்டங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இவை பெருங்கற்கால குடியிருப்பாக இருந்தது உறுதி செய்யப் பட்டுள்ளது. தேக்கம் கல்லணையில் இருந்து செங்கற்கள் 2.51-8.57 அங்குல அளவுடையதாக இருந்தன. அதன் கனவளவு 324 கன அங்குலமாக இருந்தது. அது கி.பி.2ஆம் நூற்றாண்டுமுதல் 4ஆம் நூற்றாண்டுவரையான காலத்துக்குரிய செங்கல் அளவாகும். ஆக இதற்கு பல நூற்றாண்டுகள் முன்பதாக கட்டுக்கரை இருந்து வந்துள்ளது என்பது பார்க்கரின் முடிவு.

சிங்கள மன்னனான பராக்கிரமபாகுவின் எழுச்சிக்கா[illegible]த் தில் இக் குளமும் அகப் பட்டுள்ளது. இலங்கையில் முக்கிய பெரிய குளங்களில் பராக்கிரமபாகு கல்வெட்டுகளை பொறித்துள்ளான். அவற்றில் ஒன்று கட்டுக்கரையிலும் பொறிக்கப்பட்டிருக்கிறது.

கட்டுக்கரைக்குளத்தின் மற்றொரு தொன்மை அதன் கீழான புலவுப்பயிர்ச்செய்கை யாகும். புலவுப்பயிர்ச்செய்கை எனப்படுவது ஆற்றுப்படுகைகளில் காணப்படும் வண்டல் வெளிகளில் ஆறை மறித்து அதில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவ தாகும். உலகில் ஆரம்பகாலப் பயிர்ச்செய்கை ஆறுகளை மறித்து அதன் படுகைகளில் பயிர் செய்வதாகும். அதற்கான சான்றுகள் வன்னியின் ஆற்றுப் படுகைகளில் உள்ளன. இலங்கையில் வட பகுதியில் மட்டுமே ஆறுகள் வேகம் [illegible]றைந்து சிறந்த வண்டல் வெளிகளை கொண்டுள்ளன. இவற்றில் கட்டுக்கரைக்குளத்தின் கீழ் 162ஊட்டக்குளங்கள் உள்ளன. அதாவது கட்டுக்கரை நீரைப்பெற்றுள்ள குளங்கள் அவை. மன்னாரில் இன்றும் வரட்சிக்காலத்தில் குளங்களின் படுகைகளில் பயிர் செய்யும் முறை கடைப்பிடிக்கப்படுகின்றது. இது தொன்மைக்கால புலவுப்பயிர்ச்செய்கையின் எச்சமாகும். இன்றும் இலங்கையில் மிக தொன்மைக்கால பயிர்ச் செய்கை படுகையாக கட்டுக்கரை ஊட்டக்குளங்கள் உள்ளன. ஆங்கிலேய பொறியியலாளர்கள் கட்டுக்கரையை கண்டுபிடித்த வேளையில் அதன் படுகைப் பகுதிகளில் மக்கள் பயிர்ச்செய்கையினை மேற் கொண்டிருந்தனர். அதனைக் கண்ணுற்ற அவர்கள் கட்டுக் கரைக்குளம் இயற்கையாகவே ஒரு வண்டல் வெளி என்பதை உணர்ந் திருந்தனர். அவர்கள் தம் அறிக்கையில் அதனைக் குறிப்பிட்டிருந்தனர். சிங்கள வரலாற்றாசிரியர்கள் தம் பகுதிகளில்தான் நீர்ப்பாசன நுட்பம் முதலில் விருத்தியடைந்தன என்ற இறுமாப்பை தகர்க்கும் வகையில் தமிழர் பகுதி தொன்மை நுட்பத்தின் சான்றாக கட்டுக்கரைக்குளம் விளங்குகின்றது. கட்டுக்கரைக்கு இராட்சதக்குளம், அரக்கர் குளம் என்றுள்ள பண்டைய பெயர்கள் அதன் தொன்மைக்கு மற்றொரு சான்று.

மேற்கொள்ளப்பட்டது. வரட்சிப் பகுதியான மன்னாருக்கு குளம் ஒன்றை அமைக்கும் தேடலில் அவர்கள் ஈடுபட்டபோது அழி வடைந்த நிலையில் பண்டைய கட்டுக்கரைக்குளம் கண்டு பிடிக்கப்பட்டது. 1950 ஏக்கர் பரப்பளவில் 5 அடி ஆழத்தைக் கொண்டதாக 1800களின் கடைசியில் கட்டுக்கரை கண்டு பிடிக்கப்பட்டது. அவர்கள் அந்தக்குளத்தின் ஆற்றுப் படுகையைத்தேடி ஆய்வை மேற்கொண்டனர். அதன்போது அவர்கள் அருவி ஆறில் இருந்து நீர்கட்டுக்கரைக்கு திசைதிருப் பப்பட்ட இடத்தை கண்டுபிடித் தனர். மன்னார்- வவுனியா வீதியில் மடு வீதிச் சந்திக் கண்மையாக தெற்கே குஞ்சுக்குளத்துக்கு செல்லும் பாதையில் இப்போது அருவி ஆறுதிசைதிருப்பப்படும் இடத்தில் தேக்கம் என்ற இடத்தில் அருவி ஆறுதிசைதிருப்பப்பட்ட சான்று களை அவர்கள் கண்டனர்.


தேக்கம் கல்லணை என அது அழைக்கப்படுகின்றது. அந்தத்தேக்கம் அணை 90 அடி அகலமாக இருந்தது. இந்த கல்லணை அமைக்கப்படுவதற்கு முன்பதான ஒரு அணை இருந்ததற்கான சான்றும் கட்டுக்கரைக்குளத்தின் மீள் அமைப்பில் ஈடுபட்ட பிரிட்டன் நீர்ப்பாசனப் பொறியியலாளரான N.M. வோக்கர் கட்டுக்கரைப் பகுதியில் செப்பனாக வெட்டப்



பட்ட கற்களை கண்டு பிடித்துள்ளார். அது குளத்தின் மடைப்பகுதியாக இருந்திருக் கலாம் என்பது வோக்கரின் முடிவு. மேலும் குளப்பகுதியில் எண்கோணத்தில் செதுக்கப்பட்ட தூண் ஒன்றும் எடுக்கப்பட்டது. அதில் ஒரு கல்வெட்டும் இருந்துள்ளது.

'ஸ்ரீமத் சிகபுர ஜட ஸ்ரீபராக்கிரமபாகு நகரிதன் விஸ்வ லோகாத்த காரியவ்யா பாரிதத் மணா' என குறிப்பிடப்பட்டிருந்தது.

குரலோன்




## கைவண்ணம்



P.விமல்ராஜ்,
கிளி/தருமபுரம் ம.வி.

# நமது தேவாங்கு

நம்மிடம் தோற்றம் தொடர்பாக சிலரை இந்த விலங்குக்கு ஒப்பிட்டுப் பேசுவதுண்டு. ஆனால், அந்த விலங்கை அறியாதவர்களே அவர்கள். அவலட்சணத்துக்குத்தான் அந்த விலங்கை ஒப்பிடுவர். ஆனால், யாரும் நினைகிற மாதிரி அது அவலட்சணமானது அல்ல. அது குரங்கு என நீங்கள் நினைக்கலாம். ஆனால், அதுவல்ல. அந்த விலங்கு தேவாங்கு. நமது வரட்சிக் காடுகளுக்குரிய தனித்துவ விலங்கு அது. உலகில் உள்ள தேவாங்குகளில் நம்மிடம் இருப்பது தனித்துவ இனம். இதன் குணங்களின் தனித்துவம் எது தெரியுமா? மெதுவான மிக மெதுவான நடை, அசைவு. ஆனால், துல்லியமான அவதானம்-நிதானம் அதுதான் தேவாங்கு. வன்னிக் காடுகளுள் இதனை இரவுகளில் காணலாம் எனச்சொல்லமாட்டேன். அதனுடைய கீகீகீகீ என்ற உச்ச ஸ்தாயி ஒலியை காது கிழியக்கேட்கலாம். அதன் கத்தல் அதுதான். எங்கடை வனவிலங்குப் பூங்காவான மருத்துவர் ஜெயக்குலராஜாவின் முல்லைத்தீவு தண்ணீரூற்றுப் பூங்காவில் இதனை பகலில் கண்டேன். சுமார் முக்காலடி நீளமிருக்கும் (25.5சென்ரி மீற்றர்.) நாலு காலில் நின்றால் அதன் தோற்றம் பூனை மாதிரி இருக்கும். ஒடுங்கிய வயிறு. வட்டமான முகம். பெரிய வட்டக் கண்கள். கால் விரல்கள் பற்றிய பிடிவிடாத அளவு கூராக இருக்கும். தலையை அசைப்பது கூட படங்களில் சிலவேளைகளில் ஸ்லோ மோஸன் என்ற மெதுவான அசைவைப் பார்த்திருப்பீர்களே அப்படி இருக்கும். இரவில்தான் அதன் நடமாட்டம். மிக மிக மெதுவாக மரக்கிளைகளை பற்றிப்பிடித்து அது நகரும். பகலில் இதன் வசிப்பிடம் மரப்பொந்துகளில்தான். இரவில் மரக்கிளைகளில் இறுகப்பற்றி மெதுவாக நிதானமாக முன்னேறி சிறியபறவைகள், பூச்சிகள், தவளைகள், தேரைகள் மற்றும் ஊர்வனவற்றை டபால் என்று பிடித்து உண்ணும். அது அருகில்வரும் வரை அந்த உயிர்கள் அறியாதபடி எந்த ஒரு அதிர்வுமில்லாமல் தேவாங்கு பக்கத்தில் நகர்ந்து நிற்கும். இது அதன் தனித்துவம். மஞ்சள் கலந்த பழுப்பு நிறம் கொண்ட இதில் அவலட்சணமாக ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆங்கிலத்தில் இது "ஸ்லெண்டர் லோறிஸ்'' எனப்படுகின்றது. உயிரியல் பெயர் ''லோறிஸ் டார்டிக்றாடஸ்'' எனப்படுகின்றது. இதன் கர்ப்ப காலம் 3 மாதங்கள். ஒரு தடவையில் ஒரு குட்டி அரிதாக இரண்டு குட்டிகளை அது ஈனும், இனித்தேவாங்கு என எவரையும் கூறாதீர்கள்.



## குருவிக் குடும்பம்

குருவிக் கூடு குருவிக்கூடு
கொப்பில் உள்ள வீடு!
குருவிக் குஞ்சு குருவிக் குஞ்சு
கூட்டில் உள்ள பிள்ளை!
குருவிக் குஞ்சை, குருவிக் குஞ்சை
ஊட்டுங் குருவி அம்மா!
குருவி யோடு குருவி யாகக்
குந்துங் குருவி அப்பா!
சிறுகுடும்பம் சிறிய வீடு
சிறுமை இல்லா வாழ்வு!
சுறுசுறுப்பும் விறுவிறுப்பும்
துலங்க வாழும் வாழ்வு!

## சொற்சிலம்பம் - 61

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க் | கோ | ம | பி | ர | ட் | ற |
| ச | கு | நீ | த | ள் | ர் | ல் |
| மா | பா | ஸ் | கோ | ன் | ணி | ம் |
| ஒ | அ | ச் | ய | ச | ங் | மா |
| கை | ட் | த | பா | ரா | வ | ஜா |
| த | வ | க | இ | ய் | ம் | தே |
| சி | பூ | ப் | ஓ | ச | வி | லோ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -59 இன் விடைகள்

01. பாக்கு நீரிணை

02. றைட் சகோதரர்

### சொற்சிலம்பம் - 59 இன் பரிசுக்குரியவர்

என்.பிரியா,
மன்னார். சென்.சவேரியார்,
மகளிர் கல்லூரி,
மன்னார்.

### சொற்சிலம்பம் - 59 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ம.நிறோஜன், தரம்-03, யா/தாளையடி றோமன், கத்தோலிக்க வித்தியாலயம்.
02. மு.ஸாஜித், இல.112.மூர்வீதி மன்னார்.
03. வா.வாமராஜ், கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
04. கோ.போசகாந், மட்டுவில்நாடு மேற்கு, பூநகரி.
05. அ.றஜீன், மருதங்கேணி இந்து தமிழ வித்தியாலயம்.
06. ஸ்ரீ.லினேஸ்ராஜ், தரம்-6A, கிளி/கிளிநொச்சி மகா-வித்தியாலயம்.
07. சூ.சுபராஜ், இல.155 தோணிக்கல், வவுனியா.
08. வே.ரஜிதா, தி/விக்னேஸ்வரா ம.வி, திருகோணமலை.

01. நோர்வே நாட்டின் தலைநகர்.
01) ..........................................
02. தமிழீழத்தின் முதல் மாவீரன்.
01) ..........................................
பெயர் :- ..........................................
முகவரி :-..........................................
..........................................

சொற்சிலம்பம் - 61
ஈழநாதம்.
யாழ். சாலை,
கிளிநொச்சி.







நன்றி:- பன்டேடைம்ஸ்

(தொடரும்)

# வீடு


பெண்ணுக்கு தற்துணிவும், தன்னம்பிக்கையும் வேண்டும் என்பது பொதுவாக நாம் வலியுறுத்தி வருகின்ற கருத்தாகும். ஆனால், தற்துணிவுடன் தனித்தமுடிவுகளை எடுக்கும் பெண்களை சமூகம் எப்படிப் பார்க்கிறது என்பது மிகவும் முக்கியமாகிறது. ஒரு பெண் உயர்பதவியில் இருந்தால். ஆண்கள் உட்பட பலரை அவள் நிர் வாகம் செய்ய வேண்டிய உத்தியோகம். சிலர் அவளை மதித்தார்கள். சிலர் மேலதிகாரியின் கட்டளைகளை தட்டிக்கழிக்க முடியாது என்பதால் மதிப்பளிப்பதுபோல பாசாங்கு செய்தார்கள். இன்னும் சிலர் அடிக்கடி முரண்பட்டார்கள். ஆனாலும் அவள் தொடர்ந்து தன் பணிகளைச்செவ்வனே செய்தாள். அவளுக்குத் திருமணம் பேசப்பட்டது.

பல இலட்சங்கள் காசு, வீடுவளவு, நகைநட்டு எனக் கேட்டார்கள். ‘மெல்லிய நூல் போன்ற சங்கிலிமட்டுமே நான் அணிகிறேன். எனக்குவேறு ஆபரணங்கள் தேவையில்லை. நான் உழைக்கின்ற பணம் போதும். மேலதிகமாக இலட்சங்கள் தேவையில்லை’என்று வெளிப்படையாக உறுதியாக அவள் கூறினாள். அவளுடைய திருமணம் நின்றுபோனது.

‘ஆம்பிள மாதிரி...’

‘தான் உழைக்கிறன் எண்ட திமிர்....’

‘அடங்காப்பிடாரி...தான் சொல்லுறதுதான் சட்டமெண்டு நினைக்குது...’ அவள் பற்றிய விமர்சனக்கருத்துகள் அவளின் காதுபடவே ஒலித்தன.



# அகலமறுக்கும் அறியாமை இருள் அகல வேண்டும்

இன்னுமொருபெண், தன்னுடன் கூட வேலைசெய்பவன் திருமணம் செய்யவிரும்புவதாய்க்கேட்டான். அழகு, படிப்பு, தொழில் நிறைந்தவன். நல்லவன். அவள் அவனைத்திருமணம் செய்ய சம்மதித்தாள். அவனுக்கும் ஓர் அக்கா இருந்தாள். அவளுக்கும் ஓர் அக்கா இருந்தாள். இரு அக்காக்களும் திருமணம் செய்யும்வுரை இவர்கள் காத்திருக்கவேண்டும். இருவரும் சம்மதித்தார்கள்.

வேலை செய்யும் இடத்தில் இருவரது உறவும் தெரிய வந்தது. வாழ்த்துக்கள் கிடைத்தன. நாளடைவில் அவனிடம் மாற்றங்கள் தெரிந்தன. புறத்தோற்றத்திலிருந்து அவனின் அகநிலை வேறுபட்டு இருப்பது புரிந்தது.

‘அவளுடன் பாலுறவு கொள்ள வேண்டும்’ என்பதில் அவன் குறியாக இருந்தான்.

அவளோ அதை விரும்பவில்லை. திருமணம் என்பது சட்டரீதியான உறவாக்கப்பட்டு அதன் பின்னரே அவள் அந்த உறவை ஏற்றுக்கொள்ளலாம் என்றாள். அந்த முடிவில் அவள் உறுதியாகவும் இருந்தாள். விளைவு?.... அவனுக்கும் அவளுக்குமிடையிலான உறவு முறிந்தது. அவளைப்பற்றிய அவதூறான கதைகள் உருவாகின.

‘உவள் நடத்தை சரியில்லையாம்...வேலைசெய்யிற இடத்திலை வேலை செய்யிற பெடியளோடை அரட்டையடிக்கிறவளாம்....’

‘வழி தெருவெல்லாம் நிண்டு நிண்டு பெடியளோடை கதைக்கிறவளாம்....’

‘விரும்பியிருக்கிற பெடியனை சந்தேகப்படுகிறவளாம்....’இப்படிப் பலகதைகள்....

இப்படியான மனிதர்களைச்சுமந்திருக்கின்ற சமூகத்தில் எப்படித்தற்துணிவுகளும், தனித்தமுடிவுகளும் எடுக்கமுடியும். என்கின்ற கேள்வி எழுகின்றதல்லவா? இந்தக்கேள்வி நியாயமானதுதான். ஆனால், நான்கு மனிதர்கள் சொல்வதையே எமக்குரிய நற்சான்றிதழாக நாம் நினைக்கின்ற மனப்பக்குவத்தில்தான் இருக்கின்றோம். ‘போற்றுவோர் போற்றட்டும். புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றட்டும்’ என்று வாழும் மன உறுதியைப்பெற்றுவிடுவோமானால் எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ள முடியும். தங்களுடைய குறுகிய மனங்களையும் பல வீனங்களையும் திருத்திக்கொள்ள முடியாமல் அல்லது விரும்பாமல் மற்றவர்களையே குற்றம் சுமத்தித் திரியும் சுய நலமிகள் எப்போதோ ஒருநாள் திருந்தியே ஆகவேண்டும். இவர்களது அறியாமை இருள் அகல வேண்டும்.

அறியாமை இருள் அகன்றால் இந்தநாட்டிலே அனைவரும் சுபீட்சமாக வாழ ஏதுநிலை பிறக்கும்."காலம் காலமாக மனவுலக இருட்டுக்குள் முடங்கிக்கிடந்த பெண்ணினம் விழித்தெழவேண்டும்'' என்பது எமது தேசியத்தலைவர் அவர்களின் கூற்று. இக்கூற்றின் பால் எல்லோரும் விழிப்படைதல் அவசியமாகிறது.

ஆதி

## இப்படிச் செய்யலாம்...

சமையல் செய்யும் பெண்களின் உடைகளில் அடிக்கடி எண்ணெய்க்கறைபடும். அப்படி எண்ணெய்க்கறை பட்டால், கோதுமை மாவைச் சிறிது தடவிவிட்டுச் சற்று நேரம் கழித்துத் தண்ணீரில் கழுவி சுத்தப்படுத்தினால் போதும் கறை போய்விடும்!

* * *

கறி சமைக்கும்போது, காய்கறிகளையும் கீரைகளையும் துண்டு துண்டாக நறுக்கிய பிறகு தண்ணீரில் கழுவக்கூடாது. நறுக்குவதற்கு முன்பே அவைகளைக் கழுவிவிடவேண்டும். துண்டு துண்டாக நறுக்கிய பிறகு கழுவினால் அதில் உள்ள சத்துக்கள் போய்விடுகின்றன!

* * *

உங்கள் உடையில் துருப்பிடித்த கறை இருக்கிறதா? இருந்தால் அதைப் போக்க அந்தக் கறைகளின்மீது எலுமிச்சம்பழத்தின் சாறையும் உப்புத்தூளையும் வைத்துத் தேயுங்கள். சிறிது நேரம் காயவையுங்கள். தண்ணீரில் கழுவுங்கள் துருப்போய்விடும்!

* * *

பூச்சாடியில் வைத்த பூ விரைவில் வாடிவிட்டால் ஓர் அஸ்பிரின் மாத்திரையைப் பொடி செய்து அதைத் தண்ணீரில் போட்டுவிடுங்கள்; வாடியபூ தேறிப் புதுப்பூப்போல் தோன்றும். பல நாட்கள் வாடாதிருக்கும்.

* * *

தேவையான அளவு தண்ணீரில் ஒரு கரண்டி கிளிஸரினைக் கலந்து, இந்தக் கலவையில் பட்டுத்துணிகளை கழுவி உலர்த்தினால் சுருங்காமல் இருக்கும். இழைகள் விலகாமல் இருக்கும்.

* * *

## மங்கையரும் நாகரிகமும்

நாளொரு வண்ணமாக மங்கையரை
நாணமற்று அலைய வைக்கிறது நாகரிகம்
அரை குறைதான் அழகென்று
அரக்கப் பறக்க அலைகின்றனர் மங்கையர்
இருக்கும் அழகும் கெட்டு இரண்டும் கெட்டான் நிலையில்
நிலை தடுமாறியே நினைவு இழக்கின்றது நாகரிகம்
நியதி இது தானா நிலையை யார் மாற்றுவார்
கையெடுத்துக் கும்பிட வேண்டிய பெண்ணினமின்று
கைதட்டிக் கூப்பிடும் நிலை
மங்கையரின் மரியாதை இப்படியா
மாநிலத்தில் மதிக்கப்பட வேண்டும்.

சு.சிவாஜினி

## கிழங்கு சிப்ஸ்




**தேவையான பொருட்கள்:-**

மரவள்ளிக் கிழங்கு - 1கிலோ
மிளகாய்த் தூள் - 2கரண்டி
மிளகுத் தூள் - 1/2 கரண்டி
மஞ்சள் தூள் - 1கரண்டி
எண்ணெய் - 1லீற்றர்
உப்பு - தேவையான அளவு

**செய்முறை:-**

மரவள்ளிக் கிழங்கை தோல் உரித்து வட்டம் வட்டமாக சீவிக் கொள்ளவும்.

பின்னர் கிழங்கை எடுத்து அகலமான தட்டில் பரப்பி சிறிது நேரம் நிழலில் உலரவிடவும்.

பின்னர் தாச்சியில் காயவைத்த எண்ணெயில் இட்டு பொரித்து எடுத்து, வடிதட்டில் இட்டு, எண்ணெய் வடிந்ததும் வேறு பாத்திரத்திற்கு மாற்றவும்.

சூடாக இருக்கும் போதே, மிளகாய்த்தூள், மிளகு, உப்பு கலந்து நன்றாகக் குலுக்கி வைக்கவும்.

**குறிப்பு:-**

எண்ணெயில் போட்டவுடன் கொஞ்சம் பொன்நிறத்திற்கு மாறியவுடன் எடுத்து விடவும். அப்போதுதான் மொறு மொறுப்பாக இருக்கும்.

குமரகுரு பரிசுத் திட்டத்தின் 17 தொடக்கம் 20 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.

**பரிசுத்திட்டம் -17**
இ.சைலஜா,
புளியங்கூடல் சந்தி,
வேலணை மேற்கு
வேலணை.

**பரிசுத்திட்டம் -18**
ம.அஜந்தா,
தென்னிந்திய திருச்சபை வீதி,
சுதந்திரபுரச் சந்தி,
உடையார்கட்டு.

**பரிசுத்திட்டம் -19**
ஆ.கார்த்தியாயினி,
இல:-214,
பாண்டியன்குளம்,
நட்டாங்கண்டல்.

**பரிசுத்திட்டம் -20**
எஸ்.சுகந்தினி,
464/6ம் யூனிட்,
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

பரிசு பெறுவது தொடர்பான விபரத்தை நாங்கள் விரைவில் உங்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவோம்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்க ங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்த கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவைய ர்.*

*வீடு,*
*வெள்ளிநா ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்—22**

பெயர்:.................................................

முகவரி:...............................................

.........................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.


# தமிழர் வாழ்வில் நாட்டார் பாடல்கள்

கிராமங்கள் இயற்கைத்தேவி எழுந்தருளியிருக்கும் கோவில் என்றால் கிராம மக்கள் அத்தேவியை வழிபடும் அன்பர்கள்.

அவர்கள் எளிமை வாழ்வு வாழ்பவர்கள். உழைப்பொன்றே பெரும் செல்வம் என்று கருதுபவர்கள். இயற்கையாகவே கூரிய மதிப்பும் சமதாரமான பேச்சும் கொண்டவர்கள். இயற்கை அறிவும் கலையுணர்வுங் கொண்ட அவர்களின் உள்ளத்திலே, பல பல காரணங்களினால் உணர்ச்சிகள் தோன்றி கரைபுரண்டெழும் போது அவை பாடல்களாக வெளிவருகின்றன. அவை ஏடும் எழுத்தாணியுங் கொண்டு எழுதப்படுவன வல்ல. பரம்பரை பரம்பரையாகச் செவி வழியாகக் கேட்கப்பட்டு வாழ்பவை இலக்கண வரம்புக்குட்பட்டுச் சொற்சாலங் காட்டி மயக்குவன அல்ல, பாமர மக்களின் உள்ளத்துணர்ச்சியை உயிராகக் கொண்டு, கருத்தைத்தெற்றென விளக்கும் எளிமையோடு கூடி நடப்பவை. நாட்டு மக்களின் உள்ளத்திலிருந்து வெளிப்படுவன வாகையால், அவை அவை நாட்டார் பாடல் களெனப் பெயர்பெறுகின்றன.

நாகரிகம் மேம்பட்ட சமூகத்தினர், இசையிலக்கண அமைவோடு கூடிய சங்கீதத் திணைப் பண்பட்ட ஒரு கலையாகப் போற்றுவது போல நாட்டார் பாடல்களையும் போற்றிக் காக்கின்றனர். ஆதி மனிதன் தன் மன எழுச்சிகளை வெளிப்படுத்தி இன்பம் பெறுவதற்காக ஆடலையும் அதற்கேற்ப பாடலையும் கருவியாகக் கொண்டான். எழுத்தும் ஏடும் தோன்றுவதற்கு முன்னரே உண்டான அப்பாடல்கள் வாய்முறையாக எங்கும் பரவுகின்றன. நாகரிகம் வளர்ந்தபோது புலவர்களும் இசை வல்லோரும் அவற்றை பின்பற்றி இசையமைப்பும் தாளங்கட்டுங் கற்பனைச் செறிவும் சொல் நயமும், கொண்ட பாடல்களை இயற்றினர். வரையறை வாய்ந்த இலக்கண நெறி கண்டு உயரிய இசைக் கலையை வளர்த்தனர். எனவே நாட்டார் பாடல்கள் சமுதாயத்தின் மிக மூத்ததொரு கலையாவதோடு பண்பட்ட இசை வளர்ச்சிக்கு மூலாதாரமாகவும் விளங்குகின்றனர். அன்றியும் அவையாவும் பொது மக்களின் இதயப் போக்கு பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், ஆசைகள் என்பவற்றை அளவிடக் கூடிய அளவுகோல்களாகவும் விளங்குகின்றன. எனவே ஒரு நாட்டின் பண்பாட்டை அறிவதற்கு நாட்டார் பாடலைப் போன்ற உயரிய கருவி வேறில்லை எனலாம். நாட்டார் பாடல்களில் உன்னதமான ஆன்ம தத்துவம், சிருட்டித் தத்துவம் என்பன வியக்கத்தக்க கற்பனை வளத்தோடும் உவமைச் சிறப்போடும் வெளிப்படுத்தலைக்காணமுடியும். எளிமையோடு கூடிய அவற்றை விளங்கிக் கொள்வதற்கு உரையாசிரியர் எவரும் தேவையில்லை. இவ்வகை இயல்புகள் எல்லாவற்றிலும் மேலாக, உலக மக்கள் அனைவரின் உள்ளங்கள் ஒரே வகையாக இன்பத்திலும் துன்பத்திலும் இயங்குகின்றன. என்பதை நாட்டார் பாடல்கள் உணர்த்துகின்றன.

நாட்டார் பாடல்கள் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு வெளிப்படும் உணர்ச்சிகளைப் பொறுத்து பல வகையினதாகப் பிரிக்கப்படுகின்றன. உயரிய கருத்துக்களையும் தத்துவங்களையும் கொண்டனவாய், பாமர அல்லாத சிறிய் நாகரிகம் படைத்தோரிடையே வழங்கி வரும் பர்டல்கள் ஒருவகையான, விழாக்காலங்



களில் ஆனந்தக்களிப்போடு பெண்கள் வாயினின்றுஞ் சமயோசிதமாகப் பிறக்கும் பாடல்கள் பலவுண்டு. இவை இன்னொரு வகையின. கலைகளையும் சரித்திர சம்பந்தமான வீரர்களின வீரச் செயல்களையும் அடிப்படையாகக் கொண்டு உணர்ச்சிப் பெருக்கோடு பாடப்படுவன இன்னொரு வகையின. தாய்மார்



அருமருந்தனன் தமது பச்சிளங் குழந்தைகளைக் கண்வளரச் செய்வதற்காக மெல்லிசையோடு பாடும் தாலாட்டுப் பாடல்கள் பிறிதொரு வகையென, காதற் சுவையும் நகைச்சுவையும் உயிரோட்டமாக மிளிர நெஞ்சை அள்ளும் திறங்கொண்டனவாய் பாடல்களும் வழக்கினுள். பொழுது போக்காகவும் தெய்வ வழிபாட்டுக்காகவும் பாடப்படும் பாடல்கள் அநேகம் கும்மி, கோலாட்டம், அம்மானை, காவடிச்சிந்து, தென்மாங்கு, மாரியம்மன் பாட்டு, வில்லுப்பாட்டு என்பன அவ்வகையைச் சேர்ந்த நாட்டார் பாடல்கள். இவை தவிர இடையர், உழவர், குறவர், மீனவர், வண்டிக்காரர் முதலிய தொழிலாளர் தொழில்களைச் செய்யும்போது சோர்வு தோன்றாவகையிற் பாடப்படுவன வேறொரு வகையின. இறந்தோரை நினைத்து நெஞ்சில் நிறைந்த துயரத்தை வெளிப்படுத்தும் முறையில் கிராமப் பெண்கள் கூட்டமாகச் சேர்ந்து புலம்பும் ஒப்பாரியும் நாட்டார் பாடல்களில் ஒரு தனிவகையின.

மருத நிலத்தைச் சேர்ந்த கிராமங்களிலே பரந்த கழனிகளிலே வேலை நடைபெறும் போது உழவர், உழத்தியர் வாயினின்று வெளிவரும் பாடல்களிலே காதல் கொஞ்சும் நகைச்சுவை விஞ்சும். அது ஐப்பசி மாதக் கடைசிப்பகுதி வயல் வரம்பை மேவிநிற்கும் வெள்ளக்காட்டின் மேலே பசிய நெற்பயிர்கள் வாடைக் காற்றிலே அசைந்து நிற்கின்றன. அங்கே பெண்கள் பலரும் ஆண்கள் சிலருமாகக் களை எடுக்கின்றனர். அவர்களோடு சேர்ந்துழைக்காது வயல்வரம்பிலே நின்று பெண் ஒருத்தியை சுட்டி வேடிக்கை செய்கின்றான் கட்டிளங்காளை ஒருவன். அவன் பெயர் பொன்னுச்சாமி அவன்,

"கண்ணாடி வளையல்
போட்டு
களை எடுக்க வந்த
புள்ளே
கண்ணாடி மின்னலிலே- உன்
களையெடுப்புப் பிந்துதடி' என்று

பாடுகின்றான் உடனே அவள்,

'வாய்க்கால் வரம்புச் சாமி
வயற்காட்டுப் பொன்னுச்சாமி
களையெடுக்கும் பெண்களுக்கு காவலுக்கு
வந்தசாமி"

என்று பதில் சொல்கிறாள். அந்தப் பதிலே கேலியும் கிண்டலும் இழைந்தோடிக் கிடக்கின்றன. இதனோடு அறுவடைக் காட்சி ஒன்றினையும் காணல் நன்று. நெற் பயிர் கதிர் சுமந்து கல்வியில் வல்ல சான்றோர் போல தலைவணங்கிக் கிடக்கிறது. கணபதியையும் முருகனையும் வணங்கி அரிவாள் எடுத்து அரிவு வெட்டத் தொடங்கி விட்டனர் உழவர், அவர்களில் ஒருவன்.

"மட்டுருக்காலே அரிவாழுஞ் செய்து
மாவிலங் கம்பிடி தன்னிலிறுக்கி"

என்று குரல் கொடுக்கிறான். உடனே மற்றவர்கள் எல்லோரும் சேர்ந்து அக் கன்னியைப் பாடுகிறார்கள். தொடர்ந்து "தெந்தன தெந்தன" தென்ன என்ற தாளக்கட்டு ஒரே குரலில் ஒலிக்கிறது.


தாலாட்டுப் பாடல்கள் கிராமத்துக்கு கிராமம் வேறுபட்டு பல பல பொருட்களுடையனவாய் காணப்படுகின்றன. தாய் ஒருத்தி ஊரார் தன்னை மலடி என ஏசாமல் வந்துதிச்ச தன் மகனை தாலாட்டுகின்றாள்.

"மலடி மலடி என்று மாநிலத்தோர்
ஏசாமல் மலடிக்கொரு குழந்தை மாதவனார்
தந்த பிச்சை. இருளி இருளி என்று இருநிலத்
தோர் ஏசாமல் இருளிக்கு ஒரு குழந்தை
"ஈசுவரனார் தந்த பிச்சை"

என்று தன் உள்ளத்து உணர்ச்சிகளை எல்லாஞ் சேர்த்துப் பாடுகிறாள். கிராமங்களிலே திருமண வைபவங்கள் மிகச் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அவ் வைபவங்களில் மணமகளுக்கு அறுகரிசி இடுவது குறிப்பிடத்தக்கதொன்று. அச்சம்பவத்தை ஒட்டி

"அறுகரிசி தானிடுங்கோ அதற்குரிய பெயர்கள்
எல்லாம் வாரியிறையுங்கோ கிளிமொழியாள்
பைங்கிளிக்கு ஆள் போல் தழைத்து அறுகு
போல் வேரூன்றி மூங்கில் போல் சுற்றம்
முசியால் வாழ்த்திடுங்கோ"

என்று மனம் மிக மகிழப் பாடும் குரல் கேட்கிறது ஒரு வீட்டில். அவ் வீட்டுத் தலைவன் இறந்து விட ஊர்ப் பெண்டிரனை வரும் அங்குகூடி ஒப்பாரி சொல்லி புலம்புகின்றனர். அவர்களில்



ஒருத்தி குரல் எடுப்பாக ஒலிக்கிறது.

"பொழுதாய்
இலங்குவாயே- நீயும்
பொழுது பட்டால் மங்காயே
நிலவாய் இலங்குவாயே- நீயும்
நிலவு பட்டால் மங்காயே.

இவ்வித நாட்டார் பாடல்கள் இலக்கியத்துறையில் பெரும் அளவு ஆதிக்கம் பெற்றுள்ளன. புலவர்களும் இசை வல்லோர்களும், பக்தர்களும் நாட்டார் பாடல் இசை முறையை தருவிப் பல பல பாடல்களை இயற்றி உள்ளனர். சிலப்பதிகாரத்திலே காணப்படும் வரிப் பாடல்களும் பல வகைக் குரவைகளும் நாட்டுப் பாடல்களை தழுவியனவே. மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தேனில் வரும் அம்மானையும் அத்தகையதே. கோபால கிருஸ்ண பாரதியாரும் சுப்பிரமணிய பாரதியாரும் நாட்டுப் பாடல்களில் பெருகிவழங்கிவரும் சிந்துகளாக கவரப்பட்டு அவ் இசையமைப்பை பின்பற்றுகின்றன. சுருக்கக் கூறின் வாய்மொழி இலக்கியமாகிய நாட்டுப் பாடல்கள் பாமர மக்களின் உணர்ச்சியிலுதித்து எளிமையோடும் இசை அமைப்போடும் தாளலயத்தோடும் கூடி உலாவுகின்றன. அன்றியும் இலக்கண நுட்பம் கொண்ட இசைக் கலை வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைந்துள்ளன. எனவே இத்தகைய சிறப்புடைய நாட்டார் பாடல்களை தமிழர்களாகிய நாம் பேணிக் காப்பது அனைவரதும் பெருங்கடனாகும்.

**பொன் - பரன்**

---

# எண்ணங்களே மனித வாழ்வை நிர்ணயிக்கின்றது

மனிதன் இவ்வுலகில் பிறக்கின்றான், வாழ்கின்றான், இறக்கின்றான், இது இயற்கையின் நியதி. இதே வழியில்தான் தாவரங்களும், பூச்சிபுழுக்களும், மிருகங்களும் தங்களின் காலங்களை கடத்துகின்றன. ஆனால், மனிதன் என்பதற்கு அவனுடைய ஆறாவது அறிவுதான் அத்தாட்சியாகவுள்ளது. இவ் ஆறாவது அறிவுதான் கற்பனைச்சக்தியாகும். இதிலிருந்தே ஒவ்வொரு மனிதனுடைய சொல், செயல், எண்ணம் என்பன மாறுபடுகின்றன.

நாற்பது லட்சம் ஆண்டுகளிற்கு முன்பு தோன்றியது தான் இவ் மனிதவர்க்கம். ஒவ்வொருமனிதனுக்கும் கலை, கலாசாரம், பண்புகள், பழக்க வழக்கங்கள், மொழி, தொழில் திறமை என அனைத்துமே மாறுபடும் தன்மையுள்ளது.

ஆனால், எந்த மனிதனையும் நிர்ணயிப்பது அவனது எண்ணங்களே. எமது எண்ணங்கள் தூயனவாக இருந்தால், நாம் இவ் இயற்கையோடு ஒன்றிப்போகின்றோம் எனக்கருதமுடியும். இவ உலகமே ஒரு ஒழுங்கிலேதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

உதாரணமாக ஒரு நாளில் நம் இருதயம் 103,680 தடவைகள் துடிக்கின்றன, இரத்தம் ஒரு நாளில் 168,000,000 மைல்கள் ஓடுகின்றது. ஒரு நாளில் நாம் 22,040 தடவைகள் சுவாசிக்கின்றோம். இவை அனைத்தும் நம் உடம்பு செய்யக் கூடிய ஒழுங்குகள். இதில் ஒரு தடங்கல்கள் ஏற்படுமாயின் அவன் நோயாளியாகக் கருதப்படுவான்.

எனவே நாம் சரியாக இருக்கும் வரை இந்த உலகமும் நமக்குச் சரியாக இருக்கும். எந்த விநாடியிலிருந்து நாம் தடம்புரள்கின்றோமோ அந்த விநாடியே இந்த உலகமும் நமக்கு விரோதமாகச் செயற்பட ஆரம்பித்துவிடும்.

செடியானது வித்திலிருந்து முளைப்பது போன்று மனிதனுடைய ஒவ்வொரு செயலும் அவனுடைய எண்ணத்திலிருந்தே உருவாகின்றது. எமது எண்ணங்களை கடினமான நிலையிலும், குழப்பமான நிலையிலும், வைத்திருக்கும் வரை மன இறுக்கம் அதிகமாகும். கடந்த காலத்தைப் பற்றிக் கவலைப்படுவதாலோ, அல்லது நிகழ்காலத்தைப் பற்றி அச்சப்படுவதாலோ, எந்தப் பலனையும் நீங்கள் அடைந்துவிட முடியாது. நிகழ்காலம் தான் வருங்காலத்திற்கு அடிப்படை என்கின்ற உண்மையை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சிலருடைய மனம் எப்பொழுதுமே முரண்பாடாகவே சிந்திப்பதற்கான காரணமே அவர்களுடைய பழைய எண்ணங்கள் தான். எமது பழைய எண்ணங்களைச் செயலிழக்கச் செய்வதற்கு, புதிய புதிய சிந்தனைகளை மீண்டும், மீண்டும் நினைக்க வேண்டும். அதற்கு நமது மனதிற்கும், நமக்குமிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் மூலம் ஒவ்வொரு மனிதனுடைய மன ஆற்றலும் வெளிப்படும்.

ஒரு மனிதனின் வாழ்வில் துன்பமும், தோல்வியும் எப்போது நெருங்குகின்றது என்றால் மனிதன் மனிதனாக வாழாதவரை இன்பமும், வெற்றியும் கிடைக்காது. நாம் வெற்றிபெற வேண்டுமாயின் துன்பங்களையும் எதிர்ப்புக்களையும், தடைகளையும், தோல்விகளையும் நாம் வெற்றிகொண்டேயாகவேண்டும்.

விடா முயற்சி மூலமே வெற்றிபெறமுடியும். விடா முயற்சிக்குத் தேவை பொறுமை, மனஅமைதி, நிலைகுலையாமை, சுறுசுறுப்பு, சவால்களை எதிர்கொள்ளும் துணிவு என்பன இருக்க வேண்டும். நீங்கள் துணிவாளர்களாக இருக்க விரும்புவீர்களானால், துணிவாளர்கள் போன்று நடக்க முயலுங்கள்! உங்களுடைய முழு நோக்கத்தையும், அதே இலட்சியத்தை அடைவதற்காகப் பயன்படுத்துங்கள். அச்சம் இருந்த இடத்தில் விரைவில் துணிச்சல் குடிபுகுவதைக் காண்பீர்கள்.

எனவேதான் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய எண்ணங்களையும், சொல்லையும், செயலையும், எந்த அளவிற்கு உறுதியாகவும், நம்பிக்கையாகவும், விடாப்பிடியாகச் செய்கின்றானோ அவனே சிறந்த நியதியில் அமைந்த மனிதனாவான்.

**த.யாழ்வேங்கை**

# கல்வெட்டு

தெரிந்த ஒருவருடன் இன்னொருத்தர், போனவாரம் வீட்டுக்குவந்திருந்தார். ஒரு நினைவு மலரை அச்சடிப்பதற்கு உதவும்படி தெரிந்தவர் கூட வந்தவர் சார்பாகக்கேட்டார். இருவருக்கும் வயது ஏறக்குறைய இருபத்தைந்திற்குள் தானிருக்கும்; இளைஞர்கள்.

இறந்தவர் ஒரு டொக்ரர். டொக்ரரின் மகன்தான் கூடவந்தவர் என்று பேசிக்கொண்டிருக்கும் போது சொன்னார்கள். எனக்கும் அந்த டொக்ரரைத் தெரிந்திருந்தது. ஒருதடவை அவரிடம் மருந்து




வாங்குவதற்காகப் போயிருந்தேன். நல்ல மனிதராகத்தெரிந்தார். தெளிவாக எங்களின் உடல் நிலையைக் கேட்டறிந்தார். நன்றாகப்பரிசோதித்தார். மருந்து எழுதிக்கொடுத்தார். மேலதிக சிகிச்சைக்கு வேறிடத்தில் தொடர்புகொள்ளும்படி வழி காட்டினார்.

தனியார் வைத்திய சேவையில் அவர் ஈடுபட்டிருந்த போதும் அதிக கட்டணம் எடுக்கவில்லை. இப்போது அவர் இறந்துவிட்டார் என்றறிந்தபோது மனம் கூடுதலாகத் துயரப்பட்டது.

அவருக்கு நினைவு மலர் அச்சிடுவதற்காக அவருடைய மகன் வந்திருக்கிறார்.

எனக்கு நினைவுமலர்களை அச்சிடுவதில் ஈடுபாடில்லை. அவற்றினால் நினைவுகளைச்சேமிக்கவும் முடிவதில்லை. பகிரவும் முடிவதில்லை. ஏதோ சம்பிரதாயத்துக்கு அச்சிடுவதுபோல அடிக்கிறார்கள். கட்டாயம் அந்தியேட்டிக் கிரியைகளின் போது நினைவு மலரை வெளியிட்டாக வேண்டும் என்றமாதிரி அதற்காக சிரமப்படுகிறார்கள்.

அடிப்படையில் எல்லா நினைவு மலர்களும் ஒரே மாதிரியாகத்தானிருக்கின்றன. பெயரும் பிறந்த ஊர், வாழ்ந்த இடம், தொழில், பிள்ளைகள் என்பவற்றில்தான் வேறுபாடுகள். மற்றும்படி ஒரே விடயத்தையே பார்த்து ஒவ்வொருவரும் நினைவு மலரை உருவாக்குகிறார்கள். சில நினைவு மலர்களில் திதி வெண்பா எனப்படுகின்ற இறந்தவரின் நாள் பற்றிய பாடல் கூட ஒரேமாதிரியிருக்கிறது. ஒரு நினைவு மலரைப்பார்த்து வேறொரு நினைவு மலரைத் தயாரிப்பதைப் பார்த்திருக்கிறேன்.

எழுதுவதில் மட்டும்தான் இந்த ஒரே மாதிரித்தன்மையென்றில்லை. அச்சிடுவதிலும் அமைப்பிலும் கூட ஒரே மாதிரித்தனந்தான். இது சலிப்பூட்டுவதில்லையா? இப்படிச் செய்வதன் பொருள் என்ன? அவசியமென்ன? என்ற கேள்விகள் ஆயிரமுண்டு.

இப்போது நினைவு மலர் ஒன்றை அச்சிட்டு முடிப்பதென்றால் அதற்கும் கணிசமானளவு காசு வேண்டும். அவ்வளவு தொகையான காசைச் செலவழித்து, நேரத்தைச் செலவழித்து, அவரை, இவரைப்பிடித்து சிரமப்பட்டு அடிக்கப்படும் நினைவு மலர்கள் எந்தச் சேகரிப்புமில்லாமல் கையிலும் காலிலும் இழுபடுவதைப் பார்த்திருக்கிறேன். ஏன் நீங்கள்கூடப்பார்த்திருப்பீர்கள்! சில நினைவு மலர்கள் அந்தியேட்டியன்றே கைதுடைக்கவும் படுகிறது. இது எவ்வளவு மோசமான காரியம், அவ்வளவுக்கு நினைவு மலர்கள் பெறுமதியற்றவையாகிவிட்டன.

சேகரிக்க வேண்டும் என்ற உணர்வைத் தரத்தவறிவிட்டன. நினைவுமலரை 'கல்வெட்டு ' என்பார்கள். அந்தளவுக்கு அது அழியாச்சுவடானது. ஆனால், நமது சூழலில்? எங்களுக்குத் தெரிந்தவர்கள் அநேகரின் நினைவு மலர்களை அவர்களுடைய நினைவுச் சடங்குகளில் வாங்கியிருக்கிறோம். அதில் எத்தனையை மிகக் கவனமாகப் பாதுகாத்து வருகிறோம். அல்லது அக்கறையுடன் சேகரித்துள்ளோம்? அப்படிச் சேகரித்திருப்பவர்களும் வேறொரு சந்தர்ப்பத்தில் ஒரு நினைவு மலரைத் தயாரிக்கவேண்டி வந்தாலும் ஒருமாதிரிக்கு இருக்கட்டுமே என்றதாகத்தான் வைத்திருக்கிறார்கள்.




உண்மையில் ஈடுபாட்டுடன், நல்ல மதிப்புடன் நினைவு மலர்களைச்சேகரித்திருந்தால் சந்தர்ப்பங்களில் அவற்றையெடுத்துப் படிப்போமல்லவா. ஒருவருடைய நினைவுகளை மீட்டுவதில் எவ்வளவு நினைவிருக்கிறது? நினைவுகள் வாழ்வை உயிரோட்டமுள்ள தாக்குகின்றனவே. நினைவுகள் தானே நம்மை நமக்கே உணர்த்துகின்றவை. நாம் யார், நாம் எங்கிருக்கிறோம். நமது காலமென்ன, நமது செயலென்ன, நமது வாழ்வின் சுவடென்ன, என்றெல்லாம் சொல்கிறவை நினைவுகள்தானே. நினைவுகளில்லாதவன் காற்றில் பறக்கும் பஞ்சாகிவிடுவான். எம்முடைய பெயரே நினைவுதானே ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கிறது. எல்லாவற்றையும் மதிப்பிட வைப்பதிலும் நினைவுகளுக்கே அதிகப் பலம்.

படித்த காலம், பழகிய மனிதர், வாழ்ந்த வீடு, திரிந்த வீதி எல்லாவற்றையும் அடையாளப் படுத்துவது எது? நினைவுகளல்லவா!

நினைவுகள் ஒரு வகையில் வலியைத் தருவன; துயரத்தை மூட்டுவன. நினைவின்றிய மனம் ஏனில்லாமற்போனது என்று அப்போது தோன்றும். இன்னொரு வகையில் நினைவுகள் இனியவையாக இருக்கின்றன.

நிகழ்காலம் என்பது எப்போதும் ஏதோ ஒரு வகையில் பதற்றமாயிருக்கிறது. அது பாடுகளோடும் சிரமங்களோடும் அலைச்சல்களோடும் நகர்கிறது. சில புள்ளிகளாக மகிழ்ச்சி வந்து வட்டமிட்டு மறையலாம். வெற்றி வந்து கைகுலுக்கிவிட்டுப் போகலாம். ஆனால், நிகழ்காலத்தின் நகர்வு எப்போதும் ஏதோ ஒருவகையில் நெருக்கடியுடையதாகவே இருக்கும். நிகழ்காலத்தைக் கடந்துவிட்டால் பிறகு அது நினைவுக்காலமாகி விடுகிறது. கடந்த காலத்தின் நினைவு எப்போதும் மனதில் ஒரு இதத்தையே தரும். நினைவென்பதே கடந்த காலம்தான். ஆக நினைவுகளின் சேமிப்பாகிய நினைவு மலர்களில் பெரும்பாலானவை அப்படியிருப்பதில்லை. சிறிதாக வாழ்க்கைக் குறிப்பு, பிறகு தேவாரம், திருவாசகம், வாய்ப்பாடு, அல்லது தகவல் களஞ்சியம் என்பதுபோல கொஞ்சம், விடுகதை, கந்தசஷ்டி கவசம் அல்லது சரஸ்வதி பாமாலை என்பதாக அமைந்துவிடுகின்றன. முன்னுக்கு வைக்கப்படுகிற படங்கள் கூட ஒரேமாதிரியாகவே வடிவமைக்கப்படுகிறது. அது வேறுவிதமாக இருந்தாலும் எவ்வளவு சிரமப்பட்டாவதுஅதை ஒரேமாதிரியாக்கிப்போட்டு விடுவதிலேயே கவனமாயிருக்கிறார்கள்.

இதில் முக்கியமாக இரண்டுவிடயங்களைக்கவனிக்க வேணும்.

1. நினைவு




மலர் என்றால் என்ன?

அதன் உள்ளடக்கம் எவ்வாறு என்பது.

2.நினைவு மலர்களின் அமைப்பு. அச்சகத்தினருக்குரிய பொறுப்பு இதில் கூடுதலாகவுண்டு.

முதலாவது, ஒவ்வொரு மனிதனின் இயல்பும் தனியானது; வேறுபட்டது. ஒவ்வொருவரின் வாழ்க்கையும் புதிதானது. அதற்கதற்கென்று தனித்தனி அடையாளங்களுடையது. ஒரு நினைவு மலரைப் படிக்கும்போது குறைந்த பட்சம் ஒருவரைப் பற்றிய அடையாளத்தை, இயல்பை,சிறப்பை, மனஒழுங்கை, வாழ்க்கையை, வாழ்க்கைபற்றிய கண்ணோட்டத்தை அறிய வேண்டாமா?

நினைவு மலரொன்றைத் தயாரிக்க இன்றும் பழைய மாதிரியையே பின்பற்றத் தேவையில்லை.

இறந்தவருடன் தொடர்புள்ளவர்களிடம் அவர்களுடைய நினைவுப் பரப்பிலும் மதிப்பீட்டிலும் இறந்தவர் பற்றிய நினைவைச் சேமிக்கலாம். எல்லோரிடமும் முடிந்தளவுக்கு ஒளிப்படங்களை (Photo) வாங்கிப்போடலாம். அவர்சேகரித்த பொருட்கள், டயறிக் குறிப்புகள், அவருடைய உழைப்பின் அடையாளங்கள் என்பவற்றை பதிவாக்கலாம். இப்போது பரந்தளவில் நினைவுச்சேகரிப்புச் செய்யும் போது ஒரு மனிதர் பற்றிய சித்திரம் எமக்குக் கிடைத்துவிடுகிறது. அவருடைய வாழ்க்கைபற்றிய அறிதல் நிகழ்கிறது. அவருடைய காலம் பற்றிய புரிதலும் அடையாளமும் தெரிகிறது. இப்படி ஒரு நினைவு மலர் வெளிவரும்போது நிச்சயம் அதை ஒவ்வொருவரும் சேமிக்க விரும்புவார்கள். எடுக்கும் முயற்சியும் பலனளிக்கும். மெய்யான அர்த்தத்தில் நினைவு மலர் என்ற பெயரும் பொருள்பெறும். இறந்த மனிதருக்கான மதிப்பும் அதுதான். இதை இன்னும் விரிவாகப் பார்க்கலாம்.

இரண்டாவது அச்சகத்தின் பிரச்சினை. பொதுவாக நினைவு மலர், திருமண அழைப்பிதழ் போன்றவற்றுக்கெல்லாம் எல்லா அச்சகங்களும் இலகுவான வாய்ப்பாட்டை வைத்திருக்கின்றன முன்வந்ததை அடியொற்றி அச்சிடுவது. இதனால் அச்சகத்தினருக்கு லாபமுண்டு. ஒரு பக்கத்தயாரிப்புக்கு எடுக்கப்படும் கட்டணத்தை எப்படியோ கணக்குப் போட்டு எடுக்கிறார்கள். ஆனால், பழைய அமைப்பில் சிறுமாற்றம் மட்டுமே செய்யப்பட்டிருக்கும். அடுத்தது, புதிதாக ஒன்றை அச்சிட்டுக் கொடு[illegible] துணிவதும் இல்லை. விரும்[illegible] கிடையாது. எல்லாம் [illegible]து நினைவு மலர்களை [illegible]ோருட்படுத்தாத அளவுக்கு உருவாக்கிவிட்டன.

ஆனாலும் வந்திருந்தவர்கள் எப்படியாவது ஒரு கவிதை எழுதித்தரும்படி என்னிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

மாறுதலாக வந்திருந்த நினைவு மலர்களில் சிலதை எடுத்து அவர்களிடம் காட்டினேன். நன்றாகத்தானிருக்கிறது. ஆனால், இப்படி அடிப்பதற்கு அச்சகத்திலும் தயங்குவினம். வீட்டிலும் மற்ற மாதிரி (ஒரேமாதிரி) அடிக்கத்தான் விரும்புவினம் என்றார்கள்.

அந்த மருத்துவரிடம் எனக்கு நிறைய மதிப்புண்டு. இப்போது வந்திருப்பதோ அவருடைய நினைவு மலரைத் தயாரிக்க உதவும்படி கேட்டு அவருடைய மகன்.

எனக்கு என்னுடைய நினைவுகளைச் சொல்வதைத் தவிர வேறுவழியிருக்கவில்லை. அதையே சொன்னேன்.

**வெளிவாசல்பாலன்**

# போராட்டமும் இடப்பெயர்வும்

உலகில் விடுதலை வேண்டிப் போராடிவரும் ஒரு விடுதலை இயக்கமும் அந்த விடுதலை வேண்டிப்போராடும் இனமும் தமது விடுதலைப்பயணத்தை அடைவதற்குள் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. அந்த சவால்களுக்குள் இடப்பெயர்வுப் என்பது மிகப்பெரும் சவாலாகும். உலகவிடுதலைப்போராட்டங்கள் மற்றும் உலகப்புரட்சிகள் இடம் பெற்ற நாடுகளில் ஏற்பட்டது போல் எமது தமிழீழ விடுதலைப்போராட்டமும் பல இடப்பெயர்வுகளை சந்தித்தது. அந்த இடப்பெயர்வுகளுக்குள் மிகப்பெரிய இடப்பெயர்வாக அமைந்தது 1995 ஆம்ஆண்டு ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற யாழ்குடாநாட்டு மக்கள் இடம்பெயர்வாகும். இவ்விடப்பெயர்வு குறித்து அக்காலப்பகுதியில் பல ஆய்வாளர்கள் பல்வேறுவிதமானகோணங்களில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். சில ஆய்வாளர்கள் இவ்விடப்பெயர்வு விடுதலைப்போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரப்போவதாக தமது ஆய்வுகளில் தெரிவித்திருந்தனர். வேறுசில ஆய்வாளர்கள் சிங்களப்பேரினவாத அரசும் இராணுவமும் எதிர்காலத்தில் எதிர்நோக்கவுள்ள ஆபத்துக்களையும் தோல்விகளையும் ஆய்வு செய்திருந்தனர். சில ஆய்வாளர்கள் உலக விடுதலைப்போராட்டங்களில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளுடன் ஒப்பிட்டும், அவ்விடப்பெயர்வுகளை எவ்வாறு அந்தந்த விடுதலை அமைப்புகள் தமக்குச்சாதகமாக்கி வெற்றிகொண்டன என்பது குறித்தும் ஆய்வுகள் மேற்கொண்டதோடு எவ்வாறு விடுதலைப்புலிகள் யாழ்குடாநாட்டு இடப்பெயர்வைத்தமக்குச் சாதகமாக்கி வெற்றிகொள்ளப்போகின்றார்கள் என்பது குறித்தும் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

சீனாவில்மாவோ சேதுங் தலைமையில் இடம்பெற்ற புரட்சியின்போது மிகப்பெரும் இடப்பெயர்வாக 12500 கிலோமீற்றர் தூரம் அந்தப்புரட்சி இயக்கமும் அப்புரட்சிக்கு ஆதரவு வழங்கிய மக்களும் இடம்பெயர்ந்த வரலாறு உண்டு. சுமார் 120000 பேர் இடம்பெயர்ந்த போது ஏற்பட்ட பஞ்சம்,கொடிய நோய், எதிரியின் தாக்குதல் என்பவற்றால் இறுதியில் 20000 பேர் மட்டுமே எஞ்சினார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் அசுரபலம் கொண்டவர்களாக போர்புரிந்து தமது நாட்டை சர்வதிகார ஆட்சியில் இருந்து மீட்டெடுத்தார்கள். இவ் இடப்பெயர்வானது "நீண்ட பயணம்" என வரலாற்றில் அழைக்கப்படுகின்றது.

இதேபோல் எரித்திரிய விடுதலைப்போராட்டத்திலும் எரித்திரிய விடுதலை அமைப்பும் அதற்கு ஆதரவு வழங்கிய மக்களும் பாரிய இடப்பெயர்வு ஒன்றிற்கு முகம்கொடுத்தனர். பின் வெற்றிகண்ட வரலாறு அப்போராட்டத்திற்கு உண்டு. அந்த வகையில் நாம் யாழ்குநாட்டின் மக்களின் இடப்பெயர்வினை எரித்திரிய நாட்டில் இடம்பெற்ற கெரண் இடப்பெயர்வுடன் ஒப்பிட்டு நோக்குவோம்.பல ஆயிரக்கணக்கான மக்கள், வயோதிபர், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி 1978 ஆம்ஆண்டு நவம்பர் மாதம் குளிர்மிகுந்த அதிகாலைவேளை எரித்திரியாவின் தலைநகரான அஸ்மாராவிற்கு அண்மையிலுள்ள நகரான கெரணைவிட்டு மக்கள் வெளியேறிக்கொண்டிருந்தனர். அவர்களுடன் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணிப்(EPLF) போராளிகளும் அம்மக்களுடன் சேர்ந்து வெளியேறிக்கொண்டிருந்தனர். அதாவது, இறுதிக்கேந்திர நிலையமான கெரணைவிட்டு அவர்கள் முழு அளவில் வெளியேறிக்கொண்டிருந்தனர். இதன்பின் 13 மணித்தியாலங்களில் எதியோப்பிய இராணுவம் கெரண் நகரைக்கைப்பற்றியது. இந்த இடப்பெயர்வு குறித்து கருத்து வெளியிட்ட ஈ.பி.எல்.எவ் இன் தலைவர் இசையாஸ் அவ்வேர்சி, தமது அறிக்கையில் தாம் மூலோபாய பின்வாங்கலை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார். இதன்பின்னர் ஏற்பட்ட கொள்ளைநோய், பசி பஞ்சம், எதிரியின் கோரமான விமானக் குண்டு வீச்சுத்தாக்குதல், மோசமான குளிரான காலநிலை என்பனவற்றுக் கெல்லாம் முகம்கொடுத்து போராளிகளும் மக்களும் இணைந்து தமக்குரிய விடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சோவியத்யூனியனின் உதவியுடன் எதியோப்பிய இராணுவம் மேற்கொண்ட கொடூரமான யுத்தத்தை போராளிகளுடன் மகளிர் படையாக, மாணவர் படையாக மக்கள் படையாக முழு அளவில் மக்கள் இராணுவப்பயிற்சி பெற்று இணைந்து எதிரியின் யுத்தத்தை முறியடித்தனர். இழந்த பிரதேசங்களை படிப்படியாக மீட்டெடுத்து மக்கள் படை தொடர்ந்து தக்கவைத்தது. கெரண் இடப்பெயர்வு மக்கள் புரட்சிக்கு வழிவகுத்தது.

1984 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஆறு வருடங்களின் பின்னர் ஈ.பி.எல்.எவ். டெஸ் இன்சி (Tessnci) நகரைக்கைப்பற்றி வடகரையோரத்தின் பெரும் பகுதியை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது. 1985 ஆம் ஆண்டின் மத்தியில் ஈ.பி.எல்.எவ். பரெண்டு படைக்களம் மீது கவசமயப்படுத்தப்பட்ட பாரிய தாக்குதலை மேற்கொண்டது. இத்தாக்குதலின் போது பெருமளவு டாங்கிகள் மற்றும் ஆட்லறிகள் பெருமளவு ஆயுத தளபாடங்கள் EPLFஅமைப்பால் கைப்பற்றப்பட்டன. இதனால் எதியோப்பிய இராணுவம் 42,000 சதுர மைல் பரப்பளவு கொண்ட பெருநிலப்பரப்பில் தற்காப்பு நிலைக்குத்தள்ளப்பட்டது. ஈ.பி.எல்.எவ். அமைப்பின் இத்தாக்குதலானது சர்வதேச மட்டத்தில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது. தமது பலம்வாய்ந்த கோட்டையாக இருந்த கெரணை இழந்த ஈ.பி.எல்.எவ். அமைப்பால் எவ்வாறு இத்தாக்குதலை செய்ய முடிந்தது என்று பல ஆய்வாளர்களும் அதிசயித்தனர். இந்த வெற்றிக்கெல்லாம் காரணம் போராளிகளின் தியாகமும் மக்களின் அர்ப்பணிப்புள்ள போராட்டப்பங்களிப்புமே ஆகும்.

இதேபோல் யாழ் குடாநாட்டைவிட்டு சுமார் 500,000 மக்கள் 1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மக்களும் புலிகளுமாக இடம்பெயர்ந்து வன்னிப்பிரதேசத்திற்கு வந்தபோது தமிழீழ விடுதலைப்போராட்டம் பல நெருக்கடிகளைச்சந்தித்தது. உணவுப்பஞ்சம், கொடியநோய், விமானக்குண்டுவீச்சு, எதிரியின் பாரிய படையெடுப்பு, பொருளாதார மருந்துத்தடைகள் எனப் பலநெருக்கடிகளுக்கு மக்களும் புலிகளும் முகம்கொடுத்தனர்.


எனினும் விடுதலைப்புலிகளின் வழிகாட்டலாலும் மக்களின் முன்னறிவு நடவடிக்கைகளாலும் உயிரிழப்புக்களை பெருமளவு தவிர்க்கக்கூடியதாக இருந்தது. வன்னியின் முல்லைத்தீவுப் பிரதேசத்தை முழுமையாக விடுவித்து வன்னித்தளத்தை போரியல் தளமாக மாற்றுவதற்குத் தேசியத்தலைவரின் நெறிப்படுத்தலில் 1996 ஆம் ஆண்டு ஓயாத அலைகள்-01 என்ற புலிகளின் இராணுவத்தாக்குதல்மூலம் முல்லை இராணுவமுகாம் முற்றுமுழுதாகத் தாக்கியழிக்கப்பட்டது. புலிகளின் இத்தாக்குதல் வெற்றி சர்வதேச ஆய்வாளர்களை ஆச்சரியப்படவைத்தது. எப்படி புலிகளின் போரியல் மையமாக இருந்த யாழ்குடா நாட்டை இழந்த பின் சர்வதேச நாடுகளின் உதவிகளின்றி ஒரு விடுதலை அமைப்பு ஒரு அரசின் பாரிய இராணுவ முகாமைத்தாக்கி வெற்றிகொள்ள்முடியுமென ஆய்வாளர்கள் ஆச்சரியப்பட்டனர். மேலும் வன்னி மண்ணைக்கூறுபோட சிங்கள இராணுவம் மேற்கொண்ட ஜெயசிக்குறு தாக்குதல் நடவடிக்கை தேசியத்தலைவரின் நவீன போரியல் தந்திரோபாயத் திட்டத்தினால் புலிகளும் மக்களும் இணைந்து முறியடிப்புச் சமரில் ஈடுபட்டனர். இதனால் ஜெயசிக்குறு நடவடிக்கை எதிரிக்கே அழிவைத்தேடிக்கொடுத்து தோல்விக்கு இட்டுச்சென்றது. இவ்எதிர் நடவடிக்கைத்தாக்குதலுக்கும் பிடித்த பிரதேசங்களைத்தக்கவைக்கவும் மக்கள் படையாக, எல்லைப் படையாக, சிறப்பு எல்லைப்படையாக மக்கள் புலிகளுடன் இணைந்து இராணுவப் பயிற்சிகள் பெற்று முழு அளவில் ஈடுபட்டனர். மேலும் 1999 இறுதியில் தலைவரால் தொடக்கப்பட்ட ஓயாத அலைகள் -03 நடவடிக்கை மூலம் ஜெயசிக்குறு முறியடிக்கப்பட்டதும் அதன் தொடர்ச்சியாக 2000 ஆம் ஆண்டு குடாரப்புத்தரையிறக்கம்மூலம் ஆனையிறவு இராணுவத் தளம் வெற்றிகொள்ளப்பட்ட நிகழ்வானது விடுதலைப்புலிகளின் போரியல் ஆற்றல் மற்றும் வளர்ச்சி தொடர்பாக சர்வதேச ஆய்வாளர்களை வியக்கவைத்தது. இடப்பெயர்வின் பின் இடம்பெற்ற போரியல் வெற்றிகளுக்கெல்லாம் காரணம் தேசியத்தலைவரின் நவீன போரிடும் திட்டங்கள், போராளிகளின் தியாகம், மக்களின் படைக்கட்டுமான எழுச்சியுமாகும்.

ஆனையிறவுப்படைத்தளம் விடுதலைப்புலிகளிடம் விழுந்ததை அடுத்து யாழ்குடாநாட்டில் நிலைகொண்டிருந்த இராணுவத்தின் இருப்பு நிலை கேள்விக்குள்ளாகியது. எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி கெரணை இழந்தபின் பரெண்டு(pareentu) படைத்தளம் மீது தாக்குதலை மேற்கொண்டு கைப்பற்றிய போது எவ்வாறு எதியோப்பிய இராணுவம் கெரணில் தற்காப்பு நிலைக்குத்தள்ளப்பட்டதோ அதேபோல் யாழ்குடாநாட்டை சிறிலங்கா இராணுவத்திடம் இழந்தபின் ஆனையிறவுப்படைத்தளத்தை புலிகள் கைப்பற்றியபோது யாழ்குடாநாட்டில் நிலைகொண்டிருந்த இராணுவம் ஒரு தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டது.

இப்படியாக விடுதலைப்போராட்டங்களில் இடப்பெயர்வுகள் ஏற்படும் போதெல்லாம் விடுதலை அமைப்புகள் மக்களை ஒன்றிணைத்துப்போராட்டத்தை வெற்றிகொண்ட வரலாறுகள் உண்டு. எமது விடுதலைப்போராட்டத்திலும் இவ் வரலாறு இடம்பெற்றுள்ளது.


நன்றி: வழிகாட்டி

# ஸ்ரீவோ கொடுத்த பரிசு மைக்கல் கிளார்க்



அவுஸ்திரேலியாவின் முன்னாள் அணித்தலைவர் ஸ்ரீவ்வோ அவ்வணிக்கு அளப்பரிய பரிசு ஒன்றை கொடுத்துச்சென்றுள்ளார். அந்தப்பரிசு, வேறு ஒன்றுமல்ல மைக்கல் கிளார்க் என்ற சொத்தாகும்.

22வயதான மைக்கல் கிளார்க்கடந்த வருடம் ஸ்ரீவோ ஓய்வு பெற்றபின் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டவராவார். இவர் அணிக்குவந்தவுடன் காட்டியிருக்கும் திறமைகள் ஸ்ரீவ்வோவின் இடத்துக்கு இவரை கொண்டு செல்லும் என்பதில் ஐயமில்லை.


இவ்வருட முற்பகுதியில் சிறிலங்காவுக்கு வருகை தந்த இவர் முரளிதரனின் பந்துவீச்சை நன்கு சுவைத்திருந்தார். அப்போது தனது துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி டேமியன் மார்டின், டெரன்லீமன் கட்டிச் ஆகியோரின் இடத்தைப் பிடிக்க விரும்பினார்.

அவுஸ்திரேலிய அணிக்கு புதுமுகமாக இவர் இருப்பினும் அவுஸ்திரேலிய ஏ அணியில் இவர் பங்குபற்றி பங்களாதேஷ் அணிக்கெதிராக 74 பந்துகளில் 94 ஓட்டங்களைப்பெற்றார்.

இவர் அனைத்து சுழற்பந்து வேகப்பந்துக்கேற்ற ஆடுகளத்திலும் முகம் கொடுக்கும் திறமை வாய்ந்தவர்.

அண்மையில் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட அவுஸ்திரேலிய அணியில் இடம்பெற்ற கிளார்க் முதல் டெஸ்ட்போட்டியில் (157) சதமடித்தார். அத்துடன் இறுதிப்போட்டியில் 6 விக்கட்டுக்களைப்பெற்றுத் தான் சகலதுறை வீரர் என்பதை அறிவித்துச்சென்றுள்ளார். இவற்றை நோக்கும் போது ஸ்ரீவ்வோவின் இடம் இவரைத் தானாகவே வந்தடையும்.

# கிரிக்கெட் உலகம் 'களுவிதாரண' வை மறக்காது



சிறிலங்கா கிரிக்கெட் அணி தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்குக் காரணமாக இருந்த வீரர் ஒருவரை இழந்திருக்கின்றது.

அவர் யாருமல்ல 1996ஆம் ஆண்டு சிறிலங்கா அணி உலகக் கிண்ணத்தை கைப்பற்றுவதற்கு துடுப்பாட்டத்தில் ஆடுகளத்தை அதிர வைத்தது மாத்திரமல்லாது, விக்கெட் காப்பில் சிறந்தவராக செயற்பட்டவருமான ரொமேஷ் களுவிதாரண.

கிரிக்கெட் வர்ணனையாளர்களால் லிட்டில்களு என வர்ணிக்கப்படும் ரொமேஷ் களுவிதாரண. விக்கெட் காப்பில் அவருக்கு நிகர் அவரே. அத்தனை திறமை வாய்ந்த இவர் காலப்போக்கில் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறியதால் அணியில் இருந்து நீக்கப்பட்டார். அதன் பின்னர் அவரால் அணியில் இடம் பெறுவதற்கு வாய்ப்புக்கிடைத்த போதும் நிலைத்திருக்கமுடியவில்லை.

இதனால் அணியில் இடம் பெறுவதற்கு கடுமையாக போராடிய களுவால் தனது திறமையை முன்னர் போல் காட்டமுடியவில்லை இதற்கு அவரது பணியை செவ்வனே செய்யும் குமார் சங்கக்காரவினால் களுவின் மீள்வருகை கேள்விக் குறியாகவே மாறியது.

விளையாட்டு என்றால் சிறந்த வீரருக்கே முன்னுரிமை. அந்த வகைக்குள் களு உள்ளடக்கப்பட்டவரா அன்றி ஓரம் கட்டப்பட்டாரா என்பது அறியப்படாத புதிருமல்ல.

சிறிலங்கா கிரிக்கெட் அணியை தூக்கி நிறுத்தியவர்களில் களுவிதாரணவுக்கு பெரும்பங்கு உண்டு என்பதை கிரிக்கெட் உலகம் மறந்து விடாது.

1969ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி பிறந்த ரொமேஷ் களுவிதாரண.

மொறட்டுவ புனித செபஸ்தியார் கல்லூரியின் பழைய மாணவரும் கிரிக்கெட் வீரருமாவார்.

கொழும்பு கிரிக்கெட் கழகம், காலி கிரிக்கெட் கழகம், செபஸ்ரினாஸ் கழகம் ஆகியவற்றின் கிரிக்கெட் அணிகளில் விளையாடிய ரொமேஷ் சாந்த களுவிதாரண, 1992,93 கிரிக்கெட் பருவகாலத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் மூலம் சிறிலங்கா கிரிக்கெட் அணியில் இடம்பிடித்தார்.

அப்போட்டியில் சதம் அடித்த களுவிதாரண இதுவரை 49 டெஸ்ட் போட்டிகளில் மூன்று சதம், 9 அரைச் சதம் உட்பட 1933 ஓட்டங்களை மொத்தமாக பெற்றுள்ளார்.

1996ஆம் ஆண்டு அர்ஜுனா ரணதுங்கவின் தலைமையில் உலகக்கிண்ணத்தை வென்றெடுத்த சிறிலங்கா அணியில் சனத் ஜெயசூரியவுடன் இணைந்து அதிரடி துடுப் பாட்ட வீரராகவும் விக்கெட் காப்பா ளராகவும் களுவிதாரண விளை யாடினார்.

இவர் இதுவரை 189 சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் விளையாடி இரண்டு சதம், 23 அரைச் சதம் உட்பட 3711 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

முதல் 15 ஓவரில் வேகமாக ஓட்டங்களை குவித்து வெற்றிக்காக பாடுபட்ட இவர்கள் போன்ற வீரர்களை கிரிக்கெட் உலகம் என்றுமே மறக்கமுடியாது.

---

(14 பக்கத்தொடர்ச்சி)

இப்படையணிகளின் போராட்டத்துடன் மட்டுமன்றி; தமிழீழ மகளிர் படையணி என்ற பொது அமைப்பிலும் இவர்கள் இருந்துள்ளனர். நிர்வாகம், அரசியல், பயிற்சிக்கல்லூரி பயிற்சியாளர்களாகவும் இருந்துள்ளனர். தலைமைச் செயலகம், நிதித்துறை, தொழில்நுட்பத்துறை, மருத்துவத்துறை, படைத்துறைகளிலும் பெண் போராளிகளினது செயற்பாடுகள் விரிந்து காணப்படுகின்றன. இப் பெண்கள் கனரக வாகனங்கள் செலுத்துபவராகவும் ( வின் 100 ரக உந்துருளி சூரியகலாவுக்கு தலைவரால் பரிசாக வழங்கப்பட்டது.) பலதரப்பட்ட ஆயுதங்களை **FNC.MAG.R.P.G.** டோபிடோ, 82 **M.M** மோட்டார் இயக்குபவர்களாகவும் திகழ்ந்துள்ளனர் இப் பெண் போராளிகள்.

''மனிதர்கள் போக நினைக்காத பாதைகளால் இவர்கள் போனார்கள். யாரும் செய்ய நினைக்காதவற்றைச் செய்தார்கள். உள்ளிருந்த படையினரை ஒரு உலுப்பு உலுப்பிவிட்டு எவரும் எதிர்பாராத பாதைகளால் திரும்பி வந்தார்கள்'' என்ற கூற்று வெளிக்காட்டுகின்றது.

தேசத்தின் வரலாறு புதைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சூழலில் பெண்களது வரலாற்றுத் தடங்கள் புறம்தள்ளப்படும் அநியாய காலத்தில் "விழுதாகி வேருமாகி'' எல்லாவற்றையும் தாண்டி உன்னத தலைவரின் பாராட்டுதலுடன் வெளிவந்திருப்பது வரலாற்றாய்வாளர்களுக்கும், எமது பரம்பரைக்கும் சான்று பகரும் ஓர் மைல்கல்லாகும். ஈழத்து இலக்கிய வரலாற்றை ஆராய முற்பட்டவர்கள் தமது இலக்கியங்களில் வரலாற்று நூல்களையும் இலக்கியங்களாகக் கொண்டுள்ளனர். அந்த வகையில் காலத்தின் தேவை கருதியும் எமது வரலாறு கருதியும் "விழுதாகி வேருமாகி" நூல் ஒரு காலகட்ட (10.10.1987 - 20.01.2001) வரலாற்றின் தகவல்களை எமக்களித்துள்ள சிறப்பாக பெண்களது செயல் திறன், ஆளுமை, சாதனை வரலாற்றை எமக்களித்துள்ளது.

''தோன்றில் புகழோடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்
றாமை நன்று.''

என்பது வள்ளுவர் வாக்கு. தேசத்தின் விடுதலைக்காக வீரகாவியம் படைத்த பெண் போராளிகள் யாவருமே புகழ் பூத்த பொக்கிஷங்கள். அவர்கள் ஒவ்வொருவரும் போர் நிகழ்த்தி சாதனை படைத்த நிகழ்வுகளுடன் வீரச்சாவடைந்த நிகழ்வுகளும் வீரச்சாவை தழுவிய பெண் போராளிகளினது விபரங்களும் மிகத்தெளிவாக சம்பவங்களாகவும், அட்டவணைகளாகவும் தந்துள்ளமை போராட்டத்தில் பங்கெடுத்த பெண்களையும் அவர்களைத் தாங்கிய இம் மண்ணின் பல பாகங்களையும் போர்முனைகளையும் வெளிச்சமிட்டுக்காட்டுகின்றது.

இந்த வரலாறு தொடர்ந்த கதையில் மாலதி படையணி பற்றிய செய்திகளே உள்ளன. இது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்த பெண் போராளிகளினது கள நிலவரத்துடன் இணைந்த வரலாறு மட்டுமே. இது முழுமையான ஈழப் போராட்டப் பெண்களின் வரலாறு அல்ல என்பது நூலாசிரியரின் கருத்துடன் இணைந்து மனதிற் கொள்ளவேண்டியதொன்றாகும். இவற்றிலும் மாலதி படையணிப் பெண்களின் இலக்கிய உலகம் பேசப்படவில்லை. இதில் குறிப்பாக புரட்சிகா, கப்டன் மனோ, கப்டன் ஜனார்த்தனி முதலிய படைப்பாளிகள் ஈழத்து இலக்கியத்திற்கும் தமது பங்கைச் செய்துள்ளனர். இதுவும் சேர்த்துப் பார்க்கப்பட வேண்டிய விடயமாகும்.

"எங்கள் காலத்தில்
ஒரு புதிய உலகம்
படைக்கப்படட்டும்
அநியாயங்கள் வரலாறு ஆகட்டும்
எங்கள் உலகம் வளர்வதென்பது
எங்களின் வளர்ச்சியாய்
என்றென்றும் இருக்கட்டும்.''

என்ற பெண் கவிதை வரிகள் குறிப்பிட்டவற்றை செயல்பெறவைத்த பெண்புலிப் போராளிகளின் வரலாறுகள் இன்னும் எழுதப்படவேண்டும். விழுதாகி வேருமாகி நூல் சரளமான மொழிக்கையாளுகையுடன், குறித்த சம்பவங்களை கண்முன்னே கொண்டுவரும் படியும் மனதிலே பெண் போராளி வீரச்சாவை அடையக்கூடாது தப்பிவிடவேண்டும் என்று கடவுளை மனதிலே வேண்டியபடி வாசிக்கத் தூண்டியது. மனதிலே ஒரு பதகளிப்பு இராணுவத்தின் முற்றுகைக்குள் புலிகள் அகப்பட்டுவிடக்கூடாது என்றும், எமது தேசத்தை, மக்களை, சின்னாபின்னப்படுத்தவெனப் புறப்பட்ட இராணுவம், அவனது படையணி வாகன ஆயுத அணிகள் முற்றாக சேதமாக்கியதை வாசித்தும் வாழ்த்துக் கூற வேண்டும் என்ற உள்ளக் கிளர்க்கைகளை ஏற்படுத்தத்தக்க வகையில் நேரடி வர்ணனைபோன்று தந்துள்ளமையும் ஒரு தொடர்ச்சியான சம்பவம் போன்று எதுவித இடர்பாடுமின்றி மொழியைக் கையாண்டுள்ள நூலாசிரியர்களின் திறன் பாராட்டு தற்குரியது.

''விழுதாகிவேருமாகி'' நூலில் புதியவேர்கள் புதிய மரங்களை தோற்றுவிக்கும். இம் மரங்கள் பல புதிய அத்தியாயங்களைத் தரவேண்டும். அவை சமூக பிரஞ்சை, சமூகமாயையில் கட்டுண்டு கிடக்கும் பெண்களினதும் ஆண்களினதும் தளைகளை, கட்டுக்களை நீக்கி தமிழீழத்தின் புதிய சமூகம் காத்திரமானதாக அமைய வழி சமைத்துத்தரவேண்டும்.


## வெள்ளிநாத வாசகர்களே...

உங்களிடமிருந்து வெள்ளிநாதம் வாரஇதழில் பிரசுரிப்பதற்கு ஆக்கங்கள் எதிர்பார்க்கிறோம.

சிறுகதை

கவிதை

கட்டுரை


என உங்கள் எண்ணப் பொறிகளுக்கு வடிவம் கொடுத்து எமக்கு எழுதி அனுப்புங்கள்.

உங்கள் படைப்புகளை எமக்கு அனுப்பவேண்டிய முகவரி.

ஆசிரியர், வெள்ளிநாதம்,

யாழ்.சாலை, கிளிநொச்சி.

மின்னஞ்சல் முகவரி: Weekly@Eezhanatham.com



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 04**

**பகுதி -22**

தங்கள் தங்கள் ஆளுமையினுடைய முழுமையை பாதுகாக்கும் விதத்திலான அவதானத்துடனேயே எவரும் தங்கள் முயற்சிகளை முன்னெடுப்பார்கள். இங்கே நாங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாவதையே செய்து கொண்டிருந்தோம். டிப்ஸ் குறிப்பிட்ட இந்தப் பொருட்கள் அதாவது இந்த அறையில் இருக்கும் பொருட்கள் அவனில் எந்தப் பாதிப்பையாவது ஏற்படுத்துவதோடு தொடர்புபடாதவை. எங்களுக்கிடையே இடம்பெறவிருந்த தொடர்பாடல்களின் இந்தக் கட்டத்தில் எங்களுக்கிடையே பகிர்ந்துகொள்ளப்பட்ட அனுபவங்களின் ஆக்கக் கூறுகளாகவும் அவை இருந்தன. டிப்ஸைப் பொறுத்தவரை இப்படி பகிர்ந்து கொள்வதென்பது பாதுகாப்பான ஒரு எண்ணக்கருவாக இருந்தது.

இடைக்கிடை அவன் என்னை ஏறிட்டுப்பார்த்தான். எமது பார்வைகள் சந்தித்துக் கொண்டதும் சடாரெனத் தனது பார்வையைத் திருப்பிக் கொண்டுவிடுவான்.

அவனது இந்த ஆரம்பச் செயற்பாடுகள், நிச்சயமாக, ஒரு வெளிப்பாடாகவே அமைந்தன. டிப்ஸ் மீது ஹெடா கொண்ட நம்பிக்கைக்கு நல்ல காரணங்கள் இருந்தன. உண்மையைச் சொல்வதானால் அவன் தன் கூட்டுக்குள் இருந்து வெளிப்படும் கட்டத்தில் இருந்தது மட்டுமல்லாமல் அவன் ஏற்கெனவே வெளிவரத்தொடங்கியுமிருந்தான் என்றே கூறலாம். அவனுடைய சிக்கல்கள் என்னவாக இருந்தாலும் உளவளம் குன்றியவன் என்ற லேபலை நாம் தூர எறிந்து விடலாம் என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது.

மணல் பெட்டியினுள் ஏறிக்கொண்டான். இரண்டு இரண்டாக வீரர்களின் பொம்மைகளை எடுத்து வரிசைகளில் நிறுத்தினான். பெட்டியில் இருந்த மணல் அவனது பாதணியினுள் சொரிந்தது. அவன் என்னை ஏறிட்டுப் பார்த்தான். தனது பாதணிகளை சுட்டிக் காட்டி விட்டு ஏதோ அனுங்கத் தொடங்கினான்.

"என்ன அது? உங்கட சப்பாத்துக்குள்ள மணல் போயிற்றுதா?" என்று கேட்டேன். அவன் தன் தலையை ஆமென்பது போல் ஆட்டினான் "உங்கட சப்பாத்துகளை கழட்டப் போறீங்களெண்டா கழட்டிவிடுங்கோ" என்றேன் நான்.





"ஓமோம்..." என்று கிசுகிசுப்பாக சொன்னாலும் அவன் பாதணிகளைக் கழற்றவில்லை. அதற்குப் பதிலாக அங்கேயே அமர்ந்துகொண்டு, அவற்றை வெறித்துப் பார்த்தபடி ஏதோ அனுங்கியபடியிருந்தான். நான் காத்துக்கொண்டிருந்தேன். இறுதியாக அவன் கதைத்தான். மிகுந்த முயற்சியோடு "நீங்கள் உங்கட சப்பாத்துகளை கழட்டப் போறீங்கள்" என்றான்.



"சப்பாத்துகளை கழட்ட வேணும் எண்டு நீங்கள் நினைக்கிறீங்கள். ஆனா நான் உங்களுக்கு உதவவேணும் எண்டு நினைக்கிறீங்கள். அப்படித்தானே?" என்றேன் நான்.

ஆமென்பதுபோல் அவன் தலையை ஆட்டினான். அவன் விரும்பிய ஒத்தாசையை நான் செய்தேன். அவனது சப்பாத்து நூல்களை அவிழ்த்து விட்டு சப்பாத்துக்களை கழற்றி விட்டேன். அவன், தனது பாதங்களால் மணலை மென்மையாகத் தொட்டான். சில நிமிடங்களில் பெட்டியில் இருந்து வெளியே வந்துவிட்டான். மேசையை நோக்கி நடந்து வந்த அவன் அதன் மேலிருந்த சிறு சிறு கட்டைகளை பார்த்தான். பின்பு மெதுமெதுவாக ஆனால் உறுதியான முறையிலே கட்டைகளை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கினான். அந்த அடுக்கு சிறிது ஊசலாடி விட்டு கீழே சரிந்து விட்டது. அவன் அதிர்ந்துபோய் தன் கைகளை இறுகக்கட்டிக் கொண்டான்.

"மிஸ் ஏ!" என்று என்னை அழைத்தான். அவன் எனக்கு ஒரு பெயரை சூட்டியிருந்தான். இதன் பின்பு என்னைக் குறிப்பிடுவதற்கு அந்தப் பெயரைத்தான் பயன்படுத்தினான். "எனக்கு உதவுங்கள்.... வேகமாக ..." என்றான் தொடர்ந்து.

"உங்களுக்கு நான் உதவவேணும் எண்டு நீங்கள் நினைக்கிறீங்கள்....அப்படியா?" என்று என் எண்ணத்தை சொன்னேன்.

"ஓ...மோ....ம்" என்றவனின் பார்வை விரைவாக என்பக்கமாக வந்து மீண்டது.

"சரி நான் என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீங்கள்?" என்று கேட்டு விட்டு, மீண்டும் "நீங்களே எனக்குச் சொல்லுங்கோ டிப்ஸ்" என்றேன்.

மேசைமேல் இருந்த கட்டைகளைப் பார்த்தபடியே அங்கேயே நின்று கொண்டிருந்தான். அவனது கைகள் இன்னமும் மார்புக்குக் குறுக்காக இறுகக் கட்டப்பட்டிருந்தன. டிப்ஸ் மௌனமாக இருந்தான். நானும் மௌனமாக இருந்தேன்.

அவன் என்ன நினைக்கிறான்? அவன் எதை எட்ட முயல்கிறான்? இப்போது எதைச் செய்தால் டிஸ்ப்சுக்கு மிகவும் உதவியாக இருக்கும்? அவனைப் புரிந்து கொள்வதற்கான எனது நேர்மையான முயற்சியை அவனுக்கு தெரியவைக்க விரும்பினேன். அவன் உண்மையில் எதை அடைய முயற்சிக்கிறான் என்று நான் அறிந்திருக்கவில்லை. எமக்கிடையே உருவாகிக் கொண்டிருந்த உறவின் இந்தக் கட்டத்திலே அவனுக்கும் அது தெரிந்திருக்காது.

(தொடரும்....)

---



## திரைவிமர்சனம்



# 7/G ரெயின்போ காலனி

கொஞ்சம் மாறுதலான படங்களைத் தந்த செல்வராகவன் இப்போது 7/G ரெயின்போ காலனி என்ற படத்தைத் தந்திருக்கிறார். செல்வராகவனின் இதுவரையில் வெளிவந்த படங்கள் ஏதோ வகையில் கவனத்தைப் பெற்றிருக்கின்றன. 7/G ரெயின்போ காலனி இதில் இன்னும் கூடுதலான கவனத்தை ஈர்க்குமளவுக்கு வந்துள்ளது.

அண்மையில் வெளிவந்து கொண்டிருக்கும் படங்கள் தமிழ்ச் சினிமாவின் பொதுவான அடையாள அம்சங்களைவிட்டு விலகியவையாக இருக்கின்றன. இவை சூத்திரங்களிலிருந்து வெளியேறும் எத்தனத்தை தொடர்ந்த அவதானிப்பாளர்களால் உணரமுடியும்.

ஆனாலும் சூத்திரத்தனமான படங்களும் வரத்தான் செய்கின்றன. இப்படிச் சூத்திரப் படங்களைத் தருகின்றவர்களாக நட்சத்திர அந்தஸ்துப் பெற்றவர்களேயிருக்கின்றனர். விஜயகாந், சிம்பு, ரஜனி, சத்தியராஜ், அர்ஜுன், விஜய் போன்றோர் அடிதடி, ஆட்டம், விசர்த்தனமான பகிடிகள் என கோமாளித்தனமான படங்களைத் தருவதில் முன்நிற்கிறார்கள். கூட்டம் அதிகமென்றாலும் இவர்களால் நல்ல கதை, நேர்த்தியான நடிப்பு, சினிமாவுக்கான அடிப்படை அம்சங்கள், என்ற தேவையானவற்றை விட்டுவிட்டு காதில் பூச்சூற்றுகிற வேலைகளைச் செய்வதிலேயே இவர்கள் அதிகம் கவனஞ்செலுத்துகிறார்கள்.

இந்தப் பிரபலங்களில் மாறாக்கூத்திலிருந்து விடுபட்டு வேறு திசையில் புதுப்பயணங்களைச் செய்வதென்பது சாதாரண காரியமல்ல. அதுவும் தமிழ்ச்சினிமாச் சூழலில்; தமிழ்ரசிக நிலையில்.

புதிய பயண முயற்சியில் அழகியதீயே, ஷாக், அது, நிலா காலம், குட்டி, தினந்தோறும், விஸ்வ துளசி, 4 ஸ்ருடன்ஸ், குடைக்குள் மழை, M.குமரன், ஆட்டோகிராப், ஆயுத எழுத்து, பிதாமகன், அன்பே சிவம், விருமாண்டி, இயற்கை போன்ற பல படங்கள் வந்துள்ளன.

எத்தனை காலந்தான் ஒரேமாதிரியான ரவுடித்தனத்தையும் கதாநாயகனின் காதல் லீலைகளையும் சாகசச்சண்டைகளையும் பார்த்துக்கொண்டிருக்கமுடியும் என்ற சலிப்பு மெல்ல மெல்ல வளரத் தொடங்கிவிட்டது.

கொஞ்சம் மாறுதலான ரசனைக்கு மனம் தாவுகிறது. எல்லாவற்றிலும் தரத்தையும் வித்தியாசத்தையும் புதுமையையும் விரும்பும் மனதுக்கு ஏற்றமாதிரி 7/G ரெயின்போ காலனியை தந்திருக்கிறார் செல்வராகவன்.

வேறுபட்ட கதை இன்றைய இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதை ஒரு பக்கம் சாட்டுகிறார் செல்வராகவன். பிள்ளைகளைப் பற்றி பெற்றோருக்கும் எதிர்பார்ப்பு, அது சரியும்போது ஏற்படும் துயரம், தவிப்பு, ஆற்றாமை, தடுமாற்றம், வெறுப்பு, கோபம், பரிதாபநிலை என்பதையும் 7/G ரெயின்போ காலனியில் பார்க்கலாம். இது அந்தக் 'காலனி' என்ற குடியிருப்பில் மட்டும் நிகழ்கிறது என்றில்லை. இன்று ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு வீட்டிலும் நிகழும் பிரச்சினைகள், சிக்கல்கள், கதைகளே இந்தப்படத்தின் மையக்கோடு. பல கோடுகளை இணைத்து செல்வராகவன் ஒரு சித்திரத்தை உருவாக்கியிருக்கிறார்.

படத்தின் மையங்களில் ஒரு பாத்திரமான சாதாரண இளைஞனை எந்தப்பிம்பமும் இல்லாமல், அவனை சாகசக்காரனாக்காமல், அழகனாக்காமல், எங்களில் ஒருவனாக காட்டியிருப்பது முதல் வெற்றி, அதேபோல் இன்னொரு மையமான இளைஞி யதார்த்தமாய்ச் சிந்திப்பது, நிதானமாக நடந்துகொள்வது மிக அருமையாக இருக்கிறது.

இரண்டு குடும்பங்களின் இயல்பு, பின்னணி என்பவற்றில் இருவேறு பண்புகள், அணுகுமுறைகள் கொண்ட பாத்திரங்களாக, இருவேறு ஆளுமைகளாக மையப்பாத்திரங்களை கண்டெடுத்திருக்கும் இயக்குநர் வெற்றிபெற்றது இதில்தான். தான் கண்டெடுத்த மைய அடையாளங்களுக்குப் பொருத்தமான களத்தையும் ஏனைய பாத்திரங்களையும் இணைத்து ஒரு மெய் வாழ்வை நம்முன் வைத்துள்ளார்.

ஒரு பக்கத்தில்7/G ரெயின்போ காலனி காதல் படம் போலுள்ளது. மறு பக்கத்தில் அது பெற்றோரின் அந்தரிப்பைச் சொல்கிறது. இன்னொருதிசையில் இன்றைய இளைஞர்களைக் காட்டுகிறது. வேறொரு திசையில் ஆளுமையுடன், நிதானமாகச் செயல்படுகிற பெண்ணை, பெண் ஆளுமையை வெளிப்படுத்துகிறது. இன்னொரு திசையில் மரணம் பற்றிய விசாரணையை எழுப்புகிறது.



ஒரு கட்டத்தில் மையப்பாத்திரங்களில் ஒன்றான பெண் ஒரு விபத்தில் சிக்கி இறந்துவிடுகிறாள். இந்த இறப்பைத்தாங்கமுடியாத இன்னொரு மையமான ஆண் தான் சாவதற்காக முயற்சிக்கும்போதெல்லாம் சாகமுடியாமல் போவது - சாவு கடந்துபோவது சாவு பற்றிய விசாரணையைத் தருகிறது.

ஒரு நல்ல படைப்பு பன்முகத்தில் பரிமாணம் கொண்டிருக்கும் ஒரு வானவில்லைப்போல பல வண்ணங்கள்கொண்ட ஒரு வானவில்தான் 7/G ரெயின்போ காலனி. சொல்வதற்கும் அனுபவிப்பதற்கும் மீட்டுவதற்கும் நிறையவுள்ள ஒரு சினிமா பலவீனமான அம்சங்கள் குறைவாகவும் பலமான அடையாளங்கள் கூடுதலாகவும் உள்ள படம்.

குறிப்பாக படத்தின் இறுதிக் காட்சியில் பத்துநிமிடங்கள் வீண்.

அதேபோல முன்தொடக்கம் சங்கரின் 'போய்ஸ்' படத்தை நினைவூட்டுகிறது. இறுதிக்காட்சிகள் மூன்றாம் பிறையை நினைவூட்டுகிறது.

ஆனாலும்7/G ரெயின்போ காலனி வெற்றியை நோக்கிய ஒரு காலடிதான்.

**ஆரதி**

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை,கிளிநொச்சி.

*பாவலா!*

*எமது மாவட்டத்தை கடுமையாக வரட்சி தாக்கியது. தற்போது வெள்ளம் தாக்கியுள்ளது. எந்த நிவாரணம் முதலில் கிடைக்கும்.?*


*க.குணா,*
*அடம்பன்.*

அவசரப்படவேண்டாம், புயல் தாக்குமென்றும் கூறுகிறார்கள் அதுவும் முடியட்டும் பார்க்கலாம்... அது சரி அரச திறைசேரிக்கே யாராவது நிவாரணம் வழங்க வேண்டிய நிலையிருக்கேக்கை எங்களுக்கு நிவாரணம் கிடைக்குமா என்பது கேள்வியே...! யாராவது ஒரு அரசசார்பற்ற நிறுவனம் நிவாரணம் என்ற பெயரில் எதனையாவது தந்து பெருமைப்பட்டுக் கொள்ளாமலா இருப்பார்கள்...?

*அன்பின் பாவலரே!*

*இனி பலஸ்தீ-*

# பாவலன் பதில்கள்



*னத்தின் நிலை?*

*சி.மதி,*
*வவுனியா.*

யாசிர் அரபாத் இதனை எழுதும் வரை உயிருடன்தான் இருக்கிறார். எல்லோரும் அவருக்கு சமாதியை அவர் உயிருடன் இருக்கும் போதே கட்டத்துடிப்பதுதான் வேதனை!

*பெண்களுக்கெதிரான வன்முறைகள் எப்போது ஒழிக்கப்படும்.*

*ச.சுமன்,*
*திருமுறிகண்டி.*

உண்மையான சமதர்ம ஆட்சி உலகில் ஏற்படும்போது (சாத்தியமானதாக எதையாவது கூறுங்கள் என்கிறீர்களா?

*பாவலரே!*

*தென்னிலங்கை பெரும்பான்மை ஊடகங்கள் இனவாதத்தை தோற்றுவிக்கும் வகையில் செய்தி வெளியிடுகின்றனவே?*

*சாரங்கன்,*
*புதுக்குடியிருப்பு.*

அவை பாரிசவாதத்தால் பீடிக்கப்பட்ட ஊடகங்கள். இனவாதத்தை வைத்தே பிழைப்பு நடத்துகின்றன.

*எனது மகன் பாடசாலையில் குழப்படி என வகுப்பாசிரியர் கூறுகிறார் என்ன செய்யலாம் பாவலா?*

*விஜி,*
*பரந்தன்.*

குழப்படியா, குறும்பா என்பதை முதலில் தீர்மானியுங்கள். குழப்படியை அங்கீகரியுங்கள் அடங்கிவிடும், குறும்பை ரசியுங்கள் இரண்டுமே இவரது இயல்புதான்.

*பாவலரே!*

*இன்றைய சினிமா சமூகத்தில் தோற்றுவிப்பது எதை?*

*பாலகுமார்,*
*வவுனியா.*

கனவுலகத்தை மட்டுமே...!

*வணக்கம் பாவலா!*

*எமது பகுதியில் அரிசி விலை உயர்வு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?*

*பிரியா,*
*முல்லைத்தீவு.*

அரிசிவிலை உயர்கிறது ஆனால் விவசாயியின் வாழ்வுயரவில்லை!

*பாவலரே!*

*எமது இளைய சமூகத்தின் எதிர்காலம் எவ்வாறு அமையும்?*

*தர்சிகா,*
*திருவையாறு.*

ஜோசியம் பார்த்து சினிமா பார்த்து முன்னேறமுடியாது. உழைத்தால் உயரலாம்.

*பாவலா!*

*உண்மையில் சனாதிபதித் தேர்தல் எப்போது நடை பெறும்?*

*சுஜீபன்,*
*கோணாவில்.*

தற்போதைக்கு சனாதிபதி விரும்பும் போது.

*பாவலரே!*

*2007 உலகக்கிண்ணத்தை கைப்பற்றும் முரளியின் கனவு பலிக்குமா?*

*வதனி,*
*இரத்தினபுரம்.*

கனவுகள் பலிப்பதில்லை... முயற்சியே பயனளிக்கும்.

*அன்பின் பாவலரே!*

*தீபாவளியன்று மதுக் கடைகளில் வியாபாரம் அமோகமாம்?*

*விஜயகுமார்,*
*வற்றாப்பளை.*

மதுவில் மயங்கிக் கிடப்பதே தீபாவளி திருநாள் லட்சியம் எனக் கருதுகிறார்கள் போலும்...

*பாவலா!*

*சனாதிபதி தேர்தலில் ஜோர்ஜ் புஷ் வெற்றி பெற்றுள்ளாரே?*

*காந்தன்,*
*முல்லைத்தீவு.*

பாவம் உலகம்....!

*அன்பின் பாவலரே!*

*தங்களுக்கு பிடித்த அர்த்தமுள்ள கவிவரிகள் எவை?*

*வேணு,*
*யாழ்ப்பாணம்.*

அக்கினி குஞ்சொன்று
கண்டேன்-அதை
அங்கோர் காட்டிலோர்
பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு-தழல்
வீரத்தில் குஞ்சொன்றும் மூப்
பென்றும் உண்டோ?...

---




"என்ன தீபாவளியெல்லாம் எப்பிடிப்போச்சு."

"அ...நாங்கள் தீபாவளி கொண்டாடுறதில்லை. அது... எங்கட விழா இல்லத்தானே" "நீங்க வேதமோ...சைவமோ தீபாவளி ஒருசமயவிழா இல்லை. கொண்டாடலாமே."


"என்ன விசர்க்கதை பறையிறாய் அது நரகாசுரனை அழிச்ச நாளெல்லோ..."

"அதுதான் நரகம் எண்ட அசுரனை அழிக்கிறநாள். அந்த நாளயில படிப்பறிவு எல்லாச் சனத்துக்குமில்ல. அதுகள இப்பிடி ஏதும் கதையளச்சொல்லி சாமியச்சாட்டி பூதத்தச்சாட்டித்தான் ஏதும் செய்விக்கலாம். ஐப்பசி மாதம் வெயில்காலத்துக்கும் மழைகாலத்துக்குமான தொடர்பு மாதம் முதல் மழை, புதுவெள்ளம். கோடையில கண்ட இடமும் கிடந்த குப்பை கூழம், நரகம் எல்லாத்தையும் அள்ளிக் கொண்டு எல்லா இடமும் வெள்ளம் பாயும். கிருமியள் பெருகி வீடுகளுக்கயும் வரும், நோயளும் வயிற்றோட்டம், காய்ச்சல், சிரங்கு எண்டுவரும். அப்ப இந்த ஊரைக்கெடுக்கிற நரகத்தை அசுரனாக்கி அவனை அழிக்க இந்த நாளைக் கொண்டாடுறது வழக்கம். எல்லாரும் எல்லாவீடும் ஒரேசமயத்தில சுத்தம்செய்து அழுக்குத்துணிகளை அகற்றி சுத்தமாக குளிச்சு, பட்டாசு கொழுத்தி (கந்தகம்), நல்ல உணவுகளை உண்டு, உடல் உளநலத்தோடு கிருமியொழிப்புச் செய்யிறம். இதை விட்டுட்டு இந்த வீட்ட இண்டைக்கு சுத்திகரிச்சா கிருமி அந்த வீட்டில போய்நிற்கும். அவை நாளைக்கு கழுவிமருந்தடிக்க மற்ற வீட்டில போய் நிக்கும். ஒரேயடியா முழுவீடும் ஒரே நாள்ள சுத்தம் பண்ணினா, கிருமி ஒழியும். அதோட அண்டைக்கு அமாவாசை. இரவிலும் நிறைய தீபங்களை ஏற்றி வைக்கிறதால விசப்பூச்சி பொட்டுகளும் தூரப்போயிரும். 'நரகாசுரன்' எண்டது குறியீடு 'கிருஷ்ணம்' எண்டால் மழை மேகம். அழுக்குகளை மழைமேகம் அழிககிறகாலம் (தீபாவளி) ஐப்பசி அமாவாசை. இதுக்கு ஏன்ராப்பா சமயச்சாயம் பூசுறியள்.

* * *

---

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -94



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் -94

........................................
........................................
........................................
........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -93



சு.செல்வி,
பரந்தன்.

### பரிசுக்குரிய வரிகள்

*சிறகடித்து பறந்திடும் சிட்டுக்களே*
*சிரிப்புடனே அணிவகுத்து வாரீர்*
*ஏற்றமான கல்வியை நீவீர் கற்றே*
*ஏற்றிடுவீர் புலிக்கொடியை ஈழமதில்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*நெடுந்தூரம் நடையாக பயணித்து,*
*பள்ளியிலே கருத்துடனே கல்வி கற்று,*
*களங்கமற்று உம் வாழ்வை உயர்த்தியே*
*நம் தேசத்தின் விடிவிற்காய் உழைத்திடுவீர்கள்.*

ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*அன்னைத்தமிழுக்கு அரியணை இல்லையன்றோ*
*அண்ணன்மார் போய்வந்த பாதையில் அணிசேர்கின்றீர்*
*எமது தானைத்தலைவனின் ஆணை சுட்டுவரையில்*
*அணையாத ஒளிவிளக்காய் கல்வியைத்தொடருங்கள்.*

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

*ஊரிழந்து உடமையிழந்து*
*ஊட்டிவிடும் உறவிழந்தும்-எம்*
*உள்ளத்தில் உறுதி தளரவில்லையடா*
*நாளைய விடிவிற்காய் நாமும் விரைகின்றோம்.*

ஐ.அருவி,
புதுக்குடியிருப்பு.

*கரிகாலன் படை மீட்ட பூமியடா*
*நாம் கல்வி கற்போம் தோழர்களே வாருங்கடா*
*நாளை நாம் நிம்மதியாய் வாழ- எம்*
*தலைவர் அமைத்திடுவார் தமிழீழமடா.*

தி.யாழரசன்,
கிளிநொச்சி.

*காட்டுப்பாதை என்றாலும்*
*கடினம் இல்லை எமக்கு,*
*நாட்டைக்காக்கும்*
*நல்ல பிரஜை நாங்கள்.*

S.சிவா,
பருத்தித்துறை.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

# ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

## கரைந்து விட்ட வெண்ணிலவு...

காரிருளும் கரைந்து விடும்
காலையிளம் வேளையிலே
காத்திருக்கச் சொல்லிவிட்டு
கலைந்ததெங்கே வெண்முகிலே...

கண்ணான தமிழீழ
மண் மீட்கப் புறப்பட்டு
கண்ணயரா உழைத்து விட்டு
கரைந்த தெங்கே சோதரனே..

கண்ணிவெடி எடுத்து வைத்து
காத்திருந்த உறவுகளை
கண்ணீர் சிந்த விட்டு விட்டு
கரைந்த தெங்கே பூங்குயிலே...

கார்லைப்பொழுதினிலே
கணப்பொழுதில் ஊர்தி ஏறி
கல்லறையில் கண்ணுறங்கும்
காவியத்து நாயகனே- உன்
பாதமதில் மலர் சொரிந்து - உன்
பணி தொடர்வோம்.



வீரப்பிறப்பு
23-05-1983

வீரச்சாவு
08-11-2003

## கப்டன் வேதன்/சுதன்

(நவரட்ணம் மதிகிருஸ்ணாகரன்)

சொ.முகவரி: மாதகல், யாழ்ப்பாணம்.

த.முகவரி: முழங்காவில்
தகவல்: குடும்பத்தினர்

(5263)





வன்னியில் பெய்த மழையினால் பிரதான பாலங்கள் சில உடைந்த நிலையில் புனரமைப்பு செய்யப்படாமல் இருப்பதாலும் வீதியினை மூடி வெள்ளம் பாய்ந்ததினால் மக்களுக்கு பல சிரமங்கள் ஏற்பட்டதை மேலே உள்ள படங்கள் சொல்லுகின்றன.

படங்கள்:-கலாவரன்


FedEx Express®

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

இப்பொழுது உள்நாட்டிலும் வெளிநாட்டின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிடவும் பெறவும் நீங்கள் நாடவேண்டிய ஓரே ஸ்தாபனம்

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(Opposite All Cylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 2227310

E.mail:- thirumurugan @ lycosmall.com.

(சி-10133)

WESTERN UNION®

பணப் பரிமாற்றம்
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் துரிதமாகப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு





மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்

குமரகுரு

உங்கள் இன்றைய தெரிவுக்கு...

புடைவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி

KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.

(சி-10729)

SM Graphics



EXPOAIR

your friend in the skies

எக்ஸ்போ எயார்

வான்வெளியில் உங்கள் நண்பன்

பதிவுகளுக்கு அழையுங்கள்

021-2223891/6297, 0772348888/2349999,
0112372952/953, 0112360290/291.

e-mail- jaffna@expoavi.com
e-mail- reservations@expoavi.com

இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை

C-10120



இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்- IV

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-27 | 12-11-2004 | வெள்ளிக்கிழமை | ஓசை -268


கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-10705)

# நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சன்

# தேசியத் தலைவர் பிரபாகரன் சந்திப்பு

## இரு மணித்தியாலயத்திற்கு மேல் நீடித்த பேச்சுவார்த்தை

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களை நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜோண் பீற்றசன் தலைமையிலான சமாதானத் தூதுக்குழுவினர் நேற்று கிளிநொச்சியில் சந்தித்துப்பேச்சு நடத்தியுள்ளனர். இப்பேச்சுவார்த்தை இரு மணித்தியாலங்களுக்கும் மேல் நீடித்தது.

நேற்றுக்காலை 11 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்தில் ஆரம்பமான இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பாக தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களும், அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். நோர்வே அனுசரணையாளர்கள் சார்பாக நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல் கெய்ம், நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் கெல்கேசன், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கான்ஸ் பிறஸ்கார் ஆகியோர் கலந்து கொண்டனர். இச்சந்திப்பு பிற்பகல் 1.30 மணிவரை (IV ஆம் பக்கம் பார்க்க)



# சந்திரிகா புதிய தகவல் எதையும் கூறிவிடவில்லை

# நாங்கள் தான் புதிய செய்தி ஒன்றினை அனுப்பியுள்ளோம்

## தலைவர் பிரபாகரன் - பீற்றர்சன் சந்திப்புக் குறித்து அன்ரன் பாலசிங்கம்



நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக சந்திரிகா புதிய தகவல் ஒன்றை விடுதலைப்புலிகளுக்கு அனுப்பியிருப்பதாக பத்திரிகைகளில் தகவல்கள் வெளி யாகியிருந்தன. ஆனால், அப்படி விசேடமாக, புதிதாக எந்தத் தகவலும் எமக்குத் தெரிவிக்கப்படவில்லை. அவர் தனது பழைய நிலைப்பாட்டைத் தான் கூறியிருக்கின்றார். அதாவது, எந்த இடைக்கால தீர்வுத் திட்டமும் ஒட்டுமொத்தமான நிரந்தரத் தீர்வின் இணைபிரியாத அங்கமாக அமைய வேண்டும் என்ற கருத்தையேதான் அவர் எங்களிடம் கூறும்படி தெரிவித்திருக்கின்றார். இந்த விடயம் சம்பந்தமாக நீண்ட நேரமாக நாங்கள் பேசினோம். இதன் இறுதியில் நாங்கள் ஒரு செய்தியை சந்திரிகாவிற்கு அனுப்பியிருக்கின்றோம். அந்த செய்தியை இப்போது பத்திரிகையாளர்களிடம் கூறவேண்டாம் என நோர்வே அனுசரணையாளர்கள் எம்மைக் கேட்டிருக்கின்றார்கள். அனுசரணையாளர்கள் சனாதிபதியிடம் அந்தச் செய்தியைத் தெரிவித்து அவரின் முடிவை எங்களிடம் தெரிவித்ததன் பின்னர் அது தொடர்பான எங்களது கருத்தைத் தெரிவிக்கும்படி கூறியிருக்கின்றார்கள். இதுதான் இன்று முக்கியமாக நடைபெற்ற வடயம் என நேற்று தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுக்கும் நோர்வே வெளிவிவகார அமைச்சர்களுக்கும் இடையேயான சந்திப்புக் குறித்து ஊடகவியலாளர் மத்தியில் பேசிய அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலங்சிங்கம் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் அவர் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு என்ன, இந்தப் பேச்சுவார்த்தைகளில் நாம் ஏன் இடைக்கால நிர்வாகசபை பற்றி வலியுறுத்துகின்றோம். அதை ஒரு நிரந்தரத்தீர்வுடன் இணைத்துப் பேசுவதற்கு ஏன் நாங்கள் விரும்பவில்லை என்பன பற்றி அதிகம் கதைத்தோம். குறிப்பாக, நாங்கள் கூறியது என்னவென்றால், நிரந்தரத் தீர்வைப் பற்றி நாங்கள் ஐம்பது வருடமாகப் பேசிக் கொண்டு

(IIIஆம் பக்கம் பார்க்க)

# பாரிஸ் இராணுவ வைத்திய சாலையில் பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் மரணம்

பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத் 75ஆவது வயதில் நேற்று உயிரிழந்துள்ளார்.

நோய் வாய்ப்பட்டிருந்த இவர் மேலதிக சிகிச்சைக்காக பிரான்ஸ் தலைநகரான பரிசில் உள்ள இராணுவ வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அங்கு கோமா நிலையிலிருந்து உயிரிழந்துள்ளார்.

பலஸ்தீன மக்களின் விடுதலைக்காகப் போராடிய போராளி என்ற நிலையிலிருந்து சமாதானத்திற்கான நோபல் பரிசுபெறும் அளவிற்கு உயர்ந்து இறுதியில் இஸ்ரேலுடனான பிணக்கில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இவர் சுமார் இரண்டரை வருட காலம் இஸ்ரேலால் மேற்குக் கரையிலுள்ள தலைமை அலுவலகத்தில் முற்றுகையிடப்பட்ட நிலையில் நோய்வாய்ப்பட்ட இவர் கடந்த மாதம் 29ஆம் திகதி பரிஸ் இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். கடந்த செவ்வாய்க்கிழமை அவரது மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டு நேற்று உயிரிழந்தார்.அரபாத் பலஸ்தீன இராச்சியம் ஒன்றை உருவாக்குவதற்காக 40 ஆண்டுகள் போராடியுள்ளார். 1994ஆம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல்

(IV ஆம் பக்கம் பார்க்க)



## -யசீர் அரபாத்திற்கு-

# தேசியத் தலைவர் சார்பிலும் மக்கள் சார்பிலும் அஞ்சலி

பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக்கா நீண்டகாலமாகத் தலைமை தாங்கி வந்த யசீர் அரபாத் அவர்கள் இறந்ததையிட்டு தமிழ் மக்கள் சார்பாகவும் எமது தேசியத் தலைவர் சார்பாக அமைப்பின் சார்பாகவும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்வதாக தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று சமாதானச் செயலகத்தில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். இது குறித்து அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவிக் கையில் பலஸ்தீன வீடுதலை இயக்கத்துக்கு எங்களது இயக்கம் முழுமையான ஆதரவு கொடுத்துக் கொண்டுடிருக்கிறது. பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு தமிழீழ மக்களும் சரி விடுதலைப்புலிகள் இயக்கமும் சரி

(IV ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### அறிவித்தல்

அப்பன் இரும்புத் தொழிலகம் டிப்போ வீதி கிளிநொச்சி (மாவீரர் துயிலும் இல்ல வீதி) சுருக்கு கேற் மற்றும் சகல விதமான கேற் வகைகள், யன்னல் கிறில் றைஸ் போன்றவை செய்து கொடுக்கப் படும். (சி-10756)

# புலிகளின் குரல் கலை, இலக்கிய போட்டி முடிவுகள் வெளியாகின

(அலுவலக செய்தியாளர்)

புலிகளின் குரலின் 14ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பெற்ற கலை இலக்கியப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. மேற்படி போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கானசான்றிதழ்களும், பரிசில்களும் எதிர்வரும் 20ஆம் திகதியன்று பிற்பகல் 4.00மணிக்கு புலிகளின் குரல் நிறுவன நடுவப் பணியகம் "அமலன் அரங்கில்" நடைபெறவுள்ள வானொசை 14ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வின்போது வழங்கப்படுமெனப் புலிகளின் குரல் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

நாடகம்,சிறுகதை,கவிதை ஆகியவற்றில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் கீழ்வருமாறு

**நாடகம்:-**

01ஆம் இடம் 'மீண்டும் கண் பார்வை வேண்டும்', எழுதியவர்:- வ.ஏழுமலை, அறிவியல் நகரவீதி, பாரதிபுரம், கிளிநொச்சி,2ஆம் இடம் 'ஊமையாகிப்போன உண்மைகள்', எழுதியவர்:-போராளி குயிலினி, தலைமைச் செயலகம் மகளிர், தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழீழம், 3ஆம். இடம் 'வானம் தொடும்வரை', எழுதியவர் சி.கலைப்பிரியா, பழையகமம், முரசுமோட்டை, 3ஆம்இடம்'கறுப்பு ரோஜா, எழுதியவர் திருமதி அற்புதராணி காசிலிங்கம்,இல:95/1, இராஜவீதி திருநெல்வேலி, கோப்பாய்.

**சிறுகதை:-**

01ஆம்இடம் 'நிகழ்காலம்', எழுதியவர்:- வைகை,யாழ் பல் கலைக்கழகம், 2ஆம் இடம் 'ஏன் இப்படிச் செய்தீர்கள்', எழுதியவர்:- போராளி தமிழ்நிலா,மே/பா எஸ். சுந்தரலிங்கம், 07ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு., 3ஆம் இடம் 'தெரிவு',எழுதியவர்:- போராளி செ.புரட்சிகா,மாலதி படையணி,தமிழீழவிடுதலைப்புலிகள், தமிழீழம்.

**கவிதை**

01ஆம் இடம் 'அவனைப் பொழியும் வானம்' எழுதியவர்:- போராளி .வி.ஜெயசீலன்,சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி, தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழம்,2ஆம்இடம் 'இருப்புக்களில் நெருப்பெரிய இனியும் விடோம்', எழுதியவர்:- க.லிங்கராசா,இல:-127,இரத்தினபுரம்,கிளிநொச்சி, 3ஆம் இடம் 'பாதுகாப்பு வலையம்', எழுதியவர்:- போராளி மா.தமிழவள்,நிதித்துறை, தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழீழம். (சோ.கு)

## தென்மராட்சி மாவீரர் பெற்றோரை கௌரவிக்க சிறப்பான ஏற்பாடு

தென்மராட்சிப் பிரதேசத்தில் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்க பிரதேச வாரியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி என மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டு பொது அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், வணிகர் மன்றங்கள், தேசிய எழுச்சிப் பேரவை, இந்து ஆலய பரிபாலன சபை போன்ற அமைப்புக்களே சிறப்பான முறையில் ஏற்பாடுகளை செய்து வருவதாக இதன் அமைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## மாவீரர் குடும்பங்களின் சமூக மேம்பாட்டுத் திட்டம்

(தென்மராட்சி)

கைதடிப் பிரதேசத்தில் மாவீரர் குடும்ப சமூக மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பெற்றுள்ளது.

இத்திட்டத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மாவீரர்களின் குடும்பங்களின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டே அவர்களின் அடிப்படை கட்டுமானங்கள் முதல் கல்வி வசதிகள் வரை செய்து கொடுக்கப் படவுள்ளதாகத் தெரிய வருகிறது. இதன் முதற் கட்டமாக ஐந்து குடும்பங்கள் இந்த உதவியைப் பெற இருப்பதாக தெரிய வருகின்றது.(28)

## திருத்தம்

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சட்டக் கல்லூரி திறப்புவிழா தொடர்பாக நேற்று ஈழநாதம் நாளேட்டில் இடம்பெற்ற செய்தியில் பொதுச் சுடர் ஏற்றியோர் தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி, யாழ். மாவட்ட சட்டத்தரணி கள் சங்கத்தலைவர் செல்வி. அபிமன்னசிங்கம் என இடம்பெற் றுள்ளது. ஆனால் இந்த நிகழ்ச்சி யில் பொதுச்சுடர் ஏற்றியவர் தமிழீழ மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன்.தியாகம் ஆவார். மங்கல விளக்கினை தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினியும், யாழ்.சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் செல்வி.அபிமன்ன சிங்கமும் ஏற்றிவைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### மாவீரர் நாளை முன்னிட்டு

## தமிழ் மாணவர் ஒன்றியத்தால் வவுனியாவில் ஓவியப் போட்டி

(வவுனியா செய்தியாளர்)

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு வவுனியா மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம், வவுனியா மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே ஓவியப் போட்டி ஒன்றினை நடாத்த வுள்ளது.

மாவீரர்களின் வரலாற்றினையும், செயற்பாடுகளையும் சித்தரித்தல், தமிழர் கலை, பண்பாடு கலாச் சாரம், விழுமியங்களை எடுத்துக் காட்டல், இடப்பெயர்வு, மீள்குடி யேற்றமும், சூழல் பாதுகாப்பும், சிறுவர் உரிமையும்,போர்ச்சூழலில் மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஆகிய தலைப்புக்களில் விரும்பிய இரண்டினைத் தெரிவு செய்து தரம்-10,12 மாணவர்கள் ஓவியம் வரைய வேண்டும்.

இவ்ஓவியப் போட்டி இன்று காலை 9.00 மணிமுதல் 11.00 மணிவரை சகல பாடசாலைகளிலும் நடைபெறும்.இப் போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும் என வவுனியா மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர் (10)

## கசிப்பு விற்பனையாளர் மீது கைதடி அரசியல்துறை நடவடிக்கை

கைதடி, நாவற்குழிப் பிரதேசத்தில் சட்ட விரோதமாக இயங்கி வந்த 10 இற்கும் மேற்பட்ட கசிப்பு விற்பனையாளர் மீது கைதடி பிரதேச அரசியல் துறையினர் எடுத்த கடும் நடவடிக்கையால் இத்தொழிலை மேற்கொண்டு வந்த 10 இற்கும் மேற்பட்டோர் இத்தொழிலைக் கைவிடுவதாகத் தெரிவித்தனர்.


மக்கள் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து இப்பிரதேசப் பொறுப்பாளர் முரளி அவர்கள் இத்தொழிலில் ஈடுபட்டு வந்தவர்களை அழைத்து கசிப்பினால் சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்புக்கள், தீமைகள் குறித்து விளக்கியதுடன் இனி எதிர்வரும் காலங்களில் இப்படிப்பட்ட மக்களை சீரழிக்கும் சாரயம் விற்பனைகளை மேற்கொள்ளக்கூடாது என்றும், சம்பந்தப்பட்டவர்களுக்குஅறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்பிரதேசத்தில் வீடுகளை உடைத்து பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதால் மக்களை விழிப்புடன் இருக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (28)

## பதவியாவில் வைத்தியரின் மனைவி கழுத்து நெரித்துக் கொலை

(கொழும்பு)

பதவியா வைத்திய சாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவரின் மனைவி மர்மமான முறையில் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் மேற்படி வைத்தியர் மதிய உணவுக்காக வீடு வந்தபோது தனது மனைவி நைலோன் கயிறு ஒன்றினால் கழுத்தில் சுருக்கிடப்பட்டு கட்டிலில் கிடக்கக் காணப்பட்டதாக பொலிசாரிடம் தெரிவித்துள்ளார். கொலை செய்யப்பட்டிருப்பவர் அண்மையில் திருமணமான 26 வயது நாளிகா வணிகதுங்க ஆவார்.


## அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவன இணைய மண்டபத்தில் இன்று 12.11.2004 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவிருந்த "மழை நீர் சேகரித்தல்" தொடர்பான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் குறித்த திகதியில் நடைபெறமாட்டாது என்பதனையும், இதற்கான திகதி பின்னர் அறியத் தரப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இ. கணேசபிள்ளை**
தலைவர்
அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்
கிளிநொச்சி மாவட்டம்.

(5268)

## துயர்பகிர்கின்றோம்

### வல்லிபுரம் நாகம்மா

11-11-2004 அன்று இறைபதம் எய்திய நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், நல்லூர் 10ஆம் கட்டை பூநகரியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நாகம்மா அவர்களின் ஆத்ம சந்திக்காக சகோதர சகோதரிகள், மக்கள் பெறாமக்கள், மருமக்கள், மைத்துனர்மார், மைத்துனிமார், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் பிரார்த்திக்கின்றனர்.

**தகவல்:**
**மைத்துனர் ஞானச்செல்வம்**

(சி-5270)

சந்திரிகா புதிய தகவல்...

வருகின்றோம். எத்தனையோ வடிவங்களில் இதைப் பற்றிப் பேசியி ருக்கின்றோம். சமஷ்டி பற்றிப் பேசுவது எல்லாம் புதிய விடயம் அல்ல. ஐம்பது வருடங்களுக்கு முன்னரே இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. அது மட்டுமன்றி, பல்வேறு வடிவங்களில் தீர்வுத்திட்டங்கள் வைக்கப்பட்டு, பேசி ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு, அவை நிராகரிக்கப்பட்டன. இப்போது இறுதியாக நாங்கள் ஒன்றைத்தான் கேட்கின்றோம். அதாவது, எங்களுடைய மக்களுக்கு அவசரமான, மனிதாபிமான வாழ்க்கைப் பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஒரு இடைக்கால ஒழுங்கு ஒன்றைச் செய்து அதன் அடிப்படையில் வெளிநாடுகள் வாக்குறுதி அளித்த நிதி உதவியைப் பெற்று அவசரமாக எங்கள் மக்களுக்கு எதையாவது உருப்படியாகச் செய்ய வேண்டும். இதற்காகவேதான் நாம் ஒரு இடைக்கால நிர்வாக அதிகாரசபையைக் கேட்கின்றோம்.

இந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபையில் சொல்லப்பட்ட சில யோசனைகள் யாப்புக்களில் அடங்காது. அல்லது தனி அரசுக்கான பாதையை அமைக்கின்றது போன்ற கருத்துக்கள் எல்லாம் இருப்பது எங்களுக்குத் தெரியும். ஆனால், அதைப் பற்றி எல்லாம் வந்து பேசுங்கள். இதை நாங்கள் ஒரு திட்டவரைபாக வைத்துள்ளோம். இதுதான் என்று நாங்கள் சொல்லவில்லை. இதை ஒரு அடிப்படையாக வைத்து பேச்சுக்களை ஆரம்பியுங்கள் என்று கேட்கின்றோம். பேச்சுவார்த்தை மேசையில் பேசவேண்டிய விடயங்களை அவர்கள் பத்திரிகையாளர்கள் மூலமும், அவர்களின் நிபுணர்கள் மூலமும் எழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் இந்த விடயங்கள் பற்றி பேசுவதற்குத் தயாராகவே இருக்கின்றோம் என்பது பற்றித் தான் நாங்கள் இவர்களிடம் சொல்லிவிட்டோம்.

ஆனால், அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்றால், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை என்ற வரம்புக்குள் பேசாமல் ஒரு நிரந்தரத் தீர்வுடன் இணைந்ததாக இந்தத் திட்டம் பற்றிப் பேசுவோம், நிரந்தரத் தீர்வைப் பற்றிப் பேசுவோம் என்பவற்றைத்தான் சனாதிபதியின் யோசனை வலியுறுத்துகின்றது. இது பற்றி நீண்ட நேரம் பேசினோம் கடைசியாக எங்களது நிலைப்பாடு என்ன? இந்தச் சமாதானப் பேச்சு வார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான யோசனைகள் ஏதாவது உங்களிடம் இருக்கிறதா? எனக் கேட்டார்கள் நாங்கள் இதுதான் எங்கள் யோசனை எனக் கூறினோம். அதைத் தாங்கள் சனாதிபதியிடம் சொல்லி ஒரு முடிவைக் கூறிகின்றோம் என்று போயிருக்கின்றார்கள் என நேற்றைய சந்திப்புக் குறித்து விளக்கம் ஒன்றை அளித்த அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் அதன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

*** உங்கள் யோசனைகளுக்கான பதில் எப்போது கிடைக்கும்?**

இன்றைய தினமே சந்திரிகாவுடன் பேசி முடிவை எங்களுக்குச் சொல்லுவார்கள். ஏனெனில், நோர்வே வெளியுறவு அமைச்சர் உடனடியாகவே அரபாத்தின் மரணச் சடங்கில் பங்குகொள்ள கெய்ரோவிற்குப் போகின்றார். அதற்கு முன்னர் இது பற்றிப் பேசி எங்களுக்கு முடிவை அறிவிப்பதாகக் கூறியிருக்கின்றார்.

*** இந்திய - இலங்கை சந்திப்பின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் பேச்சு வார்த்தையில் எடுக்கப்படும் எந்த முடிவும் இறுதித் தீர்வின் அங்கமாக இருக்க வேண்டும் எனக் கூறப்பட்டது?**

அதைப் பற்றியும் நாங்கள் சொல்லியிருக்கின்றோம். இந்தியாவுடன் சேர்ந்து அவர்கள் ஒரு கூட்டறிக்கையை விட்டுவிட்டு அதை நாங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்ற கட்டாயம், நிபந்தனை எமக்கு இல்லை. அது இரண்டு அரசாங்கங்கள் மத்தியில் உள்ள கருத்து.

*** சமஷ்டி முறையிலான தீர்விற்கு தேசியத் தலைவர் அவர்கள் உறுதி மொழி அளித்தால் விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபை பற்றி பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று சனாதிபதி கூறியிருக்கின்றார். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

இதில், ஒரு சிக்கலும் இருக்கின்றது. தலைவரது கொள்கைத் திட்டங்கள் - இயக்கத்தினது கொள்கைத்திட்டங்கள் அவரது மாவீரர் தின அறிக்கையில் தெளிவாகச் சொலலப்படுகின்றது. ஆகவே, நீங்கள் ஒவ்வொரு முறையும் அவரின் மாவீரர் தின அறிக்கையை வாசித்துப் பார்த்தால் விளங்கும். அவர் தெளிவாகச் சொல்கின்றார். அதாவது, நாங்கள் எந்தக் காலத்திலும் தமிழ் மக்களின் சுயநிர்ணய அடிப்படையில்தான் எங்களது பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று கேட்கின்றோம். அது அரசியல் ரீதியான தீர்வாக இருந்தால் என்ன, தனி அரசை நிர்மாணிப்பதாக இருந்தால் என்ன? சுயநிர்ணய உரிமை அடிப்படையில்தான்.

ஆனால், அவர் என்ன கூறினார் என்றால், உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழர் தாயகத்தில் ஒரு தன்னாட்சி அதிகாரமுடைய ஒரு சுயாட்சி தரப்பட்டால் அதைப் பரிசீலனை செய்வோம். ஆனால், அதனையும் நிராகரித்தால் நாங்கள் வெளியக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனி அரசை அமைப்பதைத்தான் இறுதி ஆயுதமாகக் கைக்கொள்வோம். ஆகவே, தலைவர் பிரபாகரனின் விளக்கத்திலும் இயக்கத்தின் கொள்கைத் திட்டத்தின்படி உள்ளக வெளியக அம்சங்களைக் கொண்ட சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தான் நாங்கள் எங்களது கொள்கைத் திட்டத்தை வகுத்திருக்கின்றோம்.

அடுத்ததாக, ஒஸ்லோ பிரகடனம் என்று ஒன்று இல்லை. ஆறு சுற்றுப் பேச்சு நடந்தது. அதில் ஒவ்வொரு சுற்றுப் பேச்சின் முடிவிலும் அதன் முடிவுகளைக் கொண்ட பத்திரிகை அறிக்கைகளை வெளியிடுவது வழக்கம். அந்தப் பத்திரிகை அறிக்கையில் நாங்கள் சமஷ்டி அமைப்பு முறையை பரிசீலினை செய்து பார்ப் போம். அதுவும் எங்களது தாயகத்தில் எமது மக்களின் சுயாட்சியின் அடிப்படையில் அதனை ஆராய்ந்து பார்ப்போம் என்று ஒரு வசனம் வருகின்றது. அதை தூக்கிப் பிடித்துக் கொண்டு நாங்கள் தனி அரசுக் கோரிக் கையைக் கைவிட்டோம் என்று வாதாடுவது தவறு. இதனை இப்போது நாங்கள் இவர்களுக்கு விளங்கப்படுத்தியுள்ளோம் அப்படியான வியாக்கியானங்கள் கொடுப்பது தவறு. ஏனென்றால், எங்களது கொள்கைத்திட்டத்தின் அடிப்படையில் உண்மையான கொள்கைத்திட்டம் இதுதான். அதுவும் தலைவர் பிரபாகரன் அவர்களின் மாவீரர் தின அறிக்கையில் வருவதைத்தான் முக்கியமாக எடுக்க வேண்டும்.

***இன்று நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் மூலம் உடனடியாக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கான ஏதேனும் சமிக்ஞைகள், திருப்திகரமான உணர்வுகள் ஏதாவது ஏற்பட்டிருகிறதா?**

இந்த சமிக்ஞைகளை நாங்கள் தான் கொடுக்கிறோம். நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் உள்ளகம், சமஷ்டி, வெளியகம் எல்லாவற்றையும் விடுங்கள். இப்பொழுது எங்கள் மக்களின் பிரச்சினை அவசர மனிதாபிமான வாழ்க்கைப் பிரச்சினை. இதைத் தீர்ப்பதற்கு ஒரு இடைக்கால ஒழுங்கையாவது செய்து தாருங்கள். சர்வதேசம் ஒரு பெரிய நிதியை ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறது. எமது மக்கள் தொடர்ந்தும் பெரும் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நாங்கள் எழுத்து மூலம் கொடுத்த தீர்வுத்திட்டத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு பேச்சை நடத்தி ஒரு முடிவுக்கு வருவோம். பேச்சைத் தொடங்குவோம். இதில் என்ன தவறு இருக்கிறது. இதனைத்தான் நாங்கள் இவர்களிடமும் தெரிவித்தோம். நாங்கள் நிபந்தனை எதனையும் விதிக்கவில்லை. ஒரு திட்டத்தை கொடுத்து அதைப்பற்றிப் பேசுவோம், ஏன் பேசுவோம் என்பதற்கான விளக்கமும் கொடுத்திருக்கிறோம். அத்துடன் மக்களின் ஆணையும் இருக்கிறது. இதற்கு மேலாக நாங்கள் என்ன செய்ய முடியும். நாங்கள் இறுக்கமான நிலையைக் கடைப்பிடிக்கவில்லை. அவர்கள்தான் நிபந்தனைகளைப் போடுகிறார்கள். இப்போது ஒரு நிரந்தரத் தீர்வை வழங்கக்கூடிய ஒரு ஆட்சி அதிகாரம் அரசிடம் இல்லை சந்திரிகாவுக்கு இன்னும் ஒரு வருடம்தான் இருக்கிறது. அதற்குள் யாப்பை மாற்றி அமைத்து ஒரு சமஷ்டி அரசியல் யாப்போ அல்லது சமஷ்டி மாதிரியோ கொண்டு வருவதற்கான வாய்ப்பும் அங்கே இல்லை. இவர்கள் எங்களிடம் நிரந்தரத்தீர்வைப் பற்றிப் பேசுவதற்கு என கேட்பதற்குக் காரணம் என்னவென்றால் நிரந்தரத்தீர்வும் கிடையாது. இடைக்காலத் தீர்வும் கிடையாது. வெளிநாடுகள் வாக்குறுதி அளித்த பணத்தை எடுத்து தென்னிலங்கைக்கு வழங்குவது தான் இவர்களது நோக்கம்.

***இம்முறை மாவீரர் தின உரையில் தலைவர் அவர்களால் ஒரு காலக்கெடு ஏதாவது வைக்கப்படுமா?**

தலைவர் என்ன சொல்லப் போகிறர் என்று நான் சொல்லஏலாது அது அவராக யோசித்து இன்றைய புற நிலைகளைப் பற்றி ஆராய்வு செய்து அவர் ஒரு அறிக்கையை விடுவார். அதுவும் 27 ஆம் திகதி வருகிறது. அதனை அவர் என்ன மாதிரி எழுதுவார், எப்படி எழுதுவார் என்பது பற்றி நாங்கள் கருத்துச் சொல்ல முடியாது. ஆனால் இப்படியான யோசனைகளையும் அவர் பரிசீலனை செய்யக்கூடும்.

***இது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

தலைவரது அறிக்கைதான் முக்கியம். அவரது மாவீரர் தின அறிக்கையில்தான் இயக்கத்தின் கொள்கைத்திட்டங்கள் தெளிவாக விளக்கப்படும்.

***போர் நிறுத்த ஒப்பந்தச் செயற்பாடுகள் இப்போதைய நிலையில் எப்படி இருக்கிறது?**

அதில் நிறையப் பிரச்சினைகள் இருக்கிறது. போர் நிறுத்த ஒப்பந்தம் இருந்தாலும் அதில் உள்ள கடப்பாடுகளை அரச படைகள் செம்மையாகக் கடைப்பிடிக்கிறது இல்லை உங்களுக்குத் தெரியும் கடலில் பிரச்சினை இருக்கிறது. மீனவர்கள் தாக்கப்படுகின்றார்கள் சில இடங்களில் மீன்பிடித்தடைகள் இருக்கிறது. மற்றும் இவர்கள் வாக்குறுதி அளித்த மாதிரி இன்னும் பொது இடங்களில் இருந்து இராணுவம் வெளியேறவில்லை. இதனால் பல இலட்சக் கணக்கான மக்கள் தமது வீடுகளுக்கும், கிராமங்களுக்கும் போக முடியாமல் அவலப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே போர் நிறுத்தம் என்ன செய்திருக்கிறது. என்று சொன்னால் ஒரு யுத்தத்தை தடுத்து வைத்துக் கொண்டிருக்கிறதே தவிர அதனால் ஒரு இயல்பு நிலையை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளையோ அல்லது மக்கள் துன்புறுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கான சூழலையோ ஏற்படுத்தவில்லை.

ஆனாலும் நாங்கள் எவ்வளவோ ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளின் மத்தியிலும் பொறுமையாக இருந்து போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகிறோம். அதற்கான காரணம் என்னவொன்றால் நாங்கள் இன்னும் சமாதான முயற்சியில் பற்றுறுதியுடன் இருக்கிறோம் என்பதை உலகத்துக்கு எடுத்துக் காட்டுவதற்காக போர் நிறுத்த உடன்படிக்கையை மீறாமல் பேணிக்கொண்டிருக்கிறோம்.

***சனாதிபதி வெளிநாடுகளுக்குச் செல்கின்ற போது புலிகள் பேச்சு மேசைக்கு வருகிறார்கள் இல்லை என்ற காரணத்தை முன் வைத்திருக்கிறார். இது புலிகள் தான் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கு தடையாக இருக்கிறார்கள் என்ற நிலைப்பாட்டை உருவாக்காதா?**

அப்படியான நோக்கத்துடன் அவர் இதனைச் செய்கிறார். ஆனாலும் நாங்களும் சும்மா இருக்கவில்லை தமிழ்ச்செல்வன் அவர்களின் தலைமையிலான குழு ஒன்று வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று உண்மையான நிலைமையை ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்து விளக்கி இருக்கிறார்கள். அடுத்தது எங்கள் நிலைப்பாட்டில் எந்த விதமான சிக்கலும் இல்லை. நாங்கள் ஒரு இடைக்காலத்துக்கான திட்டத்தை எழுத்தில் கொடுத்து விட்டு இதைப் பற்றிப் பேசுவோம் என்றுதான் கேட்கிறோம். வேறு எதனையும் செய்யவில்லை. பேச்சுக்கு வரமாட்டோம் என்றும் நாங்கள் சொல்லவில்லை. இடைக்கால நிர்வாக சபை பற்றி சந்திரிகாவுடன் பேசுவோம் என்றால் நாங்கள் இப்போதும் பேசத் தயார்.

***பேச்சு நீடித்துக் கொண்டு செல்வதால் யுத்தம் வரும் என மக்கள் கருதுகிறார்கள் இது பற்றி?**

நாங்கள் போர் நிறுத்தத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்து வருவதற்கான காரணமே யுத்தத்தை தவிர்ப்பதற்குத்தான். ஆனாலும் யுத்தத்துக்கான புற நிலையை அரசாங்கம் உருவாக்கி வருகிறது. அதனையும் நாங்கள் நிராகரிக்கக் கூடாது. ஏனென்றால் தொடர்ந்தும் அரசாங்கம் பாதுகாப்புச் செலவீனங்களுக்கான நிதியைப் பெருமளவில் செலவு செய்து வருகிறது. 500 மில்லியன் டொலருக்கும் அதிகமாக வழமையாக செலவிடுகிறார்கள் இராணுவ ஒப்பந்தங்களை செய்ய முயற்சிக்கிறார்கள். ஆயுத தளபாடங்களை வாங்கிக் குவிக்கிறார்கள். படைக்கு ஆட்களை சேர்க்கிறார்கள் இப்படியாகப் போருக்கான தயாரிப்பு வேலைகளை அரசாங்கம் செய்கிறது இது உண்மை. போர் நின்று போய்விடவில்லை அதற்கான ஆயத்தத்தை அரசாங்கம் செய்கிறது. ஆகவே எங்கள் மக்களும், சிங்கள மக்களும் .இந்தப் போரை விரும்பவில்லை. ஆனால் இப்படியே நீடித்துக் கொண்டு போக விடமுடியாது. ஏனென்றால் அதிலும் பெரிய சிக்கல்கள் இருக்கின்றன.

*** எரிபொருள் வணிகம் இலங்கை,இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம்,சேதுசமுத்திரத்திட்டம் போன்றசெயற்பாடுகள் ஊடாக இலங்கையில் இந்தியாவின் செயற்பாடு அதிகரித்து வருகின்ற போக்குக் காணப்படுகிறது. இந்தப் போக்கு இலங்கையின் சமாதான முயற்சியில் ஏதாவது பங்களிப்பை எற்படுத்தும் என நீங்கள் கருதுகிறீர்களா?**

இதில் நாங்கள் ஒரு விடயத்தை மட்டும் இப்போதைக்கு தெளிவாகக் கூறலாம். அதாவது இலங்கை, இந்திய ஒப்பந்தம் தொடர்பாக எங்களது கருத்தை நாங்கள் ஏற்கனவே தெரிவித்து விட்டோம். அதாவது இந்த பாதுகாப்பு ஒப்பந்தம் இப்போதைக்கு செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் இந்த ஒப்பந்தம் செய்யப்பட வேண்டிய புற நிலையும் தோன்றவில்லை. இங்கு ஒரு சமாதான சூழ்நிலையும் இருக்கிறது. மற்றும் இலங்கைக்கு ஒரு அந்நிய ஆக்கிரமிப்பு, அச்சுறுத்தலான சூழ்நிலை ஏற்படவில்லை. அதேவேளை இந்தியா இலங்கைக்கு சில சில உதவிகளைச் செய்வதும் எங்களுக்குத்தெரியும். இராணுவப்பயிற்சி நடக்கிறது. ஆயுத உதவிசெய்கிறார்கள். புலனாய்வு பகிர்வு நடக்கிறது. இப்படியான சில விடயங்களை செய்து வருகிறார்கள். ஆகவே எங்களைப் பொறுத்தவரையி ஒரு ஒப்பந்தம் செய்வது அத அடிப்படையில் சிறிலங்காவிற்கு ஆயுத உதவிகளைச் செய்ய இந்தியா முற்பட்டுள்ளது. என்று சொன்னால் இங்குள்ள எமது இராணுவ சமநிலை நிச்சயமாக பாதிக்கப்படும். இராணுவச் சமநிலைதான் போர்நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையாக உள்ளது. அதுவும் பாதிக்கப்படும். போர் நிறுத்தம் பாதிக்கப்பட்டால் சமாதான முயற்சி பாதிக்கப்படும். ஆகவே இதை நாங்கள் இந்தியாவுக்கு வெளிப்படையாக சொல்லியிருக்கிறோம். சில தமிழ் நாட்டு தலைவர்களும் எங்களின் இந்தப் பிரச்சினையை டில்லியில் போய் கதைத்திருக்கிறார்கள். இதனடிப்படையில் இந்தியா இந்த ஒப்பந்தத்தை செய்ய தாமதித்திருக்கிறது. செய்யமாட்டாது என்று நாங்கள் கூறமுடியாது. ஆனால் தமிழ் மக்களின் உணர்வுகள் இதற்கு எதிராக இருக்கிறது என்பதை இந்திய மத்திய அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தியிருக்கிறோம். இதற்கு மேலாக நாங்கள் எதையும் கூறவிரும்பவில்லை.


***போரும் இல்லை சமாதானமும் இல்லை என்ற சூழல் தொடர்ந்தும் இருப்பதை நீங்கள் அனுமதிப்பீர்களா?**


இப்பொழுது நாங்கள் எதையும் கைவிடவில்லை. நோர்வே அரசாங்கம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.இரண்டு பகுதியிலிருந்தும் புதிய புதிய யோசனைகளை தெரிவித்திருக்கிறோம். எங்களை பொறுத்தவரையில் நாங்கள் பேச்சுக்குத் தயாராகத்தான் இருக்கிறோம். ஆனால் இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம். அதை நாங்கள் முற்றாக இதுவரை கைவிடவில்லை. நோர்வே அரசும் தனது சமாதான முயற்சியை இன்னும் கைவிடவில்லை. இப்படியான சூழ்நிலைதான் இருக்கிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.

***குறிப்பிட்ட அரசாங்கத்தால் நிரந்தர சமாதானத்தை அடைய முடியுமா?**

குறிப்பிட்ட அரசாங்கம் எனும் போது இவ்வரசாங்கம் இரண்டு அல்லது மூன்று பிரதான அரசியல் கட்சிகளைக்கொண்டது. அவர்கள் ஒரு ஒத்த கருத்தைக் கொண்டிருக்க வில்லை. தமிழர்களிற்கு எந்தவொரு அரசியல் அதிகாரத்தையும் பகிர்ந்தளிப்பதை ஜே.வி.பி. எதிர்க் கிறது அவர்கள் தன்னாட்சி உரிமை அடிப்படையில் பேசுவதையும் எதிர்க்கிறார்கள். எவ்வாறு இவ்வரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் பேச்சுக்களை நடாத்தி ஒரு அரசியல் தீர்வைக் காணும் என ஒருவர் எதிர்பார்க்க முடியும். இது சாத்தியமல்ல. (லோ)

## தேசியத் தலைவர் பிரபாகரன் - ஜோண் பீற்றசன் சந்திப்பின்போது...





## ஏறாவூரில் தமிழ் மாணவர்கள் மீது பொலிசார் கண்மூடித்தனமான தாக்குதல்

ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் மீது சிறிலங்கா பொலிசார் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் 23 பேர் காயமடைந்ததாக பாடசாலை மாணவர்கள் தெரிவித்தனர்.

ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய எஸ்.சுந்தரராஜன் என்பவர் பதவி உயர்வு பெற்று சென்றதையடுத்து பதில் அதிபராகக் கடமையாற்றிய ஜி. சபேசன் அவர்களை இடமாற்ற வேண்டாம் அவரை நிரந்தர அதிபராக நியமிக்குமாறு கோரி மாணவர்கள் நேற்று இரண்டாவது நாளாகப் வகுப்பு புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின் போது மாணவர்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட சமயம் வாகனமொன்றில் வந்த பொலிசார் வாகனத்தை நிறுத்திவிட்டு இறங்கி கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியதாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தின் போது மாணவர் ஒருவரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டார். இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்த மூர்த்தியின் கவனத்திற்கு கொண்டுவரப் பட்டது. உடனடியாக அவ்விடம் வந்த பாராளுமன்ற உறுப்பினர் நிலைமைகளை அவதானித்ததுடன் பொலிசார் மேற்கொண்ட அடாவடித்தனமான தாக்குதலையும் கண்டித்தார். அத்துடன் ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்கு சென்று மாணவரை விடுதலை செய்ததோடு ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கவனத்திற்கு விடயத்தை கொண்டுவந்தர். இதேவேளை ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய அதிபரை இடமாற்றம் செய்வதற்கு மட்டக்களப்பு கல்வி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை கைவிடுமாறு கோரி மாணவர்கள் திங்கட்கிழமை முதல் மேற்கொண்டு வந்த பகிஷ்கரிப்பு போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதிபரை உடனடியாக இடமாற்றம் செய்வதில்லையென மாவட்ட கல்வித் திணைக்கள அதிகாரிகள் வழங்கிய உறுதிமொழியினையடுத்து மாணவர்களது போராட்டம் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

## யசீர் அரபாத் பற்றி சில குறிப்புக்கள்

* எகிப்திய வம்சாவழியான அரபாத் 1929 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி பலஸ்தீனத்தின் ஜெருசலேம் நகரில் பிறந்தார்.

* அதிக காலம் எகிப்தில் வாழ்ந்த இவர் எகிப்திலேயே கல்வி கற்றார்.

*பதினேழாவது வயதில் பலஸ்தீனத்தை ஆக்கிரமித்த பிரிட்டிஸ் மற்றும் யூதர்களுக்கெதிரான போராட்டத்தில் இணைந்து கொண்டார்.

* பொறியியலாளராகக் கல்வி கற்றவர்.

*1949 ஆம் ஆண்டு இஸ்ரேலின் முதல் ஆக்கிமிப்பு மேற் கொள்ளப்பட்டபோது இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்ந்த பலஸ்தின இளைஞர்களிடையே 1958 இல் அல்-பாட்டா விடுதலை இயக்கத்தை ஆரம்பித்தார்.

*1964 இல் பலஸ்தீன விடுதலை அமைப்புக்களை இணைத்து ப.எல் ஓ அமைப்பை உருவாக்கினார்.

*1969 இல் ப.எல்.ஓ இன் தலைவரானார்.

*1953 ஆம் ஆண்டு அரபாத் எகிப்திய தலைவருக்கு இரத்தத்தால் எழுதிய கடிதத்தில் " பலஸ்தீனத்தை மறக்க வேண்டாம்" என தெரிவித்துள்ளார். அன்றிலிருந்து ஓர் அரை நூற்றாண்டு காலமாக பலஸ்தீன மக்களின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் வடிவமாகத் திகழ்ந்தவர்.

*அரபாத்தின் தலைமையிலான பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு உலக அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.

*பலஸ்தீனம் சார்பில் அரபாத் ஐ.நா வின் ஜெனீவா கூட்டத் தொடரில் உரையாற்றினார்.
அரபாத் சமாதானப் பேச்சிற்கு தயாரான போது அமெரிக்கா தலையிட்டு இரு தரப்பினரிடமும் ஒரு உடன்பாட்டை ஒஸ்லோ பிரகடனப்படி ஏற்படுத்தி 1993 இல் இஸ்ரேல்- பலஸ்தீன உடன்பாடு கையெழுத்தானது.

*இஸ்ரேல் உடன்பாட்டை முழுமையாக நிறைவேற்றத் தயாராக இருக்கவில்லை.இதனால் உடன்பாடு செயலாக்கம் அடையவில்லை.

*மீண்டும் மக்கள் "இண்டிபாடா" என்ற பாரிய எழுச்சிப் போராட்டங்களை நடத்தினார்.

*அரபாத் ஜெருசலேமை தலைநகராகக் கொண்ட இலட்சியத்தில் இறுதிவரை பற்றுறுதியுடன் இருந்தார்.

## மாவீரர் தின நிகழ்வுகளை சிறப்பாக நடாத்த யாழ்.பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு

தமிழர்களின் வரலாற்றில் பெருவிழாவாகப் போற்றப்படும் மாவீரர் தின நிகழ்வு பல்கலைக் கழகத்தில் சிறப்பாக இடம் பெறவுள்ளது. மண்ணின் விடியலுக்காக, மக்கள் விடுதலைக்காக தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்கள் போற்றப்பட வேண்டியவர்கள், பூசிக்கப்பட வேண்டியவர்கள். தாய் மண்ணை நேசித்து தாய் மண்ணின் விடிவுக்காய் தம் உயிர்களைத் துறந்த உத்தமர்கள். இவர்களை நினைவு கொள்ளும் வகையில் எதிர்வரும் 25,26,27 ஆகிய தினங்களில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நினைவுப் பந்தல் அமைத்து மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைத்து எழுச்சியோடும், உணர்வோடும் மாவீரர்களை நினைவு கூருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதோடு 50 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் தமிழீழ தேசியத் தலைவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு எதிர் வரும் 26 ஆம் திகதி காலை 7.00 மணிக்கு பல்கலைக்கழகத்தில் உள்ள பரமேஸ்வரர் ஆலயத்தில் தமிழீழ தேசியத்தலைவருக்கும், போராளிகளுக்கும் நல்லாசி வேண்டி விசேட அபிஷேக ஆராதனை வழிபாடு செய்வதற்கு பல்கலைக்கழகச் சமூகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு தமிழீழ தேசியத் தலைவருக்கான வெற்றிக் கேடயமும், வாழ்த்துச் செய்தியும் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினரால் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஊடாக தேசியத்தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படவுள்ளது. (36)

## இல.தமிழரின் நலனுக்கு எதிராக இந். செயற்படாது

### பிரதமர் மன்மோகன்சிங்

இலங்கைத் தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிராக இந்தியா செயல்படாது என இந்திய பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள இந்திய இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் தமிழ் மக்களின் நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று இந்திய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை. கோபாலசாமி தெரிவித்த முறைப்பாடு தொடர்பில் கருத்து வெளியிடும் போது இந்திய பிரதமர் இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமாதான முயற்சிகள் தொடரவேண்டும் என்பதில் இந்தியா உறுதியா இருப்பதாகவும், இந்திய இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்தினால் சமாதான முயற்ச்சிகள் பாதிப்படைவதற்கு தாம் இடமளிக்கப் போவதில்லை என்றும் பிரதமர் உறுதியளித்துள் ளதாக வை.கோ தெரிவித்துள்ளார்.

## கிளி.இலிருந்து சென்ற நோர்வேக் குழுவினர் சனாதிபதியை சந்தித்து விபரங்கள் தெரிவிப்பு

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் நேற்றிரவு நாடு திரும்பியுள்ளார்.

நேற்றுக் காலை வன்னிக்கு விஜயம் செய்திருந்த நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட குழவினர் கொழும்பிற்கு சென்று சனாதிபதி சந்திரிகாவை சந்தித்து விடுதலைப்புலிகளுடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் விபரங்களை எடுத்துக் கூறியுள்ளனர். ஆயினும் சனாதிபதியுடன் இடம் பெற்ற சந்திப்பின் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

இவருடன் விஜயம் செய்திருந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசன், விசேட தூதுவர் எரிக் சூல் கெய்மும் இலங்கையில் தங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

### தேசியத்....

முழுமையான ஆதரவு கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அரபாத்தின் இழப்பு பாலஸ்தீன மக்களுக்கு ஒரு பேரிழப்பு அதை நாங்களும் மறுக்கவில்லை. அவர் இக்கட்டான நேரத்தில் காலமாகியதை இட்டு நாங்கள் வருந்துகிறோம். ஆனாலும் பலஸ்தீன விடுதலைப் போராட்டம் தொடர்ந்து நடைபெறவேண்டும் அந்த மக்களுக்கு சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியான நம்பிக்கையுடன் இருக்கிறோம். (லோ)

### பாரிஸ்...

பரிசைப் பெற்றுக் கொண்டார்.

அரபாத்தின் மறைவிற்கு பல நாட்டுத் தலைவர்கள் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித் துள்ளனர். அத்துடன் இன்று கெய் ரோவில் நடைபெறவுள்ள அரபாத் தின் இறுதிக் கிரியையில் பல நாட்டுத் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் நோர்வே யின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனும் கலந்து கொள்ளவுள்ளார். அரபு லீக்கின் தலைமையில் மரணச் சடங்கு கெய்ரோவில் நடைபெறவுள்ளது. பின்னர் அதிபர் அரபாத்தின் பூதவுடல் மேற்குக் கரைப் பிரதேசத்திலுள்ள றமளா நகரில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. அரபாத்தின் உடல் றமளா நகரில் நல்லடக்கம் செய்யப்படுவ தற்கு இஸ்ரேல் அனுமதிக்குமென இஸ் ரேலின் உள்ளக அமைச்சர் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### நோர்வே...

நீடித்தது. நோர்வே தரப்பினர்பிற் பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சியில் இருந்து புறப்பட்டனர். முன்னதாக நேற்றுக்காலை 10.00மணிக்கு விசேட உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தை வந்தடைந்த நோர்வே அனுசரணையாளர்களை அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த சுடர்மணி, செல்வி ஆகியோர் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.